# A Text Book

OF

# TAMIL GRAMMAR

## Book IV

BY

Vidvan T. VISAGAPPERUMAL IYER

# தமிழ் இலக்கணம்

நான்காம் புஸ்தகம்

திருத்தணிகை - விசாகப் பெருமாளையர்

இயற்றியது.

T17559
R005K03
T.17559

LLAN & CO., LIMITED,
IBAY, CALCUTTA AND LONDON.
1921

*All Rights Reserved*

Price, 12 Annas] [விலை, 12 அணா

# MACMILLAN'S EASY SELECTIONS FROM TAMIL POETRY.

## பாலநீதிச் செய்யுள் திரட்டு.

**ஒள**வையார் அதிவீர ராமபாண்டியன் முதலிய முற்கால வித்வ சிரோமணிகள் எழுதிவைத்த அருமையான நீதிநூல்கள், சிறுவர்கள் மனத்திலும் பதியக் கூடியவாறு தெளிவான எளியநடையில் மனப்பாடம் பண்ணுவதற்கு அனுகூலமான செய்யுள் வடிவில் அமைந்திருக்கின்றன. ஆதரிப்பாரில்லாமல் அந்நூல்கள் இப்பொழுது பாடசாலைகளில் அதிகமாகப் போதிக்கப்படவில்லை. தங்களைக் கல்விமான்கள் என்று மதித்திருக்கும் பல தமிழ்மக்கள் கூடத் தங்கள் முன்னோர்களுக்கு அரிச்சுவடிப் பாடமான இவ்வரிய நூல்களைக் கண்ணாலும் கண்டறியாதவர்களா யிருக்கிறார்கள். இது தமிழ்நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் மிகவும் மானக்கேடான விஷயமன்றோ? இக் குறைபாட்டை நிவர்த்திக்கக் கருதி அவ்வரிய நீதிநூல்களைச் சிறுவர்களும் பிறரும் படிப்படியாய்க் கற்று அறிந்து கொள்வதற் கேற்றவாறு பல பகுதிகளாகப் பிரித்து, பதவுரையுடன், நல்ல காகிதத்தில் தெளிவான எழுத்துகளால் அழகாக அச்சிடலாயிற்று. அந் நீதிநூல்களின் பகுப்பும் அடக்கமும் வருமாறு:—

| | அ. | பை. |
|---|---|---|
| **முதற்படி. (ஜூனியர்-Junior)** | | |
| பகுதி 1. உலகநீதி, ஆத்திசூடி ... ... (2-வது வகுப்புக்கு ஏற்றது). | 1 | 6 |
| ,, 2. கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை ... (3-வது வகுப்புக்கு ஏற்றது). | 2 | 0 |
| ,, 3. வாக்குண்டாம், நல்வழி ... ... (4-வது வகுப்புக்கு ஏற்றது). | 2 | 0 |
| **இடைப்படி (இன்டர்மீடியேட்-Intermediate)** | | |
| பகுதி 1. நீதிவெண்பா ... ... ... (5-வது வகுப்புக்கு ஏற்றது). | 2 | 6 |
| ,, 2. நன்னெறி, இனிது 40, இன்னா 40 ... (6-வது வகுப்புக்கும் 1-ம் பாரத்துக்கும் ஏற்றது). | 3 | 0 |
| **உயர்படி (ஸீனியர் - Senior)** | | |
| பகுதி 1. முதுமொழிக்காஞ்சி, நீதிநெறி விளக்கம்... (7-வது வகுப்புக்கும் 2-ம் பாரத்துக்கும் ஏற்றது). | 3 | 6 |
| ,, 2. திரிகடுகம், நான்மணிக்கடிகை ... ... (8-வது வகுப்புக்கும் 3-ம் பாரத்துக்கும் ஏற்றது). | 5 | 0 |

# A Text Book

OF

# TAMIL GRAMMAR

## Book IV

# தமிழ் இலக்கணம்

நான்காம் புஸ்தகம்.


திருத்தணிகை - விசாகப்பெருமாளையர்

இயற்றியது.



மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிடெட்

சென்னை, பம்பாய், கல்கத்தா, லண்டன்.

1921.



[ரிஜிஸ்தர் செய்தது.]

PRINTED AT THE
"COMMERCIAL PRESS"
MADRAS, S. E.

# முகவுரை.

இந் நூலாசிரியர் விசாகப்பெருமாளையர். இவரும் சரவணப் பெருமாளையரும் சகோதரர்கள்; திருத்தணிகைப் புராணம் பாடிய கச்சியப்ப முனிவர் மாணவரான கந்தப்பையர் என்பவருடைய குமாரர்கள்; சங்கம குலத்தவர்கள்; வீரசைவ மதத்தினர்கள்; பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தவர்கள். இவர்கள் பிறப்பிடம் திருத்தணிகைப் பதி.

இவர்கள் இருவரும், அக்காலத்தில் பிரபல வித்வசிகாமணியாய் விளங்கிச் சென்னையில் வசித்து வந்த முகவை - இராமானுஜகவிராயரை அடுத்துத் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபறக் கற்றுச் சிறந்த தமிழ்ப்புலவர்க ளாயினர். இவர்களில் இளையரான சரவணப் பெருமாளையர் துரைத்தன கலாசாலையில் தமிழ்ப் போதகாசிரியராக இருந்தார். சகோதரர்கள் இருவரும் தமிழ்மொழி வளர்ச்சியில் மிகுந்த கருத்துடையராய்ப் பல நூல்களுக்கு உரையும் வசன ரூபமான இலக்கண நூல்களும் செய்து தமிழுலகத்தைக் கடமைப்படுத்தினவர்கள். திருக்குறள், நைடதம், பிரபுலிங்கலீலை, நன்னூல் இவற்றிற்கு உரையும், ஐந்திலக்கணங்களையும் சுருக்கமாக வினாவிடைப் போங்கில் தெளிவுபெற எழுதிய இலக்கணச் சுருக்க

வினாவிடையும், இவ் விலக்கண நூலும் இவர்கள் எழுதியவை. இவற்றுள் இலக்கிய சம்பந்தமானவை சரவணப் பெருமாளையர் பெயராலும், இலக்கண சம் பந்தமானவை விசாகப் பெருமாளையர் பெயராலும் வெளிவந்தனவாகக் காணப்படுகின்றன.

மழவை - மகாலிங்கையரும், சந்திரசேகர கவி ராஜபண்டிதர் என்பவரும், இவர்களிடத்துக் கல்விகற் றுத் தேர்ந்தவர்கள்.

கல்வி சம்பந்தமான எத்துறையில் எவ்வகை முயற்சி செய்வதாயினும் இலக்கணமாகிய கருவிநூல் உணர்ச்சி இன்றியமையாதென்பதையும், தமிழில் உள்ள புராதன இலக்கண நூல்கள் தம்மளவில் குறை பாடில்லனவாயினும் செய்யுள் நடையில் அமைந்திருத் தல் முதலிய சில இடர்ப்பாடுகளினால் எளிதிலே கற் றறிவதற்கு ஏற்றவையல்ல என்பதையும் நன்குணர்ந்து இவ் விலக்கணநூல் செய்யப்பட்டதாகப் பழைய பிரதியின் முகவுரை கூறுகின்றது. சற்றேறக்குறைய அறுபது வருஷங்களுக்கு முன் இயற்றப்பட்ட இவ் விலக்கண நூலில் முதன் முதலாகக் காட்டப்பட்ட தமிழிலக்கணப் பாகுபாடே இஞ்ஞான்றைப் பிரபல வித்வ சிரேஷ்டர்களாற் சிறந்ததெனப் பாராட்டிக் கையாளப்பட்டு வருகிறதென்றால் இந்நூலின் அரு மையைச் சொல்லவும் வேண்டுமோ? பேரிலக்கணங் களைக் கற்றுணர்ந்த பண்டிதர்களும் தமக்கு அரியவாய பல இலக்கண நுட்பங்கள் இந்நூலில் எளியவாகக் கிடக்கக் காண்பார்கள் என்பது மிகையாகாது. தென்

ளத் தெளிந்த இவ்விலக்கண நூலை நன்கு கற்றுணர்ந்த மாணவர்களுக்கு நன்னூல் நடுக்கந் தராது; நன்னூலாகவே விளங்கும்.

இந் நூலின் பழைய பதிப்பில் ஆக்கியோரால் 'பாயிரம்' என எழுதப்பட்ட முகவுரை வருமாறு:

"இலக்கண இலக்கிய கணித பூகோள ககோளாதி நூல்களையெல்லாம், இக்காலத்து இத்தேசத்தை ஆளுகின்ற இங்கிலீஷ்காரர்களும், அவர்கள் வசிக்கும் கண்டத்திலுள்ள ஏனையோர்களும், செய்யுள்களிலே இயற்றிக் கற்பிப்பதை விட்டு, வசனங்களிலே தெளிவுற இயற்றிச் சிறுவர்க்குக் கற்பித்துக்கொண்டு வருகின்றனர். அதனால் அக் கண்டத்தில் வாழும் சிறுவர்கள் சில நாட்களிலே பல நூல்களைக் கற்றுப் பல விஷயங்களையும் உணர்ந்து பல தொழில்களையும் இயற்றும் திறமுடையராகின்றனர்.

"இத்தேசத்தார் அந் நூல்களையெல்லாம் செய்யுளிலே செய்து அவற்றிற்குத் திரிசொற்களால் உரையியற்றிச் சிறுவர்க்குக் கற்பித்துவருகின்றனர். இவ்வாறு செய்யுளில் இயற்றப்பட்ட நூல்கள், நிகண்டு முதலிய கருவி நூல்களைக் கற்றன்றிக் கற்கப்படாவாம். ஆகவே, அவற்றுள் ஒரு நூலைக் கற்பதற்கு நெடுநாள் செல்லுகின்றது. செல்லவே, பல நூல்களைக் கற்றுணர்ந்து எத்தொழில்களையுஞ் செய்யத்தக்கவர்களாவது அரிதாம்.

"இதனால் இந்நாட்டுச் சிறுவர்கள் தங்கள் வாழ்நாட்கள் வீணேபடாமற் சில நாட்களில் அப் பல நூல்களையும் கற்றறிந்து எத் தொழில்களையும் செய்யத்தக்க வல்லமை அடைவதற்கு, அந்நூல்களை யெல்லாம் உலக வழக்கியற்

சொற்களால் உரைவசனமாகத் தெளிவுறச் செய்து கல்விச் சாலைகளிலே உபயோக முறும்படி செய்தல் நன்றென்னும் கருத்துக்கொண்டு, தமிழ் கற்கப்புகுவோரும் அவ்வாறுக அந் நூல்களைச் செய்யப் புகுவோரும் தமிழ்நடை நன்குணர்ந்து எழுதுவதற்கு இன்றியமையாக் கருவியாயுள்ள எழுத்திலக் கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் யாவரும் எளிதின் உணரும்படி கடினசந்தியின்றி உரைவசனமாகப் **பாலபோத விலக்கணம்** என்னும் பெயரினல் இந்நூல் செய்யப்பட்ட தென அறிக.''

## உள்ளுறை.

பங்கி.


| | | |
|---|---|---|
| I. எழுத்ததிகாரம். | ... ... | (1-43) |
| 1. எழுத்தின் பெயரியல் | ... | 1-17 |
| 2. எழுத்தின் அளபியல் | ... | 18-25 |
| 3. எழுத்தின் நிலையியல் | ... | 26-40 |
| 4. எழுத்தின் ஒழிபியல் | ... | 41-43 |
| II. சொல்லதிகாரம். | ... ... | (44-236) |
| 1. பெயர்ச் சொல்லியல் | ... | 44-122 |
| 2. வினைச் சொல்லியல் | ... | 123-194 |
| 3. இடைச் சொல்லியல் | ... | 195-222 |
| 4. உரிச் சொல்லியல் | ... | 223-236 |
| III. புணர்ச்சியதிகாரம். | ... ... | (237-345) |
| 1. உயிரீற்றுப் புணரியல் | ... | 237-289 |
| 2. மெய்யீற்றுப் புணரியல் | ... | 290-317 |
| 3. பொதுப் புணரியல் | ... | 318-331 |
| 4. வடவெழுத்துப் புணரியல் | | 332-345 |
| IV. தொடர்மொழியதிகாரம் | ... | (346-418) |
| 1. தொகைநிலைத்தொடரியல் | | 346-361 |
| 2. தொகாநிலைத்தொடரியல் | ... | 362-364 |
| 3. பிரயோகவியல் | ... | 365-378 |
| 4. ஒழிபியல் | ... ... | 379-418 |

# தமிழ் இலக்கணம்

## I. எழுத்ததிகாரம்.

### 1. எழுத்தின் பெயரியல்.

1. இலக்கணநூலாவது, நூல் வழக்கத்தையும், உயர்ந்தோர் வழக்கத்தையும் நன்ருக அறிந்து எழுதுவதற்கும் பேசுவதற்குங் கருவியாக இருக்கின்ற நூலாம்.

2. இந்நூல்—எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், புணர்ச்சியதிகாரம், தொடர்மொழியதிகாரம் என நான்கு அதிகாரங்களாக வகுக்கப்படும்.

3. அவைகளில் எழுத்ததிகாரம், எழுத்தின் பெயரியல், எழுத்தின் அளபியல், எழுத்தின் நிலையியல், எழுத்தின் ஓழிபியல் என நான்கு இயல்களாக வகுக்கப்படும்.

4. எழுத்தாவது சொல்லுக்கு முதற் காரணமாயுள்ளது.

5. அது, முதலெழுத்தென்றும், சார்பெழுத்தென்றும் இரண்டு வகைப்படும்.

6. முதலெழுத்துகள்,—உயிரெழுத்தும், மெய்யெழுத்தும் ஆம்.

7. உயிரெழுத்துகள்—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் இப் பன்னிரண்டு எழுத்துகளுமாம்.

8. இவைகளில்—அ, இ, உ, எ, ஒ இவ் வைந்தும் குற்றெழுத்துகளாம்.

9. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவ் வேழும் நெட்டெழுத்துகளாம்.

10. மெய்யெழுத்துகள்—க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் இப்பதினெட்டு எழுத்துகளுமாம்.

11. இவைகளில்—க, ச, ட, த, ப, ற என்கின்ற ஆறும் வல்லெழுத்துகளாம்.

12. ங, ஞ, ண, ந, ம, ன என்கின்ற ஆறும் மெல்லெழுத்துகளாம்.

13. ய, ர, ல, வ, ழ, ள என்கின்ற ஆறும் இடையெழுத்துகளாம்.

14. சார்பெழுத்துகள்—ஆய்தவெழுத்தும், உயிர்மெய்யெழுத்தும் ஆம்.

15. அவைகளில்—ஆய்த வெழுத்து, குற்றெழுத்திற்கும், உயிர்மெய்வல்லெழுத்திற்கும் நடுவே மூன்று புள்ளி வடிவாய் வரும் ஓரெழுத்தாம்.

உதாரணம்.—எஃகு, கஃசு, அஃது, பஃறி எனவரும்.

16. உயிர்மெய்யெழுத்துகள்—பன்னிரண்டு உயிரும், பதினெட்டு மெய்களின் மேலுந் தனித்தனி ஏறி வருதலாலாகிய இருநூற்றுப் பதினாறும்.

அவை, க, கா, கி, கீ, முதலியவையாம்.

மேற்கூறப்பட்ட முதலுஞ்சார்புமாகிய இருநூற்று நாற்பத்தே மெழுத்துகளும், தமிழ் நெடுங்கணக்கில் வழங்கிவருதல் காண்க.

17. சமஸ்கிருத எழுத்துகளுள், ஜ, ஶ, ஷ, ஸ, ஹ, க்ஷ முதலிய சில எழுத்துகள் தமிழினுள் உலக வழக்கில் வழங்கி வரும். அவை வருமாறு: புஜம், பாஶம், மேஷம், வாஸம், மஹாராஜன், பக்ஷம்—என வரும்.

சமஸ்கிருத எழுத்துகள், செய்யுளில் வருங்கால் திரிந்து வரும். அவை திரிந்து வருமாறு பின்னர்க் கூறப்படும்.

---

## 2. எழுத்தின் அளபியல்.

18. குற்றெழுத்திற்கு மாத்திரை ஒன்றும்; நெட்டெழுத்திற்கு மாத்திரை இரண்டாம்.

மெய் யெழுத்திற்கும், ஆய்த வெழுத்திற்கும் தனித்தனி மாத்திரை அரையாம்.

உயிர்மெய்க் குற்றெழுத்திற்கு, ஏறிய உயிரின் அளவாகிய மாத்திரை ஒன்றும்; உயிர்மெய் நெட்டெழுத்திற்கு, ஏறிய உயிரி னளவாகிய மாத்திரை இரண்டாம்.

[ஒரு மாத்திரை என்னுங் காலவளவையாவது, மாந்தருடைய இயல்பாக எழுகின்ற கண்ணிமைப்பொழுது, அல்லது, கைந்நொடிப்பொழுதாம்.]

**19.** உயிரெழுத்துகளிலே, உகரமும், இகரமும் சிலவிடங்களில் அரைமாத்திரை ஒலித்துநிற்கும். அவ்வுகரத்திற்குக் குற்றியலுகரமென்றும், அவ்விகரத்திற்குக் குற்றியலிகரமென்றும் பெயராம்.

குற்றிய லுகரத்திற்கும் குற்றிய லிகரத்திற்கும் தனித்தனி மாத்திரை அரையாம்.

**20.** குற்றிய லுகரமாவது, தனியே வருகிற நெட்டெழுத்துக்குப் பின்னும், இணைந்து வருகிற எல்லாவெழுத்துகளுக்குப் பின்னும், வல்லின மெய்களில் ஏறி நிற்கும் உகரமாம்.

அவ்வுகரம் - நெடிற்றொடர் குற்றியலுகரம், ஆய்தத்தொடர் குற்றிய லுகரம், உயிர்த்தொடர் குற்றிய லுகரம், வன்றொடர் குற்றியலுகரம், மென்றொடர் குற்றியலுகரம், இடைத்தொடர் குற்றியலுகரம் என அறுவகைப்படும்.

| | | | |
|---|---|---|---|
| உ - ம்.— | நாகு | ஆடு | ஆறு. |
| | எஃகு | கஃசு | அஃது. |
| | வரகு | பலாசு | அரிது. |
| | கொக்கு | கச்சு | பட்டு. |
| | சங்கு | வண்டு | பந்து. |
| | அல்கு | எய்து | தெள்கு. |

அன்றியும், நுந்தை என்னுஞ் சொல்லிலே நகர மெய்யிலிருக்கிற உகரமுங் குற்றியலுகரமெனப்படும்.

**21.** தனிக் குற்றெழுத்திற்குப் பின் வல்லினமெய்களில் ஏறி நிற்கும் உகரமும்; குற்றெழுத்திற்குப் பின்னும் நெட்டெழுத்திற்குப் பின்னும் ஆய்தமும் வல்

வினமெய்யும் ஒழிய இணைந்து வரும் ஏனைய எழுத்துகளுக்குப் பின்னும் மெல்லினமெய்களிலும், இடையின மெய்களிலும் ஏறி நிற்கும் உகரமும் முற்றிய லுகரமாமென அறிக.

உ-ம்.—நகு, கொசு, கடு, அது, கணு, திரு, வழு, பூணு, வாரு, உருமு, கதவு.

22. குற்றிய லிகரமாவது, யகரம் வந்து புணருமிடத்துக் குற்றிய லுகரந் திரிந்த இகரமாம்.

உ - ம்.—நாகியாது, எஃகியாது, வரகியாது, கொக்கியாது, சங்கியாது, அல்கியாது.

அன்றியும், மியா என்னும் அசைச் சொல்லிலே மகரத்தை யூர்ந்துநிற்கும் இகரமும், குற்றியலிகரம் எனப்படும்.

23. உயிரெழுத்துகளிலும் மெய்யெழுத்துகளிலும் சிலசில, தம் மாத்திரைகளின் மிகுந்து ஒலித்து வரும். உயிரில் மிகுந்து ஒலித்து வருபவைகளுக்கு உயிரளபெடை யென்றும், மெய்யில் மிகுந்து ஒலித்து வருபவைகளுக்கு ஒற்றளபெடையென்றும் பெயராம்.

24. உயிரளபெடை—உயிரெழுத்துகளிலே நெட்டெழுத்தேழும் ஓசை குறைந்தவிடத்து மொழிக்கு முதலிலாவது, இடையிலாவது, கடையிலாவது, தம் மாத்திரையின் அதிகமாக ஒலித்துநிற்கும்.

எந்த நெட்டெழுத்து நீண்டொலிக்கின்றதோ அதற்கினமான குற்றெழுத்து அதன்பின் அறிகுறியாக எழுதப்படும்.

உ - ம்.—ஆஅடை, ஈஇடு, ஊஉதல், ஏஎடு, ஐஇயம், ஓஒடு, ஔஉவை. அலாஅபு. பலாஅ.

இவ்வுயிரளபெடைக்கு, மாத்திரை மூன்றும்.

25. **ஒற்றளபெடை**—மெய்யெழுத்துகளிலே, ங், ஞ், ண், ந், ம், ன்,வ், ய், ல், ள் என்னும் இப் பத்து மெய் களும், ஆய்தமும் ஓசை குறைந்தவிடத்து மொழிக்கு இடையிலாவது கடையிலாவது தம் மாத்திரையின் அதிகமாக ஒலித்துநிற்கும்.

எந்த மெய்யெழுத்து நீண்டொலிக்கின்றதோ அந்த மெய்யெழுத்தே அதன்பின் அறிகுறியாக எழு தப்படும். இவை, குறிற்கீழும் குறிலிணைக்கீழும் வருமெனக் கொள்க.

உ-ம்.—மங்ங்குல், மஞ்ஞ்சு, கண்ண்டம். பந்ந்து, அம்ம்பு, அன்ன்பு. தெவ்வ்வர், வெய்ய்யர், செல்ல்க, கொள்ள்க, எஃஃகு. அரங்ங்கு, அங்ங்கனிந்த. மடங்ங்கலந்த.

இவ் வொற்றளபெடைக்கு மாத்திரை ஒன்றும்.

---

## 3. எழுத்தின் நிலையியல்.

26. எழுத்தின் நிலை—முதல்நிலை, இறுதிநிலை, இடைநிலை என மூன்று வகைப்படும்.

### [முதல்நிலை]

27. பன்னிரண்டு உயிரெழுத்துகளும், க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ என்னும் ஒன்பது உயிர்மெய்யெ ழுத்துகளும் சொற்களுக்கு முதலில் நிற்கும் எழுத் துகளாம்.

உ-ம்.—அணி, ஆடை, இலை, ஈரல், ஊர்தி, எழு. ஏணி, ஐயம், ஒளி, ஓடு, ஔவை. கரி, சரி, தலை, நன்மை, பந்து, மணி, வயல், யமன், ஞமலி.

இவ்வொன்பது மெய்களுள் வல்லினமெய், க, ச, த, ப என்னும் நான்கெனவும்; மெல்லினமெய், ஞ, ந, ம என்னும் மூன்றெனவும்; இடையினமெய், ய, வ என்னும் இரண்டெனவும் அறிக.

28. இவைகளிலே, க, ச, த, ந, ப, ம என்னும் ஆறு மெய்களும், பன்னிரண்டு உயிரோடு மொழிக்கு முதலாகி வரும்.

உ - ம்.—களி, காளி, கிளி, கீரை, குளிர், கூடு, கெண்டை, கேழல், கைதை, கொண்டை, கோடை, கௌவை.

சங்கு, சாந்து, சினம், சீர், சுக்கு, சூரல், செக்கு, சேவல், சையம், சொல், சோறு, சௌரியம்,

தகை, தார், திதலை, தீமை, துளை, தூசு, தெளிவு, தேன், தையல், தொண்டு, தோடு, தௌவை.

நஞ்சு, நாரி, நிலம், நீறு, நுகம், நூல், நெல், நேர்மை, நைதல், நொய்து, நோய், நௌவி.

பந்து, பால், பிட்டு, பீடு, புல், பூண்டு, பெருமை, பேடு, பையல், பொன், போது, பௌவம்.

மனை, மாடு, மின்னல், மீன், முள், மூரி, மெய்ம்மை, மேதி, மையல், மொட்டு, மோதிரம், மௌவல்.

29. வகரமெய், அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்னும் எட்டு உயிரோடு மொழிக்கு முதலாகி வரும்

உ - ம்.—வளி, வாளி, விளி, வீடு, வெண்மை, வேரல், வையம், வௌவால்.

30. யகரமெய், அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு உயிரோடு மொழிக்கு முதலாகி வரும்.

உ - ம்.—யவனர், யானை, யுகம் யூகம், யோகம், யௌவனம்.

31. ஞகரமெய், அ, ஆ, எ, ஒ என்னும் நான்கு உயிரோடு மொழிக்கு முதலாகி வரும்.

உ - ம்.—ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கல்.

[இறுதிநிலை]

32. எகரம் ஒழிந்த பதினோருயிர்களும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்கிற பதினொரு மெய்களும் மொழிக்கு இறுதியில் நிற்கும் எழுத்து களாம்.

உ - ம்.—விள, பலா, கிளி, தீ, கடு, பூ, சே, கை, நொ, போ, வௌ, உரிஞ், மண், வெரிந், மரம், பொன், காய், வேர், வேல், தெவ், யாழ், வாள்.

[இடைநிலை]

33. இடைநிலையாவது, ஒருமொழியிலும் தொடர் மொழியிலும் இரண்டெழுத்துப் பொருந்தும் பொருத்துவாயாம்.

34. அது, மெய்ம்மயக்கமும், உயிர்மெய்ம்மயக் கமும் என இருவகைப்படும்.

35. அவைகளுள், மேய்ம்மயக்கமாவது, மெய் யுடன் மெய் பொருந்துவதாம்.

36. அம் மெய்ம்மயக்கம், உடனிலை மெய்ம் மயக்கம் எனவும், வேற்றுநிலைமெய்ம்மயக்கம் என வும் இருவகைப்படும்.

37. மெய் பதினெட்டில், க, ச, த, ப என்கிற நான்கும் தம்முடனே தாம் மயங்கிவரும். (மயங்குதல் =சேர்தல்.)

உ - ம்.—சுக்கு, கச்சு, பத்து, செப்பு.

38. ர, ழ, இவ்விரண்டு மெய்களும் பிற மெய்களோடு மயங்கி வரும்.

உ - ம்.—சேர்தல், வாழ்தல்.

39. ங, ஞ, ட, ண, ந, ம, ய, ல, வ, ள, ற, ன இப் பன்னிரண்டு மெய்களும் தம்மெய்யோடும், வேறு மெய்யோடும் மயங்கி வரும்.

உ - ம்.—அங்ஙனம், அங்கு. மஞ்ஞை, மஞ்சு. வட்டம், வட்கல். வண்ணம், வண்டு. வெந்நீர், வேந்து. அம்மை, அம்பு. வெய்யர், வெய்து. வெல்லம், வெல்க, தெவ்வர், தெவ்யாது. கொள்ளல், கொள்க. கற்றல், கற்பு. அன்னை, அன்பு.

40. உயிர்மெய்ம் மயக்கம், உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும் நியதியின்றி மயங்குவனவாம்.

உ - ம்.—அல், ஆழ், வில், புல், புகழ்.

---

## 4. எழுத்தின் ஒழிபியல்.

### [இனவெழுத்து]

41. உயிரெழுத்துகளில் நெட்டெழுத்துகளுக்கு, அதனதன் குற்றெழுத்துகளே இனமாம். குற்றெழுத்தில்லாத ஐகாரத்துக்கு, இகாரமும்; ஔகாரத்துக்கு, உகாரமும் இனமாம். மெய்யெழுத்துகளில் வல்லின எழுத்துகளுக்கு, அதனதன்பின் நிற்கின்ற மெல்லின எழுத்துகளே இனமாம். இடையின எழுத்துகளுக்கு இனமில்லையென்றறிக.*

* ஆனதுபற்றி இடையின எழுத்துகள் யாவும் ஓர் இனம் எனப்படுதல் உண்டு.

## [எழுத்துச் சாரியை]

42. உயிர்நெட்டெழுத்துகள் காரச்சாரியையும்; அவைகளில், ஐ, ஔ இரண்டும் காரச்சாரியையே யன்றி, கான்சாரியையும் பெறும்.

உ - ம்.—ஆகாரம், ஈகாரம், ஊகாரம், ஐகாரம், ஓகாரம்; ஐகான், ஔகான்.

உயிர்க் குற்றெழுத்துகளும், உயிர்மெய்க் குற்றெழுத்துகளும் கரம், காரம், கான் என்னும் மூன்று சாரியைகள் பெறும்.

உ - ம்.—அகரம், அகாரம், அஃகான்; காரம், ககாரம், கஃகான்.

மெய்யெழுத்துகள், அ என்னும் சாரியையும், அதனோடு கரம், காரம், கான் என்னும் சாரியைகளும் பெறும்.

உ - ம்.—க, ங. ககரம், ககாரம், கஃகான்; ஙகரம், ஙகாரம், ஙஃகான்.

உயிர்மெய்நெடில்கள் சாரியை பெற்றும், மெய்கள் சாரியை பெறாமலும் இயங்கா.

## [போலியெழுத்துகள்]

43. அகரத்தோடு யகரமெய் சேர்ந்து ஐகாரம் போன்றும், அகரத்தோடு வகரமெய் சேர்ந்து ஔகாரம்போன்றும் ஒலித்துப் போலியெழுத்துகள் எனப் பட்டுவரும்.

வ - று.—ஐயன் - அய்யன், ஔவை - அவ்வை.

## II. சொல்லதிகாரம்.

---

### I. பெயர்ச்சொல்லியல்.

44. சொல்லதிகாரம் — பெயர்ச்சொல்லியல், வினைச்சொல்லியல், இடைச்சொல்லியல், உரிச்சொல்லியல் என நான்கு இயல்களாக வகுக்கப்படும்.

45. சொல்லாவது, ஓரெழுத்தாலும், பலவெழுத்தாலும் ஆக்கப்பட்டுத் திணையையும், பாலையும், எண்ணையும், இடத்தையும் அறிதற்குக் கருவியா யுள்ளதாம்.

46. ஓரெழுத்து மொழிகளாவன: ஆ, ஈ, தா, நீ, பூ, வா—என வருவனவாம்.

47. பலவெழுத்துமொழிகளாவன: கிளி, அறம், அரக்கு, பம்பரம், உத்திராடம், உத்திரட்டாதி—என வருவனவாம்.

48. திணையாவது, இலக்கணநூலிற் பகுக்கப்பட்ட பொருள்களின் சாதியாம்.

49. அது, உயர்திணையெனவும், அஃறிணையெனவும் இருவகைப்படும். உயர்திணை - உயர்வாகிய சாதி. அஃறிணை - உயர்வல்லாத சாதி.

50. **உயர்திணை**—மக்களும், தேவரும், நரகரும் ஆகிய மூவகைச் சாதிப் பொருளாம்.

51. அஃறிணை—மிருகம் பறவை முதலிய உயிருள்ள சாதிப் பொருளும், நிலம் நீர் கல் முதலிய உயிரில்லாத சாதிப்பொருளுமாம்.

52. பாலாவது, மேற் சொல்லிய பொருள்களின் பகுப்பாம்.

53. அது, ஆண்பால், பெண்பால், பலர்பால்; ஒன்றன்பால், பலவின்பால்—என ஐந்துவகைப்படும்.

54. ஆண்பால், பெண்பால், பலர்பால் என்னும் மூன்று பால்களும் உயர்திணைக்கு உரியனவாம்.

உ - ம்.—அவன், வந்தான்.
அவள், வந்தாள்.
அவர், வந்தார்.

55. ஒன்றன்பால், பலவின்பால் என்னும் இரண்டு பால்களும் அஃறிணைக்கு உரியனவாம்.

உ - ம்.—அது, வந்தது.
அவை, வந்தன.

56. எண்ணாவது, பொருள்களின் அளவின் வேறுபாட்டைக் காட்டுவதாம்.

அது, ஒருமை யெண்ணும், பன்மை யெண்ணும் என இருவகைப்படும். உயர்திணையில்—ஆண்பாலும், பெண்பாலும் ஒருமையெண்ணும்; பலர்பால் பன்மை யெண்ணும். அஃறிணையில்—ஒன்றன்பால் ஒருமை யெண்ணும்; பலவின்பால் பன்மையெண்ணும்.

57. இடமாவது, சொற்களின் நிகழ்ச்சிக்குரிய தானமாம்.

58. அது, தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும்.

சொல்லுவோர், தன்மையிடமாம்.

கேட்போர், முன்னிலையிடமாம்.

சொல்லப்படுவோர், படர்க்கையிடமாம்.

59. இச் சொல், பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்—என நான்கு வகைப் படும். இவையல்லாமல் திசைச் சொல்லும், வடசொல் லும் உண்டு.

60. திசைச்சொற்கள்—தென்பாண்டி முதலிய பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகளிலிருந்து வந்து செந் தமிழ் நாட்டு மொழியோடு கலந்து வழங்குஞ் சொற்க ளாம்.

செந்தமிழ்நாடாவது, பாண்டி நாடாம்.

கொடுந்தமிழ்நாடாவன : தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி, பன்றி, அருவா, அருவா வடதலை, சீதம், மலாடு, புனநாடு—என்பவையாம்.

தென்பாண்டிநாட்டார்—ஆவினைப் பெற்றம் எனவும்,

குட்டநாட்டார்—தாயைத் தள்ளை எனவும்,
குடநாட்டார்—தந்தையை அச்சன் எனவும்,
கற்காநாட்டார்—வஞ்சரைக் கையர் எனவும்,
வேணாட்டார்—தோட்டத்தைக் கிழார் எனவும்,
பூழிநாட்டார்—சிறுகுளத்தைப் பாழி எனவும்,
அருவாநாட்டார்—செறுவைச் செய் எனவும்,

அருவாவடதலையார், புளியை எகின் எனவும்,
சீதநாட்டார், தோழனை எலுவன் எனவும்
வழங்குவர். பிறவும் இப்படியே.

61. **வடசொற்கள்**—ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொது எழுத்தாலும், ஆரியத்திற்குரிய சிறப்பெழுத்துத் திரிந்த எழுத்தாலும், இவ்விருவகை எழுத்தாலும் இயைந்து தமிழில் வந்து வழங்குஞ் சொற்களாம்.

உ-ம்.—அமலம், கமலம், காரணம், காரியம் - இவை பொதுவெழுத்தால் இயைந்தன.

ஜோடி, பலம், ஸர்ப்பம் - இவை சிறப்பெழுத்தாலியைந்தன.

அரன், அரி, கடினம், சலம் - இவை ஈரெழுத்தாலும் இயைந்தன.

62. **பெயர்ச்சொற்களாவன**, காலத்தைக் காட்டாமல், வேற்றுமை யுருபுகளை யேற்பனவாய்ப் பொருளை யுணர்த்திவருஞ் சொற்களாம்.

அவை—இடுகுறியும், காரணக்குறியும், காரணவிடு குறியு மாகி; பகாப்பதம், பகுபதமென இருவகைப்பட்டு; திணைபாலிடங்களில் ஒன்றற் குரியவாயும், பலவற்றிற்குப் பொதுவாயும் வரும்.

63. **இடுகுறிப்பெயர்கள்**—வழக்காற்றலாற் பொருளை யுணர்த்திவருஞ் சொற்களாம்.

உ-ம்.—மரம், பனை.

64. **காரணப்பெயர்கள்**—உறுப்பாற்றலாற் பொருளை உணர்த்திவருஞ் சொற்களாம்.

உ-ம்.—பறவை, அலரி, பொன்னன்.

**65. காரணவிடுகுறிப்பெயர்கள்**—உறுப்பாற்றலுக்கிடமாகிய பொருளை வழக்காற்றலால் உணர்த்திவருஞ் சொற்களாம்.

**உ - ம்.**—முக்கணன், அந்தணன், முள்ளி, கறங்கு.

[முக்கணன் என்பது, காரணங் கருதியவழி விநாயகமூர்த்தி முதலிய பலர்க்குஞ் செல்லுதலாலும், காரணங் கருதாதவழி இடுகுறியளவாய்ப் பரமசிவனுக்குச் செல்லுதலாலும் காரண விடுகுறிப்பெயராம். முள்ளியென்பது, காரணங் கருதியவழி முள்ளையுடைய செடிகள் பலவற்றிற்குஞ் செல்லுதலாலும், காரணங் கருதாதவழி இடுகுறியளவாய் முள்ளியென்னும் ஒரு செடிக்குச் செல்லுதலாலும், காரண விடுகுறிப்பெயராம். மற்றவைகளும் இப்படியே.]

**66.** இவை, பொதுப் பெயரும் சிறப்புப் பெயரும் என இருவகைப்படும்.

**67. பொதுப் பெயர்களாவன**, பல பொருள்களுக்குப் பொதுவாகி வரும் பெயர்களாம்.

**உ - ம்.**—மரம், விலங்கு, பறவை.

**68. சிறப்புப்பெயர்களாவன**, ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாகி வரும் பெயர்களாம்.

**உ - ம்,**—ஆல், காரி, கரி.

**69.** இப்படி வரும் பெய்ர்கள், தன்மைப்பெயர் முன்னிலைப்பெயர், படர்க்கைப்பெயர் என மூன்று வகைப்படும்.

**70. தன்மைப் பெயர்கள்**—நான், யான், நாம், யாம் என நான்காம். இவைகளில், நான், யான் இவ்விரண்டும் ஒருமைப் பெயர்களாம். நாம், யாம் இவ்விரண்டும் பன்மைப் பெயர்களாம்.

இத் தன்மைப் பெயர்கள், உயர்திணை ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகி வருவனவாம்.

உ-ம்.—யான் நம்பி, யான் நங்கை.
யாம் மைந்தர், யாம் மகளிர்.

71. முன்னிலைப் பெயர்கள்—நீ, நீர், நீயிர், நீவிர், எல்லீர் என ஐந்தாம். இவைகளில் நீ என்பது ஒருமைப் பெயராம். மற்றவை பன்மைப் பெயர்களாம்.

இம் முன்னிலைப் பெயர்கள், இருதிணை ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகி வருவனவாம்.

உ-ம்.—நீ நம்பி, நீ நங்கை, நீ பூதம், நீர் மைந்தர், நீர் மகளிர், நீர் பூதங்கள்.

மேற்கூறப்பட்ட தன்மைப்பெயர் நான்கும், முன்னிலைப்பெயர் ஐந்தும் பகாப் பதங்களாம் எனவறிக.

நாங்கள் யாங்கள் என்பவை தன்மைப் பன்மையிலும்; நீங்கள் என்பது முன்னிலைப் பன்மையிலும் உலக வழக்கில் வரும்.

72. படர்க்கைப் பெயர்கள்—இத் தன்மை முன்னிலைப் பெயர்களல்லாத மற்றைய எல்லாப் பெயர்களுமாம்.

உ-ம்.—பொன், மணி, நிலம், அவன், அவள்.

இப் படர்க்கைப் பெயர்கள், பகாப்பதங்களும் பகுபதங்களுமாய்த் திணை பால் இடங்களில் ஒன்றற்குரியவாயும் பலவற்றிற்குப் பொதுவாயும் வருமாறு இனிக் கூறப்படும்.

73. பகாப்பதங்கள்—பகுதி விகுதி முதலிய உறுப்புகளைப் பெறுமல் வரும் பெயர்ச் சொற்களாம்.

உ-ம்.—மண், பொன்; கல், மணி, நெல், மரம், நீர்.

**74. பகுபதங்கள்**—பகுதி விகுதி முதலிய உறுப்புகளைப் பெற்றுவரும் பெயர்ச்சொற்களாம்.

இப் பெயர்ப்பகுபதங்கள், பொருள் இடம் காலம் சினை குணம் தொழில்—என்னும் இவ் வாறு பெயர்களடியாகவும், சிறுபான்மை இடைச்சொல்லடியாகவும் வரும்.

உ - ம்:—பொன்னன், குழையன்.
நிலத்தன், அகத்தன்.
வேனிலான், தையான்.
கண்ணன், தோளான்.
கரியன், பெரியன்.
ஊணன், நடையன்.
அவன், எவன்.
பிறன், மற்றையான்.

**75. பகுதிகளாவன**, அப் பகுபதங்களின் முதல் நிலையாய் வருகின்ற பகாப்பதங்களாம்.

உ - ம்:—பொன்னன், நிலத்தன்.

[இவைகளில் முறையே, பொன், நிலம் பகுதியாய் வருதல் காண்க. மற்றவைகளும் இப்படியே.]

**76. விகுதிகளாவன**, திணை பால் எண் இடம் இவைகளை யுணர்த்தி அப் பகுபதங்களின் இறுதி நிலையாய் வருபவைகளாம்.

77. அன், ஆன் முதலிய விகுதிகளை இறுதியிலே பெற்றுவருவன, உயர்திணையாண்பால் ஒருமைப் படர்க்கைப் பெயர்ப் பகுபதங்களாம்.

உ - ம்:—பொன்னன், பொருளான்.

[முதலிய என்றதனால் - வடமன், கோமான், பிறன்—எனச் சிறுபான்மை மன், மான், ன் என்னும் விகுதிகளையும் பெற்று வரும்.]

78. அள், ஆள், இ முதலிய விகுதிகளை இறுதியிலே பெற்றுவருவன, உயர்திணைப் பெண்பால் ஒருமைப் படர்க்கைப் பெயர்ப் பகுபதங்களாம்.

உ - ம்:—குழையள், குழையாள், பொன்னி.

[முதலிய என்றதனால் - பிறள் என ளகரமெய் விகுதியையும் சிறுபான்மை பெற்றுவரும்.]

79. அர், ஆர், கள் முதலிய விகுதிகளை இறுதியிலே பெற்று வருவன, உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப் பெயர்ப்பகுபதங்களாம்.

உ - ம்:—குழையர், குழையார், கோக்கள்.

[முதலிய என்றதனால் - தேவிமார், பிறர்—எனச் சிறுபான்மை மார், ர் என்னும் விகுதிகளையும் பெற்று வரும்.

தச்சர்கள், தட்டார்கள்—எனக் கள் விகுதி விகுதி மேல் விகுதியாயும் வரும்.]

80. து விகுதியை இறுதியிலே பெற்று வருவன, அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கைப் பெயர்ப் பகுபதங்களாம்.

உ - ம்:—குழையது, ஊரது.

81. வை, அ, கள் முதலிய விகுதிகளை இறுதியிலே பெற்று வருவன, அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப் பெயர்ப் பகுபதங்களாம்.

உ - ம்:—குழையவை, குழையன, மரங்கள்.

82. **து** என்னும் ஒருமை விகுதியையாவது, ஐவ, அ, கள் என்னும் பன்மை விகுதிகளை யாவது பெருமல் அஃறிணை இயற்பெயராய் வரும் எல்லாப் பெயர்களும், பால்பகா அஃறிணைப் பெயர்களாம்.

உ - ம்:—யானை வந்தது, யானை வந்தன.
குதிரை வந்தது, குதிரை வந்தன.
மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன.

83. மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர்—முதலிய விகுதிகளை இறுதியிலே பெற்றுவருவன பண்புப் பெயர்ப் பகுபதங்களாம்.

உ - ம்:—நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர்.

[இம் மை முதலிய விகுதிகளின் பொருள், முதனிலைப் பண்பைப் பெயர்த்தன்மைபெறச்செய்து நிற்றலாம்.]

84. தல், அல், கை, அம், ஐ, வை, கு, பு, உ, தி, சி, வி—முதலிய விகுதிகளை இறுதியிலே பெற்று வருவன, தொழிற் பெயர்ப் பகுபதங்களாம்.

உ - ம்:—வருதல், வரல், வருகை, வாட்டம், கொலை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, உணர்ச்சி, புலவி.

[இத் தல் முதலிய விகுதிகளின் பொருள், முதனிலைத் தொழிலைப் பெயர்த்தன்மை பெறச்செய்து நிற்றலாம்.]

85. இ, ஐ, அம்—என்னும் மூன்று விகுதிகளும் வினைமுதற் பொருளையும், செயப்படு பொருளையும், கருவிப்பொருளையும் உணர்த்தி வரும்.

உ - ம்:—அலரி, பறவை, எச்சம் - என்பன வினைமுதற் பொருளை உணர்த்திவந்தன.

ஊருணி, தொடை, தொல்காப்பியம் - என்பன செயப்படுபொருளை உணர்த்திவந்தன.

மண்வெட்டி, பார்வை, நோக்கம் - என்பன கருவிப் பொருளை உணர்த்திவந்தன.

**இவ் விகுதிகள் சிறுபான்மை புணர்ந்துகெட்டும்வரும்.**

உ - ம்:—காய், தளிர், பூ, கனி - என்பவற்றில் வினைமுதற்பொருளை யுணர்த்தும் இகரவிகுதி புணர்ந்து கெட்டது.

எழுத்து, ஊண் - என்பவற்றில் செயப்படு பொருளை யுணர்த்தும் ஐவிகுதி புணர்ந்து கெட்டது. மற்றவைகளும் இப்படியே.

[இவை கெடினும் புணர்ந்து நின்றாற்போலவே அப் பொருளை உணர்த்திவருதல் காண்க.]

**86. பெயர்ப் பகுபதங்களிலே பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் இடைநிலை, சாரியை, சந்தி, விகாரங்களும் சிறுபான்மை வரும்.**

**87. பெயர்ப் பகுபத இடைநிலைகள் அப் பெயர்ப் பகுபதங்களிலே பகுதிக்கும் விகுதிக்கும் இடையிலே சாரியை சந்தி விகாரங்கள் ஒழித்து ஒழிந்து நிற்பனவாம்.**

உ - ம்:—அறிஞன், வலைச்சி, வண்ணாத்தி - இவை முறையே ஞகர, சகர, தகர இடைநிலை பெற்றன.

**சாரியை சந்தி விகாரங்கள் சிறுபான்மை வரும். அவற்றைப் பகுபதம்முடிக்குமிடத்துக் கண்டுகொள்க.**

**88. இப் பகுபதங்கள் பகுதி விகுதி முதலிய உறுப்புகளாலே முடியுமாறு:**

'பொன்னன்' என்னும் பொருட் பெயர்ப் பகுபதம், பொன் என்னும் பகுதியும், அன் என்னும் விகுதியும் ஏற்றுத் தனிக் குற்றெழுத்தைச் சேர்ந்த மெய்ம் முன் உயிர்வந்தால் அம் மெய்இரட்டும் என்பதினாலே பகுதியீற்று னகரம் இரட்டித்து இரட்டித்த னகர மெய்யின்மேல் விகுதி அகரம் ஏறிமுடிந்தது.

'நிலத்தன்' என்னும் இடப்பெயர்ப்பகுபதம், நிலம் என்னும் பகுதியும், அன் என்னும் விகுதியும், அத்துச் சாரியையும்பெற்றுப் பகுதியீற்று மகரமெய்யுஞ் சாரியையின் முதல் அகரமுங் கெட்டு உயிர்வரின் குற்றிய லுகரம் கெடும் என்பதினாலே சாரியையீற்று உகரமும் கெட்டு, உகரம் கெட நின்ற தகர மெய்யின்மேல் விகுதி அகர உயிரேறி முடிந்தது.

'வேனிலான்' என்னும் காலப் பெயர்ப் பகுபதம், வேனில் என்னும் பகுதியும், ஆன் என்னும் விகுதியும் பெற்றுப் பகுதியீற்று லகரமெய்யின்மேல் விகுதி ஆகாரம் ஏறி முடிந்தது.

'தோளன்' என்னும் சினைப் பெயர்ப் பகுபதம், தோள் என்னும் பகுதியும், அன் என்னும் விகுதியும் பெற்றுப் பகுதியீற்று ளகர மெய்யின்மேல் விகுதி அகாம் ஏறி முடிந்தது.

'பெரியன்' என்னும் பண்புப் பெயர்ப் பகுபதம், பெரு என்னும் பகுதியும், அன் என்னும் விகுதியும் பெற்றுப் பகுதியீற்று உகரம் இகரமாய்த் திரிந்து யகர உடம்படுமெய் தோன்றி அவ் உடம்படுமெய்யின்மேல் விகுதி அகரமேறி முடிந்தது.

'நடையன்' என்னும் தொழிற் பெயர்ப் பகுபதம், நடை என்னும் பகுதியும், அன் என்னும் விகுதியும் பெற்று யகர உடம்படுமெய்தோன்றி அவ் உடம்படு மெய்யின்மேல் விகுதி அகரம் ஏறி முடிந்தது.

'நன்மை' என்னும் பண்புப் பெயர்ப் பகுபதம், நல் என்னும் பகுதியும், மை என்னும் விகுதியும் பெற்று மெல்லினம் வரின் லகரம் னகரமாய்த் திரியும் என் பதினாலே பகுதியீற்று லகரம் னகரமாய்த் திரிந்து முடிந்தது.

'நடத்தல்' என்னும் தொழிற்பெயர்ப்பகுபதம், நட என்னும் பகுதியும், தல் என்னும் விகுதியும் பெற்று ஆகரவீற்றின்முன் வரும் வல்லினம் மிகும் என்பதி னால் விகுதி முதல் தகரம் இரட்டித்து முடிந்தது.

'எழுத்து' என்னும் செயப்படுபொருட்பெயர்ப் பகுபதம், எழுது என்னும் பகுதியோடு செயப்படு பொருளை உணர்த்தும் ஐ விகுதி புணர்ந்து விகுதி ஐ கெட்டுப் பகுதித் தகரம் இரட்டித்து முடிந்தது.

'காய்' என்னும் வினைமுதற் பொருட்பெயர்ப்பகு பதம்,காய் என்னும் பகுதியோடு வினைமுதற் பொருளை யுணர்த்தும் இகரவிகுதி புணர்ந்து அவ் விகுதி கெட்டு முடிந்தது.

மற்றைய பகுபதங்களையும் இவ்வாறே முடித்துக் கொள்க.

89. **சுட்டுப்பெயர்கள்** - அ, இ, உ என்னும் இடைச்சொற்கள் அடியாகவும்; **வினப்பெயர்கள்** - எ, யா, ஏ என்னும் இடைச்சொற்கள் அடியாகவும் தோன்

றி, அன், அள், அர், து, வை என்னும் ஐம்பால் விகுதிகளை இறுதியிற் பெற்றுப் படர்க்கைக்கு உரியனவாய் வரும்.

உ - ம்:—அவன், இவன், உவன்
அவள், இவள், உவள்.
அவர், இவர், உவர்.
அது, இது, உது.
அவை, இவை, உவை.
எவன், யாவன், ஏவன்.
எவள், யாவள், ஏவள்.
எவர், யாவர், ஏவர்.
எது, யாது, ஏது.
எவை, யாவை, ஏவை.

90. வினையாலணையும் பெயர்கள்—பொருள்களின் தொழிலை உணர்த்தி நின்ற முற்றுவினைச்சொற்கள் அப்பொருள்களுக்குப் பெயர்களாய், ஐம்பால் மூவிடங்களில் ஒவ்வொன்றற்கு உரியனவாய், ஈறு திரிந்தும் திரியாமலும் வருவனவாம்.

முற்றுவினைச் சொற்கள் என்றதனாலே காலத்தை உணர்த்திவரும் என்றும், பெயர்களாய் என்றதனாலே வேற்றுமையுருபுகளை ஏற்று வருமென்றும் அறிந்து கொள்க.

உ - ம்:—நடந்தேனை, நடந்தேமை.
நடந்தாயால், நடந்தீரால்.
நடந்தானுக்கு, நடந்தவனுக்கு.
நடந்தாளை, நடந்தவளை.
நடந்தாரை, நடந்தவரை.
நடந்ததை, நடக்கின்றதை.
நடந்தனவற்றை, நடப்பனவற்றை.

91. விகுதி பெறுமல் உயர்திணை அஃறிணைக ளில், ஆண்பால் பெண்பால்களை உணர்த்திவரும் பெயர் களும் சில உண்டு. அவை வருமாறு:

நம்பி, விடலை, கோ, வேள், ஆடூஉ என வருவன உயர்திணையில் ஆண்பாலை உணர்த்திவரும் பெயர்க ளாம்.

மாது, தையல், மகடூஉ, நங்கை - என வருவன உயர்திணையிற் பெண்பாலை உணர்த்திவரும் பெயர் களாம்.

கடுவன், ஒருத்தல், போத்து, கலை, சேவல், ஏறு - என வருவன அஃறிணையில் ஆண்பாலை உணர்த்தி வரும் பெயர்களாம்.

பிடி, பிணை, பெட்டை, மந்தி, பிறு - என வருவன அஃறிணையிற் பெண்பாலை உணர்த்திவரும் பெயர்க ளாம்.

அன்றியும், ஆண்பால் பெண்பால் இரண்டிற்கும் பொதுப்பெயரா யிருக்கின்ற சில விலங்கின் பெயர்கள்- ஆண்யானை ஆண்புலி எனவும், பெண்யானை பெண் புலி எனவும்—ஆண் பெண் என்பவற்றோடு சேர்ந்து ஆண்பாலையும் பெண்பாலையும் உணர்த்தி வரும் என் றும்; மரப்பெயர்களுட் சில, ஆண்பனை பெண்பனை என ஆண் பெண் என்பவற்றோடு சேர்ந்து ஆண்பாலையும் பெண்பாலையும் உணர்த்திவருமென்றுங் கொள்க.

92. தந்தை, தாய், சாத்தன், கொற்றன், சாத்தி, கொற்றி, ஆண், பெண், தான், தாம் என வரும் பெயர் கள் உயர்திணை அஃறிணை இரண்டற்கும் பொதுப் பெயர்களாம்.

உ - ம்:—*தந்தையவன், தந்தையவ்வெருது, தாயிவள், தாயிப்பசு, சாத்தனவன், சாத்தனவ்வெருது, கொற்றனவன், கொற்றனவ்வெருது, சாத்தியவள், சாத்தியப்பசு, கொற்றியவள், கொற்றி அப்பசு, ஆண்வந்தான், ஆண்வந்தது, பெண் வந்தாள், பெண்வந்தது, அவன்றான், அவள் தான், அதுதான், அவர்தாம், அவைதாம்.*

93. ஒருவர், பேதை, ஊமை, செவியிலி, காதறை - என வரும் பெயர்கள் உயர்திணை ஆண்பால் பெண்பால் இரண்டிற்கும் பொதுப் பெயர்களாம்.

உ - ம்:—*ஆடவருளொருவர்வந்தார், பெண்டிருளொருவர் வந்தார். பேதையவன்; பேதையவள். ஊமைவந்தான், ஊமைவந்தாள், செவியிலிபோனான், செவியிலிபோனாள். காதறை நின்றான், காதறை நின்றாள்.*

இவைகளுள்—*செவியிலி வந்தது, காதறை நின்றது, எனச் சில அஃறிணையிடத்தும் வரும் எனக் கொள்க.*

94. *எல்லாம் என்னுஞ்சொல், நாம் எல்லாம், நீர் எல்லாம், அவர் எல்லாம், அவை எல்லாம் என மூவிடத்திற்கும் பொதுப்பெயராம்.*

95. ஆகுபெயர்—ஒரு பொருளின் இயற்பெயர் அப் பொருளிற்குச் சம்பந்தமாகிய பிறிதொரு பொருளிற்கு ஆகிவரும் பெயராம்.

உ - ம்:—*கார் அறுத்தது. வெற்றிலை நட்டான். உலகம் புகழ்ந்தது. நீலஞ் சூடினாள்.*

*கார் அறுத்தது என்பதில்-கார் என்னுங் காலத்தின் பெயர் அக் காலத்தில் விளையும் பயிருக்காயிற்று.*

வெற்றிலை நட்டான் என்பதில்-வெற்றிலை என்னும் அவயவப் பெயர் அதன் முதலுக்காயிற்று.

உலகம் புகழ்ந்தது என்பதில் - உலகம் என்னும் இடப்பெயர் அதில் வாழ்பவருக்காயிற்று.

நீலஞ் சூடினாள் என்பதில் - நீலம் என்னும் நிறத்தின் பெயர் அந் நிறத்தை யுடைய ஒரு பூவிற்காயிற்று.

இப்படி ஒன்றன்பெயர் ஒன்றற்காகி வருபவைகளெல்லாம் ஆகுபெயரென்று அறிந்துகொள்க.

[இவற்றின் விகற்பங்கள் எல்லாம் தொடர்மொழியதிகாரத்துள் விரித்துக் கூறப்படும். அங்குக் கண்டு கொள்க.]

96. இப் பெயர்கள் ஏற்று வரும் வேற்றுமையுருபுகள் - முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது, எட்டாவது, என எண்வகைப்படும்.

97. முதல் வேற்றுமையினது உருபாவது, திரிபில்லாத பெயரேயாம்.

இது, எழுவாய் வேற்றுமையெனவும், பெயர் வேற்றுமை யெனவும் பெயர் பெறும்.

இது, வினையையும், பெயரையும், வினாவையும் கொள்ளும்.

உ - ம்:—சாத்தன் வந்தான்.
சாத்தன் இவன்.
சாத்தன் யார் ?

இத் திரிபில்லாத பெயர், தன்னைத் தானே வினைமுதற்பொருளாக வேறுபடுத்தும். அப்படி வேறுபட்ட வினைமுதற்பொருளே இதன் பொருளாம்.

வினைமுதற் பொருளாவது, தன் புடைபெயர்ச்சியாகிய தொழிலிற் சுதந்தரமுடைய பொருளாம்.

உ - ம்:— 'சாத்தன் வந்தான்' என்பதில் சாத்தன் என்பது தன் புடைபெயர்ச்சியாகிய வருகைத் தொழிலிற் சுதந்தரமுடைய பொருளாதல் காண்க.

வினைமுதல், கருத்தா, செய்பவன் என்பன ஒருபொருட்சொற்கள்.

இவ் வெழுவாய்க்கு வேறுருபு இல்லையாயினும், ஆனவன், ஆகின்றவன், ஆவான், என்பவன் முதலிய ஐம்பாற் சொற்களும் சொல்லுருபாக வரும்.

உ - ம்:—சாத்தனானவன் வந்தான்.
சாத்தியானவள் வந்தாள்.
சாத்தரானவர் வந்தார்.
மரமானது வளர்ந்தது.
மரங்களானவை வளர்ந்தன.

மற்றவைகளும் இப்படியே.

98. இரண்டாம் வேற்றுமையினது உருபு, ஐ ஒன்றுமேயாம்.

இது, வினையையும், வினைக்குறிப்பையும் கொள்ளும்.

இவ் வையுருபு தன்னை யேற்ற பெயர்ப்பொருளை ஆக்கப்படுபொருளும், அழிக்கப்படுபொருளும், அடையப்படுபொருளுமாகிய செயப்படுபொருளாக வேறுபடுத்தும். அப் பெயர்ப்பொருள் வேறுபட்ட செயப்படுபொருளே இதன் பொருளாம்.

செயப்படுபொருளாவது, வினைமுதலின் தொழிற் பயனுறுவது.

உ - ம்:—வீட்டைக் கட்டினான்,
மரத்தை வளர்த்தான்— ஆக்கல்.
வீட்டை யிடித்தான்,
மரத்தை வெட்டினான்— அழித்தல்.
ஊரை யடைந்தான்,
பொன்னை யுடையான்— அடைதல்.

வீட்டைக் கட்டினான் என்னும் இடத்துக் கல்லடுக்கல் முதலியன வினைமுதலின் தொழில், வீடாகுகை அத் தொழிற் பயன், அப் பயனுறுவது வீடாதலால் வீடு செயப்படுபொருளாம்.

மரத்தை வளர்த்தான் என்னும் இடத்து நீர்பெய்தல் முதலியன வினைமுதற்றொழில் ; பருத்தல் தளிர்த்தல் முதலியன அத் தொழிற்பயன்; அப் பயனுறுவது மரமாதலால் மரம் செயப்படுபொருளாம்.

வீட்டை இடித்தான் என்னும் இடத்து வீட்டை இடித்தல் வினைமுதற்றொழில் ; அதனது உருவுகுலைதல் அத் தொழிற்பயன்; அப் பயனுறுவது வீடாதலால் வீடு செயப்படுபொருளாம்.

மரத்தை வெட்டினான் என்னும் இடத்து வாளைப் பற்றி வீசுதல் வினைமுதற்றொழில்; மரம் அறுகை அத் தொழிற் பயன்; அப் பயனுறுவது மரமாதலால் மரம் செயப்படுபொருளாம்.

ஊரை யடைந்தான் என்னும் இடத்து நடந்து செல்லுதல் வினைமுதற்றொழில்; ஊரைச்சேர்தல் அத் தொழிற் பயன் ; அப் பயனுறுவது ஊராதலால் ஊர் செயப்படுபொருளாம்.

பொன்னை யுடையான் என்னும் இடத்துச் சம்பாதித்தல் வினைமுதற்றொழில்; தனதாகுகை அத் தொழிற்பயன்; அப் பயனுறுவது பொன்னாதலால் பொன் செயப்படுபொருளாம்.

அன்றியும் விடயமும், இயற்றும் வினைமுதலும் செயப்படுபொருளாய் வருதலும் உண்டு.

உ - ம்:—தருமத்தை விரும்பினான், கல்வியை யறிந்தான்,—என்பவைகளில் விரும்புதலும் அறிதலுமாகிய வினைமுதற்றொழிற்கு, விடயமாகிய தருமமும் கல்வியும் செயப்படு பொருளாய் வந்தன.

அரசன் பகைவரைச் சிறைச் சாலையை யடைவித்தான், சாத்தான் கொற்றனைப் போக்கினான்,—என்பவைகளில் அடைதல் வினைக்கு இயற்றும் வினை முதலாகிய பகைவரும், போதல் வினைக்கு இயற்றும் வினைமுதலாகிய கொற்றனும் ஐயுருபேற்றுச் செயப்படு பொருளாய் வந்தன.

99. மூன்றாம்வேற்றுமையினுடைய உருபுகள், ஆல், ஆன், ஒடு, ஓடு என்பவைகளாம்.

இவை, வினையைக் கொள்ளும்.

இவ்வுருபுகளில், ஆல், ஆன் என்னும் இரண்டு உருபுகளும், தம்மையேற்ற பெயர்ப்பொருளை வினைமுதற்பொருளாகவும் கருவிப்பொருளாகவும் வேறுபடுத்தும். அவை வேறுபட்ட வினைமுதற் பொருளும் கருவிப்பொருளும் இவ் வுருபுகளின் பொருள்களாம்.

அப் பொருள்கள் இரண்டில் வினைமுதற்பொருள்—இயற்றும் வினைமுதல், ஏவும் வினைமுதல் என இருவகைப்படும்.

இயற்றும் வினைமுதலாவது, கருவியைத் தொழிற்படுத்துவது.

உ - ம்:—தச்சனாற் கோயில் கட்டப்பட்டது.

ஏவும்வினைமுதலாவது, அவ் வியற்றும் வினைமுதலினது தொழிலை யுண்டாக்குந் தொழிலையுடையது.

உ - ம்:—அரசனாற் கோயில் கட்டுவிக்கப்பட்டது.

எழுவாயில் வரும் வினைமுதல், தன் விகுதிவினையால்முடியும். இம் மூன்றாம்வேற்றுமையில்வரும் வினைமுதல், செயப்படுபொருள் விகுதிவினையால் முடியும்.

உ - ம்:—சாத்தன் வந்தான்; தச்சனாற் கோயில் கட்டப்பட்டது.

கருவிப்பொருளாவது, வினைமுதற்றொழிற்பயனைச் செயப்படுபொருளிற் சேர்ப்பது.

உ - ம்:—வாளாலே மரத்தை வெட்டினான்—என்னுமிடத்து வாளைப் பற்றி வீசுதல், வினைமுதற்றொழில்; அத் தொழிலின் பயன் மரம்றுகை; அப் பயனை மரமாகிய செயப்படுபொருளிற் சேர்க்கையால் வாள் கருவியாம்.

அக் கருவி, முதற்கருவி துணைக்கருவி என இருவகைப்படும்.

முதற்கருவியாவது, செயப்படுபொருளோடு ஒற்றுமையுடையது.

உ - ம்:—மண்ணாற் செய்த குடம்.

துணைக்கருவியாவது, அம் முதற்கருவி காரியப்படுமளவும் உடன் நிகழ்வது

உ - ம்:—தண்ட சக்கரங்களாற் குடத்தை வனைந்தான்.

ஒடு, ஓடு, என்னும் உருபுகள் தம்மையேற்ற பெயர்ப்பொருளை உடனிகழ்ச்சிப் பொருளாக வேறு படுத்தும். அவைவேறுபட்ட உடனிகழ்ச்சிப்பொருளே அவ் வுருபுகளின் பொருளாம்.

உடனிகழ்ச்சிப்பொருளாவது, வினைகொண்டுமுடி யும் பொருளினது தொழில்போன்ற தொழிலையுடைய பொருளாம்.

உ - ம்.—தந்தையொடு மைந்தன் வந்தான்—என்னும் இடத்து மைந்தன் வினைகொண்டு முடியும்பொருளாம்; வருதல் அப் பொருளின் தொழிலாம்; அத்தொழில்போன்ற தொழில்வரு தலாம். அத்தொழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வதாகவுடைய பொருள் தந்தையாதலால் தந்தை உடனிகழ்ச்சிப் பொருளாம்.

இந் நான்குருபுகளுள், ஆல், ஆன் உருபுகள் நிற் றற்குரிய விடத்துக் கொண்டு என்பதும், ஒடு, ஓடு உரு புகள் நிற்றற் குரியவிடத்து உடன் என்பதும் சொல் லுருபுகளாகவரும்.

உ - ம்:—வாள் கொண்டு வெட்டினான்; தந்தையுடன் மைந்தன் வந்தான். (மற்றவைகளும் இப்படியே.)

100. நான்காம் வேற்றுமையினது உருபு, கு ஒன்றுமேயாம்.

இது, வினையையும் வினையொடுபொருந்தும்பெய ரையும் கொள்ளும்.

இக் குவ்வுருபு, தன்னையேற்ற பெயர்ப்பொருளை— ஏற்றுக் கொள்ளுதற் பொருளாகவும், 1 முதற்காரண காரியப் பொருளாகவும், 2 நிமித்தகாரண காரியப் பொரு ளாகவும், 4 பகைதொடர் பொருளாகவும், 5 நட்புத்தொடர்

பொருளாகவும், தகுதிப் பொருளையுடைய பொருளாகவும், முறைக்கிளை பொருளாகவும், உற்பாதத்தாற் குறிக்கப்பட்ட பொருளாகவும் வேறுபடுத்தும். அப் பெயர்ப்பொருள் வேறுபட்ட ஏற்றுக்கொள்ளுதற்பொருள் முதலியன இவ் வுருபின் பொருள்களாம்.

உ - ம்:—இரப்பவனுக்குப் பொன்னைக் கொடுத்தான்; குண்டலத்திற்கு வைத்த பொன்; கூழிற்குச் செய்வது குற்றேவல்; பாம்புக்குப் பகையாயுள்ளது கருடன்; சாத்தனுக்கு நட்பாளனாயிருப்பவன் கொற்றன்; அரசர்க்கு உரித்தருங்கலம்; சாத்தனுக்கு மகனாயினானிவன்; மழைக்குக் குறியாயுள்ளது மின்னல்.

இவைகளில், இரப்பவனுக்குப் பொன்னைக் கொடுத்தான்—என்பதில் ஒருவனாற் கொடுக்கப்பட்ட பொன்னைத் தனக்குரிய தாக்கிக் கொள்ளும் பொருள் இரப்பவனாதலால், இரப்பவன் ஏற்றுக்கொள்ளுதற் பொருளாம்.

குண்டலத்திற்கு வைத்த பொன்—என்பதில் பொன்னாகிய முதற்காரணத்தா லாகிய காரியப்பொருள் குண்டல மாதலால், குண்டலம் முதற்காரணகாரியப் பொருளாம்.

கூழிற்குச் செய்வது குற்றேவல்—என்பதில் குற்றேவலென்னும் நிமித்த காரணத்தா லாகிய காரியம் கூழாதலால், கூழ் நிமித்தகாரண காரியப்பொருளாம்.

பாம்புக்குப் பகையாயுள்ளது கருடன்—என்பதில் கருடனிடத்துள்ள பகையைத் தொடர்கின்றபொருள் பாம்பாதலால், பாம்பு பகைதொடர்பொருளாம்.

சாத்தனுக்கு நட்பாளனு யிருப்பவன்கொற்றன்—என்பதில் கொற்றனிடத்துள்ள நட்பைத் தொடர்பொருள் சாத்தனுதலால், சாத்தன் நட்புத்தொடர்பொருளாம்.

அரசர்க்குரித் தருங்கலம்—என்பதில் அருங்கலம் என்னும் தம்மோடு பொருந்துதற்குத் தகுதியான பொருளையுடைய பொருள் அரசராதலால், அரசர் தகுதிப் பொருளையுடைய பொருளாம்.

சாத்தனுக்கு மகனுயினு னிவன்—என்பதில் மகனுதலாகிய முறைக்குச் சாத்தன் இயையும்பொருளாதலால், சாத்தன் முறைக்கியை பொருளாம்.

மழைக்குக் குறியா யுள்ளது மின்னல்—என்பதில் மின்னலாகிய உற்பாதத்தாற் குறிக்கப்பட்ட பொருள் மழையாதலால், மழை உற்பாதத்தாற் குறிக்கப்பட்ட பொருளாம்.

அன்றியும், நல்லோருக்குச் செல்வமுண்டாகுக—என வாழ்த்தலில் நன்மைதொடர் பொருளும், தீயோர்க்குக் கேடுண்டாகுக—என வைதலில் தீமைதொடர் பொருளும், பிறவும் இவ்வுருபின் பொருளாய் வரும் எனவும் கொள்க.

இக் குவ்வுருபு நிற்றற்குரிய சில இடங்களில், பொருட்டு, நிமித்தம் என்பனவும், குவ்வுருபின்மேல் ஆக என்பதும் சொல்லுருபுகளாக வரும்.

உ - ம்:—கூழின்பொருட்டு வேலை செய்தான்; கூலியின் நிமித்தம் வேலை செய்தான்; கூலிக்காக வேலை செய்தான்.

101. ஐந்தாம் வேற்றுமையினுடைய உருபுகள், இன், இல் என்பனவாம்.

இவை, வினையையும், வினையோடு பொருந்தும் பெயரையும், கொள்ளும்.

இவ் வுருபுகள், தம்மை யேற்ற பெயர்ப்பொருளை நீக்கப்பொருளாகவும், ஒப்புப்பொருளாகவும், எல்லைப் பொருளாகவும், ஏதுப் பொருளாகவும், வேறுபடுத்தும். அப் பெயர்ப்பொருள் வேறுபட்ட நீக்கப்பொருள் முத லியன இவ் வுருபுகளின் பொருள்களாம்.

நீக்கப் பொருளாவது, பிரிவை யுண்டாக்கும் தொழிலின்றிப் பிரிவைமாத்திரம் தன்னிடத்துடைய பொருளாம்.

உ - ம்:—மலையின் வீழருவி—என்பதில் அருவியின் வீழ் தல் பிரிவை யுண்டாக்கும் தொழில்; அது தன்னிடத் தில்லா மல் அவ் வீழ்தலால் உண்டாகிய பிரிவைமாத்திரம் தன்னிடத் துடைய பொருள் மலையாதலால், மலை நீக்கப்பொருளாம்.

ஒப்புப் பொருளாவது, உபமேயப்பொருளினும் தன்னினும் இருக்கிற பொதுத்தன்மையால், உபமான மாகும் பொருளாம்.

உ - ம்:—பாலின் வெளிது கொக்கு—என்பதில் கொக்கு உபமேயப்பொருளாம்; அவ் வுபமேயப் பொருளினும் தன்னி னும் உள்ள பொதுத்தன்மை வெண்மையாம்; அப் பொதுத் தன்மையால் உபமான மாகிய பொருள் பாலாதலால், பால் ஒப்புப்பொருளாம்.

எல்லைப்பொருளாவது, அறியப்படாத பொருளின் திசை முதலியவைகளை அறிவித்தற்கு எல்லையாய் நிற் கும் பொருளாம்.

உ - ம்:—கச்சியின் வடக்குள்ளது திருத்தணிகை—என்பதில் அறியப்படாத திருத்தணிகையின் திசையை யறிவித்தற்கு அறியப்பட்ட பொருளாகிய கச்சி எல்லைப்பொருளாதலால், கச்சி எல்லைப்பொருளாம்.

அன்றியும், இவ் வெல்லைப்பொருள், கச்சியின் முக்காவதத்துள்ளது திருத்தணிகை—என வழியளவிலும், அவனிலும் இரண்டாண்டு மூத்தவன் இவன்—எனக் காலவளவிலும் வருதல் காண்க.

ஏதுப் பொருளாவது, தொடரும் பொருளின் பெருமை முதலியவற்றிற்கு ஏதுவாகும் பொருளாம்.

உ - ம்:—கல்வியிற் பெரியன் அகத்தியன்—என்பதில் தொடரும் பொருளாகிய அகத்தியனது பெருமைக்குக் கல்வி ஏதுவாதலால், கல்வி ஏதுப்பொருளாம்.

அல்லாமலும், கடவுளிற் றோன்றிய துலகம்—என முதற்காரணப் பொருளிலும், மண்ணுலகின் வேறு விண்ணுலகம்—என வேற்றுமைக்கு எதிர்ப்பொருளிலும் வருதல் முதலியனவும் கொள்க.

இன், இல், உருபுகளின்மேல்—நின்று, இருந்து, என்பவை உம் பெற்றும் பெறாமலுஞ் சொல்லுருபுகளாய் வரும்.

உ - ம்:—ஊரினின்று போனான்; ஊரினின்றும் போனான்.
ஊரிலிருந்து போனான்; ஊரிலிருந்தும் போனான்.

102. ஆறும் வேற்றுமையினுடைய உருபுகள், அது, ஆது, அ, என்பனவாம்.

இவைகளில், அது, ஆது, என்னும் உருபுகள் அஃறிணை யொருமைப் பெயரையும், அ, என்னும் உருபு அஃறிணைப் பன்மைப் பெயரையும் கொள்ளும்.

உ-ம்:—சாத்தனது கை, தனது கை.
தன கைகள்.

இவ் வுருபுகள், தம்மை யேற்ற பெயர்ப்பொருள்களைச் சம்பந்தப் பொருளாக வேறுபடுத்தும். அப் பெயர்ப்பொருள் வேறுபட்ட சம்பந்தப்பொருளே இவ் வுருபுகளின் பொருள்களாம்.

சம்பந்தப் பொருளாவது, வருமொழிப் பொருளாகிய தற்கிழமைப் பொருளோடும், பிறிதின்கிழமைப் பொருளோடும், சம்பந்தமுடைய பொருளாம்.

அவைகளில், தற்கிழமைப் பொருளாவது, தனேனாடு ஒற்றுமையுடையது.

அது, உறுப்பும், பண்பும், தொழிலும், ஒன்றன் கூட்டமும், பலவினீட்டமும், ஒன்றுதிரிந் தொன்றாதலும், என அறுவகைப்படும்.

உ-ம்:—சாத்தனது கை —உறுப்பு.
சாத்தனது கருமை —பண்பு.
சாத்தனது வரவு —தொழில்.
நெல்லது குப்பை —ஒன்றன் கூட்டம்.
சேனையது தொகுதி —பலவின் ஈட்டம்.
நெல்லினது பொரி —ஒன்று திரிந்து ஒன்றாதல்.

பிறிதின்கிழமைப்பொருளாவது, தன்னின் வேறாயது.

அது, பொருள், இடம், காலம், என மூன்று வகைப்படும்.

உ - ம்:—முருகனது வேல் —பொருள்
முருகனது மலை —இடம்.
முருகனது கார்த்திகை—காலம்.

இவ் வுருபுகள் நிற்றற்குரிய இடங்களில், **உடைய** என்பது சொல்லுருபாக வந்து இருதிணை யொருமை பன்மைப் பெயர்களையும் கொள்ளும்.

உ - ம்:—சாத்தனுடைய புதல்வன்—உயர்திணை ஒருமை.
சாத்தனுடைய புதல்வர்—உயர்திணைப் பன்மை.
சாத்தனுடைய வீடு —அஃறிணை ஒருமை.
சாத்தனுடைய வீடுகள் —அஃறிணைப் பன்மை.

அன்றியும், சிறுபான்மை அது உருபு, அரனது தோழன், 'நினது அடியாரோடல்லால்,' என உயர் திணை யொருமை பன்மைப் பெயர்களையுங் கொள்ளு மெனவும் அறிக.

103. ஏழாம் வேற்றுமையினுடைய உருபுகள் **கண்**, **இல்**, **உள்**, **இடம்**, முதலியனவாம்.

இவை, வினையையும், வினையோடு பொருந்தும் பெயரையும் கொள்ளும்.

இவ் வுருபுகள், தம்மையேற்ற பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்ப்பொருள்களையும், இடப்பொருளாக வேறுபடுத்தும். அப் பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட இடப் பொருளே இவ் வுருபுகளின் பொருளாம்.

இடப்பொருளாவது, வருமொழிப் பொருளாகிய தற்கிழமைப் பொருளுக்காவது, பிறிதின்கிழமைப் பொருளுக்காவது இடமாய் நிற்கும் பொருளாம்.

உ-ம்:—மணியின்கண் இருக்கின்றது ஒளி. த. } பொருள்
பனையின்கண் வாழ்கின்றது அன்றில். பி. } இடம்.

ஊரின்கண் இருக்கும் இல்லம். த. } இடம்
ஆகாயத்தின்கண் பறக்கின்றது பருந்து. பி. } இடம்.

நாளின்கண் நாழிகை யுள்ளது. த. } காலம்
வேனிற்கண் பாதிரி பூக்கும். பி. } இடம்.

கையின்கண் உள்ளது விரல். த. } சினை
கையின்கண் விளங்குகின்றது கடகம். பி. } இடம்.

கறுப்பின்கண் மிக்குள்ளது அழகு. த. } குணம்
இளமையின்கண் வாய்த்தது செல்வம். பி. } இடம்.

ஆடற்கண் உள்ளது அபிநயம். த. } தொழில்
ஆடற்கண் பாடப்பட்டது பாட்டு. பி. } இடம்.

மற்றவைகளும் இப்படியே.

இவ் விடப்பொருள், வினைமுதல் வழியாக வினைமுதற் றொழிற்காவது, செயப்படு பொருளின் வழியாகச் செயப்படுபொருளி லிருக்கின்ற பயனுக்காவது, இடமாம் பொருளெனவும்படும்.

உ-ம்:—மணியின்கண் இருக்கின்றது ஒளி—என்னுமிடத்து ஒளி என்னும் வினைமுதலின் வழியாக அதனது இருத்தற் றொழிற்கு மணி இடமாம்.

கழுவின்கட் கள்ளனை யேற்றினான்—என்னுமிடத்துக் கள்ளன் என்னுஞ் செயப்படுபொருளின் வழியாக அச் செயப்படுபொருளி லிருக்கின்ற உயிர்ப்பிரிவாகிய பயனுக்குக் கழு இடமாம்.

104. எட்டாம் வேற்றுமையினுடைய உருபுகள், படர்க்கைப்பெயரீற்றில்,ஏ, ஓ, முதலியவை மிகுதலும் அவ் வீறு திரிதலும், கெடுதலும், இயல்பாதலும், ஈற்றயலெழுத்துத் திரிதலும் ஆம்.

இவை ஏவல் வினையைக் கொள்ளும்.

இவ் வுருபுகள், தம்மையேற்ற பெயர்ப்பொருளை விளிக்கப்படு பொருளாக வேறுபடுத்தும். அப் பெயர்ப் பொருள் வேறுபட்ட விளிக்கப்படு பொருளே இவ் வுருபுகளின் பொருளாம்.

விளிக்கப்படு பொருளாவது, படர்க்கைப்பெயர்ப் பொருள் அழைத்து ஏவப்படுவதாகும் பொருளாம்.

உ - ம்:—சாத்தனே கேளாய்—ஈற்றில் ஏ மிக்கது.
அப்பனே உண்ணாய்—ஈற்றில் ஓ மிக்கது.
வேனிலாய் கூறாய்—ஈறு திரிந்தது.
தோழ, சொல்லாய்—ஈறு கெட்டது.
பிதா வாராய் —ஈறு இயல்பாய் நின்றது.
மக்காள் கூறீர்—ஈற்றுஅயல் எழுத்துத் திரிந்தது.

105. நுமன், நுமள், நுமர் முதலிய கிளைப் பெயர்களும்; எவன் முதலிய வினாப்பெயர்களும்; அவன் முதலிய சுட்டுப்பெயர்களும்; தான், தாம் என்னும் பொதுப் பெயர்களும்; மற்றையான், பிறன் முதலிய மற்றுப் பிற என்பன அடியாகவரும் பெயர்களும் விளி கொள்ளாப் பெயர்களாம். இவை யொழிந்த பெயர்களெல்லாம் விளிகொள்ளும் பெயர்களாம்.

106. இவ் வேற்றுமை யுருபுகள் சிறு பான்மை மயங்கி ஒன்று நின்ற விடத்தில் மற்றொன்றும் வரும்.

உ-ம்:—ஆலத்தை யமிர்தாக்கிய கோன்-என்பது ஆலத்தினு லமிர்தாக்கிய கோன் எனவும், காலத்திற் செய்த நன்றி-என்பது காலத்தினுற் செய்தநன்றி எனவும், மயங்கி வந்தன.

மற்றவைகளு மிப்படியே. இவை இப்படி மயங்கிவரினும் பொருளுக் கேற்றபடி உருபைத் திரித்துக்கொள்க.

**107. ஒரு வேற்றுமைப்பொருள், மற்றொரு வேற்றுமை யுருபோடும் சிறுபான்மை வரும்.**

உ-ம்:—சாத்தனோடு சொன்னான்-என 4-ம்வேற்றுமைக் குரிய ஏற்றுக்கோடற்பொருள் மூன்றனுருபோடும், மதுரையை நீங்கினான் - என 5-ம் வேற்றுமைக்குரிய நீக்கப்பொருள் இரண்டனுருபோடும், மதுரைக்கு வடக்குச் சிதம்பரம் - என 5-ம் வேற்றுமைக்குரிய எல்லைப்பொருள் நான்கனுருபோடும், வழியைச் சென்றான் - என 7-ம் வேற்றுமைக்குரிய இடப் பொருள் இரண்டனுருபோடும், வந்தன.

மற்றும் இப்படி வருவனவற்றை ஆராய்ந் தறிந்துகொள்க.

**108. சிலவிடங்களில் ஐயுருபு இரண்டு இணைந்து வரவும் பெறும்.**

உ-ம்:—யானையைக் காலை வெட்டினான்.
பசுவினைப் பாலைக் கறந்தான்.
ஆசிரியனை ஐயுற்ற பொருளை வினாவினார்.

யானையைக் காலை வெட்டினான், பசுவினைப் பாலைக் கறந்தான்—என்றாற் போல்வன, யானையது காலை வெட்டினான், யானையைக் காலின்கண் வெட்டினான்; பசுவினின்றும் பாலைக் கறந்தான், என இரண்டு ஐ உருபினுள் ஒன்று நீங்கி வேறுருபு வரவும் பெறும்.

ஆசிரியனை ஐயுற்ற பொருளை வினாவினான், என்றாற் போல்வன இரண்டு ஐயுருபினுள் ஒன்று நீங்கவும் வேறுருபு வரவும் பெறா.

**109. செயப்படுபொருள் குன்றாத முதனிலைகளின்மேல், வி, பி, முதலிய பிறவினை விகுதிகளுள் ஒன்று வரும் வினைச்சொற்களிலே சில முடிக்குஞ்**

சொற்களாக வரின், அம் முதனிலைத் தொழிற்கு உரிய செயப்படு பொருளோடு இயற்றும் வினைமுதலும், இரண்டனுருபேற்று வருதலால், இரண்டு செயப்படு பொருள் வரும்.

உ - ம்:—அரசன் பகைவரைச் சிறைச் சாலையை அடைவித்தான்.

முடிக்குஞ் சொற்களாகவரும் அவ் வினைச்சொற் களுட் சிலவற்றின் இயற்றும் வினைமுதல் மூன்றனுரு பேற்று வினைமுதற்பொருளில் வருதலால், அப்படி வருபவற்றுக்கு இரண்டு செயப்படுபொருள் வாரா.

உ - ம்:—சாத்தன் ஆயனாற் பசுவைப் புரப்பித்தான்.
அரசன் தேவதத்தனாற் சோற்றை அடுவித்தான்.

110. செயப்படுபொருள் குன்றிய முதனிலைக ளின்மேல், வி, பி, முதலிய பிறவினை விகுதிகளுள் ஒன்று வரும் வினைச்சொற்கள் முடிக்குஞ் சொற்க ளாக வரின், இயற்றும் வினைமுத லொன்றே இரண்ட னுருபேற்றுச் செயப்படுபொருளாக வரும்.

உ - ம்:—சாத்தன் கொற்றனை நடப்பித்தான்.
தாய் மகவைத் தூங்குவித்தாள்.

111. யான், நான், என்னுந் தன்மை யொரு மைப் பெயர்களும்; யாம், நாம், என்னுந் தன்மைப் பன்மைப் பெயர்களும் ஐ முதலிய உருபுகளை ஏற்கு மிடத்து, என் எனவும் எம் எனவும் விகாரப்பட்டு உருபுகளை ஏற்று வரும்.

112. நீஎன்கிற முன்னிலை யொருமைப்பெய ரும், நீர் முதலிய முன்னிலைப் பன்மைப் பெயர்களும்

ஐ முதலிய உருபுகளை ஏற்குமிடத்து, நின் உன் எனவும், நும் உம் எனவும், விகாரப்பட்டு உருபுகளை ஏற்று வரும்.

உலகவழக்கில் வரும், யாங்கள், நாங்கள், என்னுந் தன்மைப் பன்மைப் பெயர்களும்; நீங்கள் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயரும் உருபுகளை ஏற்குமிடத்து, எங்கள் எனவும், உங்கள் எனவும், விகாரப்பட்டு உருபுகளை ஏற்று வரும்.

113. தான், தாம், என்கிற படர்க்கைப்பெயர்கள், தன் தம் என விகாரப்பட்டு உருபுகளை ஏற்று வரும்.

114. உயிரையும், மெய்யையும், குற்றியலுகரத்தையும் ஈறுகவுடைய பெயர்ச்சொற்கள் இன் உருபொழிந்த உருபுகளை யேற்குமிடத்துப் பெரும்பாலும் இன் சாரியை பெறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ - ம்:— | கிளியினை. | பொன்னினை. | நாகினை. | (ஐ) |
| | கிளியினால். | பொன்னினால். | நாகினால். | (ஆல்) |
| | கிளியிற்கு. | பொன்னிற்கு. | நாகிற்கு. | (கு) |
| | கிளியினது. | பொன்னினது. | நாகினது. | (அது) |
| | கிளியின்கண். | பொன்னின்கண். | நாகின்கண். | (கண்) |

இப் பெயர்கள், குவ்வுரு பேற்குமிடத்துக் கிளியினுக்கு, நாகினுக்கு, என இன்சாரியையோடு உகரச்சாரியையும்; பொன்னுக்கு, மண்ணுக்கு, என இன்சாரியையின்றி உகரச்சாரியையும் பெறுமெனவுங்கொள்க. மற்றவைகளும் இப்படியே.

**115. அது, இது, உது, என்னுஞ் சுட்டுப்பெயர்களும், எது, ஏது, யாது, என்னும் வினுப் பெயர்களும், உருபேற்குமிடத்து அன்சாரியையும், சிறுபான்மை இன்சாரியையும் பெறும்.**

உ - ம்:—*அதனை, அதனுல், அதிஞல்; இதனை, இதனுல், இதிஞல்; எதனை, எதனுல், எதிஞல்.*

மற்றவைகளும் இப்படியே.

இவை, சிறுபான்மை அதை, இதை, எதை, எனச் சாரியை பெருமலும் வரும்.

**116. அவை, இவை, உவை, எவை, கரியவை, நெடியவை, முதலிய ஐகாரவீற்று அஃறிணைப் பன்மைப்பெயர்கள் உருபேற்குமிடத்து ஈற்று ஐகாரங் கெட்டு அற்றுச்சாரியை பெறும்.**

உ - ம்:—*அவற்றை, இவற்றை, உவற்றை, எவற்றை, கரியவற்றை, நெடியவற்றை.*

மற்ற உருபுகளோடும் இப்படியே ஒட்டிக்கொள்க.

அவையிற்றை, இவையிற்றை, எவையிற்றை, எனச் சிறுபான்மை ஐகாரங்கெடாமல் இற்றுச்சாரியை பெறுமெனவுங் கொள்க.

**117. பல, சில, சிறிய, பெரிய, அரிய, முதலிய அகரவீற்று அஃறிணைப் பன்மைப்பெயர்கள் உருபேற்குமிடத்து அற்றுச்சாரியை பெறும்.**

உ - ம்:—*பலவற்றை, சிலவற்றை, சிறியவற்றை, பெரியவற்றை, அரியவற்றை.*

மற்ற உருபுகளோடும் இப்படியே ஒட்டிக்கொள்க.

118. ஆ, மா, கோ, என்னும் இம் மூன்று பெயர்களும் உருபேற்கு மிடத்து இன் சாரியையாவது, னகரச் சாரியை யாவது பெற்றும்,இச் சாரியைகளைப் பெறாமலும், வரும்.

உ - ம்:—ஆவினை, மாவினை, கோவினை.
ஆனை, மானை, கோனை.
ஆவை, மாவை, கோவை.

119. மகாவீற்றுப் பெயர்ச்சொற்கள் உருபேற்குமிடத்து அத்துச்சாரியை பெறும். பெறுமிடத்து ஈற்று மகரமும், சாரியை முதல் அகரமுங் கெடும்.

உ - ம்:—மரத்தை, மரத்தால், மரத்துக்கு.

அன்றியும், மரத்தினை,மரத்தினால், என அவ்வத்துச்சாரியையின்மேல் இன் சாரியையும், மரத்தினுக்கு என குவ்வுருபு புணருமிடத்து அவ் விரு சாரியையின்மேல் உகரச்சாரியையும், வரும்.

120. எல்லாம் என்னுஞ் சொல் அஃறிணைப் பொருளில் உருபேற்குமிடத்து மகரங்கெட்டு அற்றுச் சாரியையும் உயர் திணைப்பொருளில்உருபேற்குமிடத்து நம்முச்சாரியையும் பெறும்.

உ - ம்:—எல்லாவற்றையும். எல்லாவற்றாலும். எல்லா நம்மையும். எல்லாநம்மாலும்.

121. எல்லார் என்னுஞ் சொல், உருபேற்குமிடத்து,தம்முச்சாரியையும்,எல்லீர் என்னுஞ் சொல், உருபேற்குமிடத்து, நும்முச்சாரியையும், பெறும்.

உ - ம்:—எல்லார்தம்மையும்.
எல்லீர்நும்மையும்.

**122. இவ்வாறு, உருபுபுணர்ச்சிக்குக் கூறிய முடிபுகள் உருபு தொக்க பொருட்புணர்ச்சிக்கண்ணும் வரும்.**

உ - ம்:—என்கை, எங்கை, நின்கை, உன்கை, நுங்கை, உங்கை, தன்கை, தங்கை; கிளியின் கால், கொக்கின் கண், பலவற்றுக்கோடு, ஆவின் கொம்பு, மரத்துக்கிளை, எல்லாவற்றுக்கோடு.

பெயர்ச்சொல்லியல் முற்றிற்று.

---

## வினைச்சொல்லியல்.

---

**123. வினைச்சொற்களாவன, வேற்றுமை ஏற்காமல், காலத்தைக் கொண்டு பொருளது புடைபெயர்ச்சியாகிய தொழிலை உணர்த்திவருஞ் சொற்களாம்.**

**தொழிலாவது, வினைமுதல், கருவி, இடம், செயல், காலம், செயப்படுபொருள், என்னும் இவ்வாறுங் காரணமாகவும், இவற்றுட் சில காரணமாகவுந் தோன்றுவனவாம்.**

உ - ம்.—வனைந்தான் - என்பதில் குயவனாகிய வினைமுதலும், மண்ணாகிய முதற்கருவியும், தண்டசக்கரமுதலாகிய துணைக்கருவிகளும், வனைந்த இடமும், வனைதலாகிய செயலும், இறந்தகாலமும், குடமுதலிய செயப்படுபொருளும், ஆகிய இவ் வாறு காரணங்களும் வந்தன.

கொடியாடிற்று - என்பதில் ஆடுதல் வினைக்குச் செயப்படுபொருள் குறைந்து வந்தது.

124. **இவ் வினைச் சொற்கள் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம், என்னும் இவ் வாறுறுப்பினுள் பகுதி விகுதி என்னும் இரண்டு முதலாக ஏற்கும் உறுப்புக்களைப்பெற்று வினைப்பகுபதம் எனப்பட்டு வரும். பகுதி எனினும் முதனிலையெனினும் ஒக்கும். விகுதி யெனினும் இறுதிநிலை யெனினும் ஒக்கும்.**

**உ - ம்.**—கேளாய்-என்பது, கேள், ஆய், எனப் பகுதி விகுதி இரண்டு பெற்றது.

உண்டான் - என்பது, உண், ட், ஆன், என அவ்விரண்டுடன் இடைநிலையும் பெற்றது.

உண்டனன் - என்பது உண், ட், அன், அன், என அம்மூன்றுடன் சாரியையும் பெற்றது.

பிடித்தனன் - என்பது, பிடி, த், த், அன், அன், என அந் நான்குடனே சந்தியும் பெற்றது.

நடந்தனன் - என்பது, நட, த், த், அன், அன், என அவ்வைந்தும் பெற்றுச் சந்தியால்வந்த தகர வல்லொற்று மெல்லொற்றாத லாகிய விகாரமும் பெற்றது.

125. **பகுதிகளாவன, எல்லா வினையும் பிறப்பதற்கு மூலமாய் வினைப் பகுபதங்களிலே முதனிலையாய்வரும் பகாப் பதங்களாம்.**

**இம் முதனிலையாகிய பகாப்பதங்கள் அவை யுண்டாக்கப்பட்ட காலந்தொடங்கி ஒரு தன்மையவாய் நிற்குந் தனிவினைப் பெயர்களாம்.**

**உ - ம்:**—(பகுதி) (பகுதியடியாகப் பிறந்த வினைப்பகுபதம்)

நட — நடந்தான்.
வா — வந்தான்.
நில் — நின்றான்.

காண் — கண்டான்.
சா — செத்தான்.
பேசு — பேசினன்.

126. விகுதிகளாவன, முற்றுப் பகுபதங்களில் இருதிணையையும், ஐம்பாலையும், ஈரெண்ணையும், மூவிடத்தையும் உணர்த்தியும்; எச்சப் பகுபதங்களில் இவைகளை உணர்த்தாமலும், இறுதி நிலையாய் வருபவைகளாம்.

| உ-ம்:— | (பகுபதம்) | (விகுதி) |
|---|---|---|
| | நடந்தனன் — நடந்தான். | அன் — ஆன். |
| | நடந்தனள் — நடந்தாள். | அள் — ஆள். |
| | நடந்தனர் — நடந்தார். | அர் — ஆர். |
| | நடந்தது — நடந்தன. | து — அ. |
| | நடந்தேன் — நடந்தேம். | ஏன் — ஏம். |
| | நடந்தாய் — நடந்தீர். | ஆய் — ஈர். |
| | நடந்த — நடக்கின்ற. | அ — அ. |
| | நடந்து — நடக்க. | உ — அ. |
| | நடக்கும் — நடக்கின். | உம் — இன். |

127. இடைநிலைகளாவன, அப் பகுபதங்களிலே பகுதிக்கும் விகுதிக்கும் நடுவிலே முக்காலங்களுள் ஒன்றை உணர்த்தி வருபவையாம்.

128. முக்காலங்களாவன, இறப்பு, நிகழ்வு, எதிர்வு, என்பனவாம்.

இறப்பாவது, தொழிலது கழிவு. நிகழ்வாவது, தொழில் தொடங்கப்பட்டு முடிவுபெறாத நிலைமை. எதிர்வாவது, தொழிற் பிறவாமை.

129. இறந்தகால இடை நிலைகளாவன, த், ட், ற், இன், என்பனவாம்.

| உ - ம்:— | (பகுபதம்) | (இடைநிலை) |
|---|---|---|
| | நடந்தான், அடித்தான் | —த். |
| | கண்டான், கேட்டான் | —ட். |
| | நின்ருன், கொன்ருன் | —ற். |
| | கூவினன், பேசினன் | —இன். |

அன்றியும், இன்இடைநிலை, எஞ்சியது (எஞ்ச+இ[ன்]+அது), எனக் கடைகுறைந்தும், போனது (போ+[இ]ன்+அது), என முதல் குறைந்தும், போயது (போ+ய்+அது), என யகரமெய் இறந்தகாலங் காட்டியும், வரும்.

130. நிகழ்கால இடைநிலைகளாவன, கின்று, கிறு, ஆநின்று, என்பனவாம்.

| உ - ம்:— | (பகுபதம்) | (இடைநிலை) |
|---|---|---|
| | நடக்கின்ருன், கொடுக்கின்ருன் | —கின்று. |
| | நடக்கிருன், கொடுக்கிருன், | —கிறு. |
| | நடவாநின்ருன், கொடாநின்ருன் | —ஆநின்று. |

131. எதிர்கால இடைநிலைகளாவன, ப், வ், என்பனவாம்.

| உ - ம்:— | (பகுபதம்) | (இடைநிலை) |
|---|---|---|
| | நடப்பான், படிப்பான் | —ப். |
| | செய்வான், வருவான் | —வ். |

132. சாரியைகளாவன, இடைச்சொல்லியலிலே கூறப்படுவன வாகிய, அன், அ, உ, கு, து, முதலியனவாம்.

உ-ம்:—அன்—நடந்தனன்,
அ —நடந்தது,
உ —உண்ணுவான்,
கு —உய்குவாய்,
து —அடித்துக்கொண்டான்.

133. சந்திகளாவன, மேற் புணர்ச்சியதிகாரத்திற் சொல்லப்படுவனவாகிய தோன்றல், திரிதல், கெடுதல் என்பனவாம்.

134. விகாரங்களாவன, மெல்லின மெய்யை வல்லினமெய்யாக்கலும், வல்லினமெய்யை மெல்லின மெய்யாக்கலும், குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும், நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும், இல்லாதவெழுத்தை வருவித்தலும், உள்ளவெழுத்தை நீக்கலும் ஆம். இச் சந்திவிகாரங்கள் பதமுடிபு கூறுமிடத்தில் காட்டப்படும்.

135. மேற்கூறிய வினைப்பகுதிகளில், தொழு உண் என்பனபோன்ற சில பகுதிகள், தொழுதான் உண்டான் என விகுதி முதலியவற்றோடு புணருமிடத்து, இயல்பாத லல்லாமல்; செல்-சேறல், கொள்-கோடல், என முதனீண்டும்; தா-தந்தான், வா-வந்தான், என முதற்குறுகியும்; தா-தருகிறான், வா-வருகிறான், என முதற்குறுகுதலுடனே, ருகர உயிர்மெய் விரியப்பெற்றும்; சா-செத்தான், என ஆகாரம் எகாரமாகத் திரிந்தும்; விரவு-விராவினான், என நடுக்குறில் நீண்டும்; முழுகு-முழ்கினான், மூழ்கினான், என இயல்பும் விகாரமுமாக உறழ்ந்தும்; கல்- கற்றான், கேள்-கேட்டான்,என ஈற்றுமெய் வருமெய்யாகத் திரிந்

தும்; நில்-நின்ருன், கொள்-கொண்டான், என ஈற்று மெய் வருமெழுத்திற்கு இனமாகத் திரிந்தும்; புகு-புக்கான், விடு-விட்டான், உறு-உற்ருன், என இறந்த காலத்திலே, ககர டகர றகர மெய்கள் இரட்டித்தும்; இன்னும் பலவாறு சந்திவிகாரங்களைப் பெற்றும் வரும்.

136. பகுதி விகுதி முதலிய உறுப்புகளாலே வினைப்பகுபதம் முடிக்குமாறு:

'நடந்தனன்' என்னும் இறந்தகால வினைமுற்றுப் பகுபதத்தை முடிக்குமிடத்து, நட என்னும் பகுதியை முதலில் வைத்து, அன் என்னும் விகுதியை அதன்பின் வருவித்து, நட+அன் என வைத்து—இறந்தகாலங் காட்டுந் தகர இடைநிலையை அவ்விரண்டுக்கும் இடையிலே வருவித்து, நட+த்+அன் என வைத்து—அன்சாரியையை இடைநிலைக்கும் விகுதிக்கும் நடுவிலே வருவித்து, நட+த்+அன்+அன் என வைத்து—மெய்ம்மே லுயிர்வந் தொன்றும் என்பதனுல் இடைநிலைத் தகர மெய்யின்மேல் சாரியை அகரத்தையேற்றி, நட+தன்+அன் எனவைத்து—சாரியையீற்று னகர மெய்யின்மேல் விகுதி அகரத்தையேற்றி, நட+தனன் எனவைத்து-அகர உயிரீற்றின்முன்வரும் வல்லினம் மிகும் என்பதனுல், இடைநிலைத் தகரத்தை மிகுவித்து, நடத்தனன் என வைத்து—வல்லின மெய்யை மெல்லினமெய் யாக்கலும் என்பதனுலே, மிகுந்த தகர வல்லொற்றை நகர மெல்லொற்ருக்கி, நடந்தனன் என முடிக்க.

'வருகின்றனன்' என்னும் நிகழ்கால வினைமுற்றுப் பகுபதத்தை முடிக்குமிடத்து, வா என்னும் பகுதியை முதலில் வைத்து—அன் என்னும் விகுதியை அதன்பின் வருவித்து, வா + அன் என வைத்து—நிகழ் காலங்காட்டும் கின்று என்னும் இடைநிலையை அவ்விரண்டற்கும் நடுவில் வருவித்து, வா + கின்று + அன் எனவைத்து—அன்சாரியையை இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வருவித்து, வா + கின்று + அன் + அன்எனவைத்து—உயிர்வந்தால் குற்றியலுகரங்கெடும் என்பதனால், இடைநிலையீற்று உகரத்தைக் கெடுத்து உகரங்கெட்ட றகரமெய்யின்மேல் சாரியை அகரத்தையும், சாரியையீற்று னகரமெய்யின்மேல் விகுதி அகரத்தையும் ஏற்றி, வா + கின்றனன் எனவைத்து—நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும் என்பதனால், வா என்னும் பகுதியை வ எனக் குறுக்கி, வ + கின்றனன், என வைத்து—இல்லாத எழுத்தை வருவித்தலும் என்பதனால் ருகரஉயிர்மெய்யைப் பகுதிக்கும் இடைநிலைக்கும் நடுவில் வருவித்து, வருகின்றனன் என முடிக்க.

'உண்ணுவான்' என்னும் எதிர்கால வினைமுற்றுப் பகுபதத்தை முடிக்குமிடத்து உண் என்னும் பகுதியை முதலில் வைத்து—ஆன் என்னும் விகுதியை அதன்பின் வருவித்து, உண் + ஆன் என வைத்து—எதிர் காலங்காட்டும் வ் என்னும் இடைநிலையை அவ்விரண்டற்குமிடையில் வருவித்து, உண் + வ் + ஆன் என வைத்து-இடைநிலை வகரமெய்யின்மேல் விகுதி ஆகார உயிரை யேற்றி, உண் + வான் என வைத்து—உ என்னுஞ் சாரியையைப் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவித்து, உண் + உ + வான் என வைத்து-உயிர்வரின்

தனிக்குற்றெழுத்தைச் சேர்ந்த மெய் இரட்டும் என்பதனால் உண்ண் எனப் பகுதியீற்று ணகரமெய்யை இரட்டுவித்து, இரட்டித்த ணகரமெய்யின்மேலே சாரியை உகர உயிரையேற்றி, உண்ணுவான் என முடிக்க.

'நடப்பித்தான்' என்னும் பிறவினைப் பகுபதத்தை முடிக்குமிடத்து, நட என்னும் பகுதியை முதலில் வைத்து—பி என்னும் பிறவினை விகுதியை அதன் பின் வருவித்து விகுதிப் பகரத்தை மிகுவித்து, ஓர் பகுதியாக்கி, நடப்பி என வைத்து—அதன் பின் ஆன் விகுதியை வருவித்து, நடப்பி + ஆன் என வைத்து—இவ்விரண்டற்கும் இடையே தகர இடைநிலையை வருவித்து, இடைநிலைத் தகர மெய்யின்மேல் விகுதி ஆகாரத்தையேற்றி, நடப்பி + தான் என வைத்து—இடைநிலைத் தகரத்தை மிகுவித்து, நடப்பித்தான் என முடிக்க.

'அடிக்கப்பட்டான்' என்னும் செயப்பாட்டுவினை முற்றுப் பகுபதத்தை முடிக்குமிடத்து, அடி என்னும் பகுதியை முதலில் வைத்து—செயப்படுபொருளை உணர்த்தும் படு என்னும் விகுதியை அதன் பின் வருவித்து, அடி + படு என வைத்து—அவற்றிற் கிடையே குகரச்சாரியையையும் அகரச்சாரியையையும் வருவித்து, அடி + கு + அ + படு என வைத்து—குகரச்சாரியையின் உகரத்தைக் கெடுத்து உகரங்கெட்ட ககரமெய்யின்மேலே சாரியை அகரத்தை யேற்றி, அடி + க + படு என வைத்து—சாரியைக் ககரத்தையும், விகுதிப் பகரத்தையும் மிகுவித்து ஓர் பகுதியாக்கி, அடிக்கப்படு என வைத்து—ஆன்விகுதியை அதன்பின் வருவித்து,

படு என்பதனுடைய உகரமூர்ந்த டகரமெய்யை இரட்டுவித்து, உகர உயிரைக் கெடுத்து, உகரங் கெட்ட டகர மெய்யின்மேல் விகுதி ஆகாரத்தை யேற்றி, அடிக்கப்பட்டான் என முடிக்க.

'அடித்த' என்னும் இறந்தகாலப் பெயரெச்சப் பகுபதத்தை முடிக்குமிடத்து, அடி என்னும் பகுதியை முதலினும், அ என்னும் விகுதியை இறுதியினும், இறந்த காலங்காட்டுந் தகர இடைநிலையை அவ்விரண்டற்கும் இடையினும், அடி + த் + அ என வைத்து—இடைநிலைத் தகரமெய்யின்மேல் விகுதி அகரத்தை யேற்றி, இடைநிலைத் தகரத்தை மிகுவித்து, அடித்த என முடிக்க.

'அடிக்கின்ற' என்னும் நிகழ்காலப் பெயரெச்சப் பகுபதத்தை முடிக்குமிடத்து, அடி என்னும் பகுதியை முதலினும், அ என்னும் விகுதியை இறுதியினும், கின்று என்னும் நிகழ்கால இடைநிலையை அவ்விரண்டற்கும் இடையினும், அடி + கின்று + அ என வைத்து—இடைநிலையீற்று உகரத்தைக் கெடுத்து, உகரங் கெட்ட றகரமெய்யின்மேல் விகுதி அகர உயிரை யேற்றி, இடைநிலைக் ககரத்தை மிகுவித்து, அடிக்கின்ற என முடிக்க.

'அடிக்கும்' என்னும் எதிர்காலப் பெயரெச்சப் பகுபதத்தை முடிக்குமிடத்து, அடி என்னும் பகுதியை முதலினும், உம் என்னும் விகுதியை இறுதியினும், கு என்னுஞ் சாரியையை அவ்விரண்டற்கும் இடையினும், அடி + கு + உம் என வைத்து—சாரியையீற்று உகரத்தைக் கெடுத்து, உகரங்கெட்ட ககரமெய்யின்

மேல் விகுதி உகரத்தை யேற்றி, சாரியைக் ககரத்தை மிகுவித்து, அடிக்கும் என முடிக்க.

'நின்று' என்னும் இறந்தகால வினையெச்சப் பகுபதத்தை முடிக்குமிடத்து, நில் என்னும் பகுதியை முதலினும், உ என்னும் விகுதியை இறுதியினும், இறந்தகாலங்காட்டும் றகரமெய்யை அவ்விரண்டற்கும் இடையினும், நில்+ற்+உ என வைத்து—இடைநிலை றகரமெய்யின்மேல் விகுதி உகரத்தை யேற்றி, பகுதியீற்று லகரமெய்யை இடைநிலை றகரமெய்க்கு இனமாகிய னகரமெய்யாகத் திரித்து, நின்று என முடிக்க.

'நிற்க' என்னும் முக்காலத்திற்கும் உரிய வினையெச்சப் பகுபதத்தை முடிக்குமிடத்து, நில் என்னும் பகுதியை முதலினும், அ என்னும் விகுதியை இறுதியினும்,குகரச்சாரியையை அவ்விரண்டற்கும் இடையினும், நில்+கு+அ என வைத்து—சாரியை யீற்று உகரத்தைக் கெடுத்து; உகரங்கெட்ட ககரமெய்யின் மேல் விகுதி அகரத்தையேற்றி,வல்லினம்வரின் லகரம் றகரமாய்த் திரியும் என்பதனுல் பகுதியீற்று லகரமெய்யை றகரமெய்யாகத் திரித்து, நிற்க என முடிக்க.

'நிற்கின்' என்னும் எதிர்கால வினையெச்சப் பகுபதத்தை முடிக்குமிடத்து, நில் என்னும் பகுதியை முதலினும், இன் என்னும் விகுதியை இறுதியினும், குகரச்சாரியையை அவ்விரண்டற்கும் இடையினும், நில்+கு+இன் என வைத்து—சாரியையீற்று உகரத்தைக் கெடுத்து, உகரங்கெட்ட ககர மெய்யின்மேல் விகுதி இகரத்தையேற்றி, பகுதியீற்று லகர மெய்யை றகரமெய்யாகத் திரித்து, நிற்கின் என முடிக்க.

மற்றைய பகுபதங்களையும் இவ்வாறே முடித்துக் கொள்க.

137. இவ்வாறு பகுபதங்களாய் வரும் வினைச் சொற்கள், முற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும் என மூன்றுவகைப்பட்டுத் திணை, பால், எண், இடம் இவைகளில் ஒன்றற்குரியவாயும், பலவற்றிற் குரியவாயும் வரும்.

இம் மூவகை வினைச்சொற்களும், உடன்பாட்டிலும், எதிர்மறையினும், தெரிநிலையாயும் குறிப்பாயும் வருமெனக் கொள்க.

உடன்பாட்டு வினைகளாவன, தொழிலினது நிகழ்ச்சியை உணர்த்துவன.

தெரிநிலை வினைகளாவன, காலத்தை வெளிப் படையாக உணர்த்துவன.

138. இம் மூன்றனுள், முற்றுவினைச்சொற்கள் பால்காட்டும் விகுதிகளோடுகூடி முற்றிநின்று, பெயரைக் கொண்டு முடிவனவாய் வருவனவாம்.

139. இம் முற்று வினைச்சொற்கள்—படர்க்கை வினைமுற்று, தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, செய்யுமென்னும் வினைமுற்று என அறுவகைப்படும்.

140. படர்க்கைவினைமுற்று—ஆண்பால் வினைமுற்று, பெண்பால் வினைமுற்று, பலர்பால் வினைமுற்று, ஒன்றன்பால் வினைமுற்று, பலவின்பால் வினைமுற்று என ஐந்துவகைப்படும்.

141. அன், ஆன், என்னும் விகுதிகளை இறுதியிலே பெற்றுவரும் வினைச் சொற்கள், உயர்திணை யாண்பா லொருமைப் படர்க்கை வினைமுற்றுகளாம். (விகுதி)

உ - ம்:—நடந்தனன், நடக்கின்றனன், நடப்பன். —அன்.
நடந்தான், நடக்கின்றான், நடப்பான். —ஆன்.

142. அள், ஆள், என்னும் விகுதிகளை இறுதியிலே பெற்றுவரும் வினைச்சொற்கள், உயர்திணைப் பெண்பா லொருமைப் படர்க்கை வினைமுற்றுகளாம். (விகுதி)

உ - ம்:—நடந்தனள், நடக்கின்றனள், நடப்பள். —அள்.
நடந்தாள், நடக்கின்றாள், நடப்பாள். —ஆள்.

143. அர், ஆர், என்னும் விகுதிகளை இறுதியிலே பெற்றுவரும் வினைச்சொற்கள், உயர்திணைப் பலர்பாற் படர்க்கை வினைமுற்றுகளாம்.

(விகுதி)

உ - ம்:—நடந்தனர், நடக்கின்றனர், நடப்பர். —அர்.
நடந்தார், நடக்கின்றார், நடப்பார். —ஆர்.

இவ் விகுதிகளன்றி, நடப்ப நடமார் என, ப மார் விகுதிகள், செய்யுளிலே பலர்பாலையும், எதிர்காலத்தையும் உணர்த்திவரு மெனவுங் கொள்க.

நடப்ப நடமார் என்பவைகளின் பொருள், நடப்பார், என்பதாம்.

144. து று என்னும் விகுதிகளை இறுதியிலே பெற்றுவரும் வினைச்சொற்கள், அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்றுகளாம்.

(விகுதி)

உ - ம் :—நடந்தது, நடக்கின்றது, நடப்பது.—து.
போயிற்று. —று.

து விகுதி முக்கால இடைநிலையோடும், று விகுதி இறந்தகால இடைநிலையோடும் வருமென்றறிக.

145. அ என்னும் விகுதியை இறுதியிலே பெற்றுவரும் வினைச்சொற்கள், அஃறிணைப் பலவின் பாற் படர்க்கை வினைமுற்றுகளாம்.

(விகுதி)

உ - ம்:—நடந்தன, நடக்கின்றன, நடப்பன.—அ.

146. தன்மைவினைமுற்று—தன்மை யொருமை வினை முற்று, தன்மைப் பன்மைவினைமுற்று என இருவகைப்படும்.

147. என், ஏன், அன் என்னும் விகுதிகளை இறுதியிலே பெற்றுவரும் வினைச்சொற்கள், தன்மை யொருமை வினைமுற்றுகளாம்.

(விகுதி)

உ - ம்:—நடந்தனென், நடக்கின்றனென், நடப்பென்.—என்.
நடந்தேன், நடக்கின்றேன், நடப்பேன்.—ஏன்.
நடந்தனன், நடக்கின்றனன், நடப்பன். —அன்.

இவை யல்லாமற் செய்யுளில், அல், கு, டு, து, று என்னும் இவ்வைந்து விகுதிகளும் வரும்.

உ - ம்:—உண்பல்—அல், உண்கு—கு, உண்டு—டு, வந்து, வருது—து, சென்று, சேறு—று.

இவைகளில், உண்பல் உண்கு என்பவற்றிற்கு உண்பேன் என்பதும் ; உண்டு என்பதற்கு உண்

டேன் என்பதும்; வந்து என்பதற்கு வந்தேன் என்பதும் ; வருது என்பதற்கு வருவேன் என்ப தும் ; சென்று என்பதற்குச் சென்றேன் என்பதும் ; சேறு என்பதற்குச் செல்வேன் என்பதும் பொரு ளாம். இப் பொருளின்படி அவை காட்டுங் காலங்களை யும் அறிக.

148. அம், ஆம், எம், ஏம், ஓம் என்னும் விகுதிகளை இறுதியிலே பெற்றுவரும் வினைச்சொற் கள், தன்மைப் பன்மை வினை முற்றுகளாம்.

(விகுதி)

உ - ம் :—நடந்தனம், நடக்கின்றனம், நடப்பம். —அம்.
நடந்தாம், நடக்கின்றாம், நடப்பாம். —ஆம்.
நடந்தனெம், நடக்கின்றனெம், நடப்பெம். —எம்.
நடந்தேம், நடக்கின்றேம், நடப்பேம். —ஏம்.
நடந்தோம், நடக்கின்றோம், நடப்போம்.—ஓம்.

இவை தனித் தன்மைப் பன்மையாய் வருத லல் லாமலும், நடந்தனம் யானும்நீயும்—என முன்னிலை யாரையும்; நடந்தனம் யானுமவனும்—எனப் படர்க் கையாரையும்;நடந்தனம் யானும்நீயும் அவனும்—என அவ்வீரிடத்தாரையும் உளப்படுத்தி உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாயும் வரும்.

இவையல்லாமலும், செய்யுளில் கும், டும், தும், றும் என்னும் இந் நான்கு விகுதிகளும் வரும்.

உ - ம் :—உண்கும்—கும், உண்டும்—டும், வந்தும், வருதும்—தும், சென்றும், சேறும்—றும்.

இவற்றிற்கு முறையே, உண்போம், உண்டோம், வந்தோம், வருவோம், சென்றோம், செல்வோம் என்பன பொருளாம். இப் பொருளின்படி அவ் விகுதிகள் காட்டுங் காலங்களையும் அறிக.

149. முன்னிலைவினைமுற்று—முன்னிலை யொருமை வினைமுற்று, முன்னிலைப் பன்மை வினைமுற்று என இருவகைப்படும்.

150. ஐ, ஆய், இ என்னும் விகுதிகளை இறுதியிலே பெற்றுவரும் வினைச்சொற்கள், முன்னிலை யொருமை வினைமுற்றுகளாம்.

(விகுதி).

உ - ம்:—உண்டனை, உண்கின்றனை, உண்பை.—ஐ.
உண்டாய், உண்கின்றாய், உண்பாய்.—ஆய்.
உண்டி, உண்கின்றி, சேறி, —இ.

151. இர் ஈர் என்னும் விகுதிகளை இறுதியிலே பெற்றுவரும் வினைச்சொற்கள், முன்னிலைப் பன்மை வினைமுற்றுகளாம்.

உ - ம்:—உண்டனிர், உண்கின்றனிர், உண்பிர்.—இர்.
உண்டீர், உண்கின்றீர், உண்பீர். —ஈர்.

இவை, தனியே வருதலு மல்லாமல், உண்டீர் நீயு மவனும்—எனப் படர்க்கையாரையும் உளப்படுத்திக்கொண்டும் வரும்.

152. ஏவல்வினைமுற்று—ஏவ லொருமை வினைமுற்று, ஏவற் பன்மை வினைமுற்று என இருவகைப்படும்.

ஏவலாவது, முன்னிலை யிடத்தாரை இதுசெய்க என்று விதித்தலாம்.

153. ஏவலொருமைவினைமுற்றுகள், ஆய், இடு, இரு, உ முதலிய விகுதிகளை இறுதியிலே பெற்றும், இவ் விகுதி புணர்ந்துகெட்டுப் பகுதிமாத்திரையாய் நின்றும் வரும் வினைச்சொற்களாம்.

| | | (விகுதி) | |
|---|---|---|---|
| உ-ம்:—நடவாய் | செய்யாய். | —ஆய். | விகுதி பெற்று வந்தன. |
| நடந்திடு | வந்திடு. | —இடு. | |
| எழுந்திரு | படுத்திரு. | —இரு. | |
| வாரு | அருளு. | —உ. | |
| நடப்பியாய். | செய்வியாய். | —ஆய் | |

நட, வா, எழு, செய்.—விகுதி கெட்டு வந்தன.

154. ஏவற் பன்மை வினைமுற்றுகள், உம், மின் என்னும் விகுதிகளை இறுதியிலே பெற்றுவரும் விகுதி வினைச்சொற்களாம்.

| | | (விகுதி) |
|---|---|---|
| உ-ம்:—செய்யும், | உண்ணும் | —உம். |
| செய்மின், | உண்மின் | —மின். |

இவை, செய்யுங்கள், உண்ணுங்கள் என உலக வழக்கில், உம் விகுதிமேல் கள் விகுதி பெற்று வருதலுங் கொள்க.

155. வியங்கோள் வினைமுற்றுகள், க, இய, இயர், அல், என்னும் விகுதிகளை இறுதியிலே பெற்று வரும் வினைச்சொற்களாம்.

வியங்கோளாவது, ஐம்பால் மூவிடங்களினும் செல்லும் ஏவலாம்.

(விகுதி)

உ-ம்:—வாழ்க, உண்க —க.
வாழிய, உண்ணிய —இய.
வாழியர், உண்ணியர் —இயர்.
கொளல், எனல் —அல்.

கொளல் என்பதற்குக் கொள்க என்பதும்; எனல் என்பதற்கு என்க என்பதும் பொருளாம்.

அன்றியும் சிறுபான்மை இவை, வாழ்வானாக, வாழ்வாளாக, வாழ்வாராக—எனவும்; வாழக்கடவன், வாழக்கடவள், வாழக்கடவர்—எனவும் இக்காலத்து உலகவழக்கிலே பாலிடங்களில் ஒன்றற்கு உரியவாய் வருமெனவுங் கொள்க.

இவை, அவன் உண்க, நீ வருக—என உயர்ந்தோன் இழிந்தோனை விதித்தற்பொருளிலும்; எம்மைக் காத்தருள்க, ஒரு சொற் கேட்க—என வேண்டிக் கொள்ளுதற் பொருளிலும்; அந்தணர் வாழ்க, அரசர் வாழ்க—என வாழ்த்துதற் பொருளிலும், அத் தீயோன் கெடுக—என வைதற் பொருளிலும் வரும்.

மேற்கூறிய ஏவல் விகுதிகளும், இவ் வியங்கோள் விகுதிகளும் தாமே எதிர்காலங் காட்டி வருமென்றறிக.

156. செய்யுமென்னும் வினைமுற்றுச் சொற்கள், உம் என்னும் விகுதியை இறுதியிலே பெற்று; உயர்திணை ஆண்பால் பெண்பால், அஃறிணை ஒன்றன்பால் பலவின்பால் என்னும் நான்கு பால்களுக்கும் உரியனவாய் வரும் வினைச்சொற்களாம்.

உ - ம்:—அவன் உண்ணும்—ஆண்பால்
அவள் உண்ணும்—பெண்பால் } உயர்திணை.
அது உண்ணும்—ஒன்றன்பால்
அவை உண்ணும்—பலவின்பால் } அஃறிணை.

இம் முற்றுவினைச்சொற்களின் உம் விகுதி, நிகழ் காலத்தையும் எதிர்காலத்தையும் காட்டும்.

157. பெயரெச்ச வினைச்சொற்கள், பால்காட்டும் முற்றுவிகுதிகளைப் பெறாத குறைச் சொற்களாய், அ உம் என்னும் விகுதிகளை இறுதியிலே பெற்று, முடிக்குஞ் சொற்களாகப் பெயர்ச் சொற்களைக் கொள்ள வரும் வினைச்சொற்களாம்.

இவை கொள்ளும் பெயர்கள், செய்பவன், கருவி, இடம், செயல், காலம், செயப்படுபொருள் என அறு வகைப்படும்.

இவ்வெச்சம், செய்த என்னும் வாய்பாட்டு இறந்தகாலப் பெயரெச்சமெனவும்; செய்கின்ற என்னும் வாய்பாட்டு நிகழ்காலப் பெயரெச்சமெனவும்; செய்யும் என்னும் வாய்பாட்டு எதிர்காலப் பெயரெச்சமெனவும் மூன்று வகைப்படும்.

(வாய்பாடு)
உ - ம்:—உண்ட, தின்ற, —செய்த.
உண்கின்ற, தின்கின்ற, —செய்கின்ற.
உண்ணும், தின்னும், —செய்யும்.

இவ் விகுதிகளில், அகரவிகுதி, இறந்தகால நிகழ்கால இடைநிலைகளோடு கூடியும்; உம் விகுதி, இடைநிலைகளோடு கூடாது தானே எதிர்காலங் காட்டியும் வருமெனக் கொள்க.

158. வினையெச்ச வினைச்சொற்கள், பால்காட்டும் முற்று விகுதிகளைப் பெறாத குறைச் சொற்களாய், முடிக்குஞ் சொற்களாக வினைச்சொற்களைக் கொள்ள வரும் வினைச்சொற்களாம்.

இவ் வினையெச்சங்கள், **செய்து** என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சமெனவும்; **செய** என்னும் வாய்பாட்டு முக்காலத்திற்கு முரிய வினையெச்சமெனவும்; **செயின்** என்னும் வாய்பாட்டு எதிர்கால வினை யெச்சமெனவும் மூன்றுவகைப்படும்.

159. செய்து என்னும் வாய்பாட்டு இறந்தகால வினை யெச்சங்கள், உ, இ, ய் முதலிய விகுதிகளை இறுதியிற் பெற்றுத் தன் கருத்தாவின் வினையைக் கொள்ள வருவனவாம்.

இம் மூன்று விகுதிகளுள், உகரவிகுதி இறந்தகால இடை நிலைகளோடு கூடியும்; இ,ய் என்னும் விகுதிகள் இடைநிலைகளோடு கூடாது தாமே இறந்தகாலங் காட்டியும் வரும்.

| | | | | (விகுதி) |
|---|---|---|---|---|
| உ - ம்:— | நடந்து, | உண்டு, | சென்று. | —உ. |
| | பேசி, | ஆடி, | கூடி. | —இ. |
| | போய், | ஆய், | கூய். | —ய். |

இவ் விறந்தகால வினையெச்சங்கள், புகு—புக்கு, விடு—விட்டு, உறு—உற்று எனப் பகுதி விகாரப்பட்டும்; தழுவி—தழீஇ என இறுதி விகாரப்பட்டும் வருமெனவும்: செய்யுளிலே உண்ணுபு, உண்ணூ, உண்ணா, உண்டென என—பு, ஆ, ஊ, என என்னும் இந் நான்கு விகுதிகளைப் பெற்று வருமெனவும் கொள்க.

160. செய என்னும் வாய்பாட்டு முக்காலத்திற்கும் உரிய வினையெச்சங்கள், அகர விகுதியை இறுதியிலே பெற்றுத் தன் கருத்தாவின் வினையையும், பிறகருத்தாவின் வினையையும் கொள்ள வருவனவாம்.

இந்த அகரவிகுதி இடைநிலையோடு கூடாது தானே காலங்காட்டி வரும்.

இவ் வெச்சங்கள், காரணப் பொருளில் வருமிடத்து இறந்த காலத்தையும், காரியப் பொருளில் வருமிடத்து எதிர்காலத்தையும், இவ்விருபொருளுமின்றி வருமிடத்து நிகழ்காலத்தையும் காட்டும்.

உ-ம்:—மழை பெய்ய நெல் விளைந்தது— பிற கருத்தாவின் வினை கொண்டது. இறந்தகாலம்.

மழை பெய்ய முழங்கும். — தன் கருத்தாவின் வினை கொண்டது. எதிர்காலம்.

சூரியன் உதிக்க வந்தான். — பிற கருத்தாவின் வினை கொண்டது. நிகழ்காலம்.

அன்றியும், இவ் வினையெச்சம், சிறு பான்மை உண்ணுதற்கு வந்தான், உண்ணும்படி வந்தான் என ஈறு திரிந்தும் வரும்.

161. செயின் என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சங்கள், இன், ஆல், கால் முதலிய விகுதிகளை இறுதியிலேபெற்றுத் தம் கருத்தாவின் வினையையும், பிற கருத்தாவின் வினையையும் கொள்ள வரும் வினைச்சொற்களாம்.

**உ - ம்:**—தான் உண்ணின் உவப்பான் (இன்) —தன் கருத்தாவின் வினை கொண்டது.
பிறன் உண்ணிற் கொடுப்பான் (இன்) —பிற ,,
தான் உண்டால் உவப்பான் (ஆல்) —தன் ,,
பிறன் உண்டாற் கொடுப்பான் (ஆல்) —பிற ,,
தான் உண்டக்கால் உவப்பான் (கால்)—தன் ,,
பிறன்உண்டக்காற்கொடுப்பான் (கால்)—பிற ,,

இக்காலத்து வழக்கில், ஏல், எனின், ஆயின், ஏனும் இந் நான்கும் முற்று வினைகளோடு இயைந்து, உண்டானேல், உண்டானெனின், உண்டானாயின், உண்டானேனும் என ஒருசொல் நீர்மைப்பட்டுச் செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களாய் வருதல் காண்க.

அன்றியும், செய்யுளிலே, இவ் வெச்சம், உண்ணிய, உண்ணியர், உண்ணுவான், உண்பான், உண்பாக்கு—என இய, இயர், வான், பான், பாக்கு என்னும் விகுதிகளைப் பெற்றும் வருமென அறிக.

162. மேற்கூறிய பெயரெச்ச வினையெச்சங்கள், இருதிணை யைம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக வரும்.

**உ - ம்:**—உண்ட- யான், யாம் —தன்மை.
நீ, நீர் —முன்னிலை.
அவன், அவள், அவர்,
அது, அவை —படர்க்கை.
நடந்து- வந்தேன், வந்தோம் —தன்மை.
வந்தாய், வந்தீர் —முன்னிலை.
வந்தான், வந்தாள், வந்தார்,
வந்தது, வந்தன —படர்க்கை.

163. எதிர்மறை வினைச்சொற்கள், தொழில் நிகழாமையை உணர்த்தும்வினைச்சொற்களாம். இவையும், முற்றும் பெயரெச்சமும் வினையெச்சமுமாகி வரும்.

இவ் வெதிர்மறை வினைச்சொற்கள், ஆ இல் அல் என்னும் இம் மூன்று விகுதிகளுள் ஒன்றனைப் பெற்றுவரும்.

164. இம் மூன்றுவிகுதிகளுள், ஆ விகுதி இடையிலே புணர்ந்து பெரும்பாலுங் கெட்டு நிற்கக் காலங்காட்டும் இடைநிலைகளைப் பெறுமற் பால்காட்டும் விகுதிகளை இறுதியிற் பெற்றுவரும் வினைச்சொற்கள், முக்காலத்திற்கும் பொதுவாகிய எதிர்மறை வினை முற்றுச் சொற்களாம்.

இவ் வெதிர்மறை ஆகாரம், உயிர்நெடின்முதல் விகுதியோடு புணருமிடத்துக் கெட்டுநிற்குமெனவும், மெய்ம்முதல் விகுதியோடு புணருமிடத்துக் கெடாமல் நிற்கு மெனவும் அறிக.

உ - ம்:—நடவேன், நடவேம் —தன்மை.
நடவாய், நடவீர் —முன்னிலை.
நடவான், நடவாள்,
நடவார், நடவாது, }—படர்க்கை.
நடவா ———

["நடவேன்" என்பதில் நட - பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி; இவ் விகுதி உயிர் நெடின் முதலானதால் எதிர்மறை ஆகாரம் கெட்டு நட ஏன் என நின்று வகர உடம்படு மெய்பெற்று நடவேன் என முடிந்தது காண்க. 'நடவாது' என்பதில்

நட - பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, து - படர்க்கை ஒன்றன்பால் விகுதி. இவ் விகுதி மெய்ம்முதலானதால் ஆகாரம் கெடாமல் நட, ஆ, து என நின்று வகரஉடம்படு மெய் பெற்று நடவாது என முடிந்தது காண்க. பிறவும் இப்படியே.]

காலங்காட்டும் இடைநிலையோடு, இல் அல் என்னும் எதிர்மறை விகுதிகளுள் ஒன்று இடையிற் புணர்ந்துநிற்கப் பால்காட்டும் விகுதிகளை இறுதியிற் பெற்று வருவன, ஒவ்வொரு காலத்திற்குரிய எதிர் மறை வினைமுற்றுச் சொற்களாம்.

| | (கால இடைநிலை) | (எதிர்மறை விகுதி) |
|---|---|---|
| உ - ம்:—நடந்திலன். | த் | இல் |
| நடக்கின்றிலன். | கின்று | ,, |
| நடக்கிலன். | | ,, |

இவ் வெதிர்மறை வினைமுற்றுகள், இக்காலத்து உலகவழக்கிலே நடவாதிருந்தான், நடவாதிருக்கின்ருன், நடவாதிருப்பான் என வருமெனவுங் கொள்க.

165. அல் ஏல் என்னும் விகுதிகளை இறுதியிற் பெற்று வருவன, எதிர்மறை ஏவ லொருமை வினைமுற்றுச் சொற்களாம்.

உ - ம்:—உண்ணல் (அல்); உண்ணேல் (ஏல்).

இவை இக்காலத்து உலக வழக்கில் உண்ணுதே, உண்ணுமலிரு, உண்ணுதிரு என வருமெனவுங் கொள்க.

166. எதிர்மறை விகுதியோடு மின் விகுதியைப் பெற்று வருவன எதிர்மறை ஏவற் பன்மை வினைமுற்றுகளாம்.

உ - ம்:—நடவன்மின், உண்ணன்மின்.

இவையே இக்காலத்து உலகவழக்கிலே, நடவாதிருங்கள் நடவாமலிருங்கள் என வருமெனவுங் கொள்க.

167. எதிர்மறை விகுதியோடு வியங்கோள்விகுதியைப் பெற்றுவருவன, எதிர்மறை வியங்கோள் வினைமுற்றுகளாம்.

உ - ம்:—வாழற்க, உண்ணற்க.

அன்றியும், 'மகனெனல்' என்பது, மகனென்று சொல்லற்க எனவும், 'மரீஇய தொரால்' என்பது மரீஇய தொருவற்க எனவும் பொருள்பட்டு அல் ஆல் இரண்டும் எதிர்மறை வியங்கோள் விகுதிகளாய் வரும் எனவும் அறிக.

இவை இக்காலத்து உலகவழக்கில், வாழாதுக, வாழாதிருப்பாதுக, வாழாமலிருப்பாதுக, வாழாதிருக்கக் கடவன், வாழாமலிருக்கக்கடவன் என வருதலுங் காண்க.

168. எதிர்மறை விகுதியோடு மேற்கூறிய பெயரெச்ச விகுதிகளுள், அ என்னும் விகுதியைப் பெற்று வருவன, எதிர்மறைப் பெயரெச்ச வினைச்சொற்களாம்.

உ - ம்:—நடவாத, உண்ணாத, செய்யாத, தின்னாத.

இவை, நடவா செய்யா என ஈறு கெட்டு வருமெனவும், இக் காலத்து உலகவழக்கில், நடவாதிருந்த நடவாதிருக்கின்ற நடவாதிருக்கும் என வருமெனவுங் கொள்க.

169. எதிர்மறை விகுதியோடு, மல் து மை மே முதலிய விகுதிகளைப் பெற்றுவருவன, எதிர் மறை வினையெச்ச வினைச்சொற்களாம்.

உ - ம்:—நடவாமல் (மல்). நடவாது (து).
நடவாமை (மை). நடவாமே (மே).

170. ஒரு வினைப்பகுதியோடு இடைநிலைகளும் விகுதிகளும் புணர்தலினாலே பல வினைச்சொற்களாம்.

உதாரணம்:—

| இறப்பு. | நிகழ்வு. | எதிர்வு. |
|---|---|---|
| நடந்தான். | நடக்கின்றான். | நடப்பான். |
| நடந்தாள். | நடக்கின்றாள். | நடப்பாள். |
| நடந்தார். | நடக்கின்றார். | நடப்பார். |
| நடந்தது. | நடக்கின்றது. | நடப்பது. |
| நடந்தன. | நடக்கின்றன. | நடப்பன. |
| நடந்தேன். | நடக்கின்றேன். | நடப்பேன். |
| நடந்தோம். | நடக்கின்றோம். | நடப்போம். |
| நடந்தாய். | நடக்கின்றாய். | நடப்பாய். |
| நடந்தீர். | நடக்கின்றீர். | நடப்பீர். |
| ——— | ——— | நடவாய். |
| ——— | ——— | நடமின். |
| ——— | ——— | நடக்க. |
| நடந்த. | நடக்கின்ற. | நடக்கும். |
| நடந்து. | நடக்க. | நடக்கின். |
| நடந்திலன். | நடக்கின்றிலன். | நடக்கிலன். |
| நடந்திலாத. | நடக்கின்றிலாத. | நடக்கிலாத. |

* நடவான். * நடவாத. * நடவாமல். * நடவாமை. * நடவாமே.

மற்றவைகளுமிப்படியே.

---

* இவ்வெதிர்மறைவினைகள் முக்காலத்துக்கும் பொது.

171. இப்படி உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும் வினைச்சொற்கள், செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாதவினை, தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை என ஆறு வகைப்படும்.

172. செயப்படு பொருளை வேண்டாமல் நிற்கும் முதனிலைகளடியாகத் தோன்றிய வினைச்சொற்கள், செயப்படுபொருள் குன்றிய வினைச்சொற்களாம்.

| | (முதனிலை) | |
|---|---|---|
| உ-ம்:—நடந்தான் | —நட | செயப்படுபொருளை வேண்டாமல்நிற்கும் முதனிலைகளாதல் காண்க. |
| போயினான் | —போ | |
| வந்தான் | —வா | |
| தூங்கினான் | —தூங்கு | |

இவை, இதை நடந்தான், இதை வந்தான், என இரண்டாம் வேற்றுமைக்கு முடிக்குஞ் சொற்களாக வாரா என அறிக.

173. செயப்படுபொருளை வேண்டி நிற்கும் முதனிலைகளடியாகத் தோன்றிய வினைச்சொற்கள், செயப்படுபொருள் குன்றாத வினைச்சொற்களாம்.

| | (முதனிலை) | |
|---|---|---|
| உ-ம்:—உண்டான் | —உண் | செயப்படு பொருளை வேண்டி நிற்கும் முதனிலைகளாதல் காண்க. |
| கொடுத்தான் | —கொடு | |
| கண்டான் | —காண் | |
| படித்தான் | —படி | |

இவை, சோற்றை யுண்டான் பணத்தைக் கொடுத்தான் என இரண்டாம் வேற்றுமைக்கு முடிக்குஞ் சொற்களாக வரும் என அறிக.

174. எழுவாய்க் கருத்தாவின் தொழிலாகி வேறுபடாமல் நிற்கும் முதனிலைக ளடியாகத் தோன்றிய வினைச்சொற்கள், தன்வினைச் சொற்களாம்.

இம் முதனிலைகள், செயப்படுபொருள் குன்றியனவும் குன்றாதனவும் ஆம்.

உ-ம்:—(தச்சன்) நடந்தான் —'நட' என்னும் முதனிலை செயப்படுபொருள் குன்றியது.
(தச்சன்) கட்டினான்.—'கட்டு' என்னும் முதனிலை செயப்படுபொருள் குன்றாதது.

இவைகளில், நட என்னும் செயப்படுபொருள் குன்றிய முதனிலைத்தொழிலும் கட்டு என்னும் செயப்படுபொருள் குன்றாத முதனிலைத் தொழிலும் தச்சன் என்னும் எழுவாய்க் கருத்தாவின் தொழிலாய் நின்றமை காண்க.

175. வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் இவ்வெட்டு விகுதிகளுள் ஒன்றைப் பெற்றாவது பகுதி விகாரப்பட்டாவது வேறுபட்டு, எழுவாய்க் கருத்தா ஒழிந்த பிறகருத்தாவின் தொழிலாகி நிற்கும் முதனிலைகளடியாகத் தோன்றிய வினைச்சொற்கள், பிறவினைச் சொற்களாம்.

வி, பி, முதலியன முதனிலைத் தொழிலை யுண்டாக்குந் தொழிற் பொருளில் வரும்.

உ-ம்:அரசன் தச்சனாற் கோயிலைக் கட்டுவித்தான்—வி.
அரசன் சேவகனாற் கள்ளனை அடிப்பித்தான் —பி.
தாய் மகளைப் போக்கினாள்—கு.
நம்பி நீரைப் பாய்ச்சினான்—சு.

கொற்றன் கல்லை உருட்டினான்—டு.
அரசன் சேனையை நடத்தினான்—து.
தாய் மகனை எழுப்பினாள்—பு.
தாய் குழந்தையைத் துயிற்றினாள்—று.

இவை, வி பி முதலிய விகுதி பெற்று வந்தன.

சாத்தன் கொற்றனைத் திருத்தினான்.
கொற்றன் பம்பரத்தை ஆட்டினான்.

இவை, (திருந்து ஆடு என்னும்) பகுதி விகாரப் பட்டு வந்தன.

இவைகளில், கட்டு அடி முதலிய முதனிலைகள் அரசன் முதலிய எழுவாய்க் கருத்தாவின் தொழிலாகாமல், தச்சன் சேவகன் முதலிய பிற கருத்தாவின் தொழிலாய் வருதல் காண்க.

வி பி முதலிய விகுதிகள், சாத்தன் கொற்றனை நடப்பித்தான், வருவித்தான், எனச் செயப்படுபொருள் குன்றிய முதனிலைகளின்மேல் வரின் அவை செயப்படுபொரு ளுடையவாம் எனவும்; அரசன் பகைவரைச் சிறைச்சாலையை அடைவித்தான் எனச் செயப்படுபொருள் குன்றாத சில முதனிலைகளின்மேல் வரின் அவை இரண்டு செயப்படுபொரு ளுடையவாம் எனவும் கொள்க.

இவ் விகுதி, நடப்பித்தான் செய்விப்பித்தான் நடத்துவிப்பித்தான் என இரண்டுமுதலியன இணைந்து வருமெனவும் கொள்க.

அரசன் செய்த தேர், அரசன் கட்டிய கோயில் என இவை விவ்விகுதி புணர்ந்து கெட வந்தமையால், இவையும் முதனிலை வேறுபட்டு வந்தன எனவே கொள்க.

அன்றியும், தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவாய் நிற்கின்ற சில முதனிலைகள், சிறுபான்மை இவ்விகுதி வேண்டாமற் பிறவினைப்பொருளில் வருமிடத்து, கரைத்தான், தேய்த்தான் கரைக்கின்றான், தேய்க்கின்றான், கரைப்பான், தேய்ப்பான், என வல்லொற்று மிகப்பெற்றும்; தன்வினைப்பொருளில் வருமிடத்து, கரைந்தான், தேய்ந்தான், கரைகின்றான், தேய்கின்றான், கரைவான், தேய்வான் என மெல்லொற்று இறந்தகாலத்திலே மிகப்பெற்றும், ஏனைய காலங்களில் இயல்பாகியும், வருமென அறிக.

176. மேற்கூறப்பட்ட தன்வினை முதலிய நான்கும் செய்வினையாம்.

177. செயப்படுபொருள் குன்றாத தன்வினை முதனிலைகளோடும் வி பி முதலியவைகளைப்பெற்று வரும் பிறவினை முதனிலைகளோடும்செயப்படுபொருளை உணர்த்தும் படு விகுதி புணர்ந்துநிற்கும் முதனிலைகளடியாகத் தோன்றிய வினைச்சொற்கள், செயப்பாட்டு வினைகளாம்.

இம் முதனிலைகளோடு, படு விகுதி புணருமிடத்து, அகரச்சாரியையையாவது குகரச்சாரியையையும் அகரச்சாரியையையுமாவது பெறும்.

**உ - ம்:**—தச்சனாற் கோயில் கட்டப்பட்டது. (கட்டு + அ + படு)

அரசனாலே தச்சனைக்கொண்டு கோயில் கட்டுவிக்கப்பட்டது. (கட்டுவி + கு + அ + படு)

சேவகனாற் கள்ளன் அடிக்கப்பட்டான். (அடி + கு + அ + படு)

அரசனாலே சேவகனைக்கொண்டு கள்ளன் அடிப்பிக்கப்பட்டான். (அடிப்பி+த்+அ+படு)
சாத்தனாற் கொற்றன் நடப்பிக்கப்பட்டான். (நடப்பி+த்+அ+படு)
அரசனாலே பகைவர் சிறைச்சாலையை அடைவிக்கப்பட்டார். (அடைவி+த்+அ+படு)
மற்றவைகளு மிப்படியே.

இச் செயப்பாட்டுவினை, தச்சனாற் கோயில் கட்டப்பட்டது என வினைமுதல் மூன்றாம்வேற்றுமையிலும் செயப்படுபொருள் எழுவாயிலும் வரக்கொண்டு, வினைமுதலை முதனிலைத் தொழிலாலும் செயப்படுபொருளை விகுதியாலும் முடிக்கு மென்றும்; அரசனாலே பகைவர் சிறைச்சாலையை அடைவிக்கப்பட்டார் என இரண்டு செயப்படுபொருள் வருமிடத்து, விகுதியாலே முடிக்கப்பட்ட செயப்படுபொருள் எழுவாயிலும் விகுதியாலே முடிக்கப்படாத செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமையிலும் வரக்கொள்ளுமென்றும் அறிக.

அன்றியும் இக்காலத்து உலகவழக்கிலே மேற்கூறிய சாரியைகளின்றி—அடிபட்டான், அடியுண்டான், பிடிபட்டான், பிடியுண்டான் என—படு உண் விகுதிகள் புணர்ந்து வருமெனவும் அறிக.

178. இவையன்றித் தற்பொருட்டுவினை, தேற்றவினை, வலிமைவினை, துணிபுவினை, கூட்டுவினை, என ஐவகைப்பட்டும் வினைச்சொற்கள் வரும்.

179. வினைமுதற் றொழிற்பயன், வினைமுதலை அடைதல் என்னும் பொருளைத் தரும் கோள் என்

னும் விகுதியைப் பெற்று நிற்கும் முதனிலைகளடியாகத் தோன்றிய வினைச்சொற்கள், தற்பொருட்டு வினைகளாம்.

இம் முதனிலைகளோடு கொள் என்னும் விகுதி புணருமிடத்துத் துகரச் சாரியையையேனும் இகர உயிரையேனும் பெறும்.

உ-ம்: —செய்துகொண்டான் —துகரச்சாரியைபெற்றது.
அடித்துக்கொண்டான் — ,, ,, ,,
கடித்துக்கொண்டான் — ,, ,, ,,
வெட்டிக்கொண்டான் —. இகர உயிர் பெற்றது.

180. **வேண்டும் படும் தகும் என்பவை தேற்றவினைகள் எனப்படும்.**

இம் மூன்றும், ஒருபொருட் சொற்களாய்த் தேற்றப்பொருளை யுணர்த்தி இருதிணையைம்பால் மூவிடங்கட்கும் உரியனவாய் வரும்.

உ-ம்:—அவன் வரவேண்டும் —ஆண்பால்.
அவள் வரவேண்டும் —பெண்பால்.
அவர் வரவேண்டும் —பலர்பால்.
அது வரவேண்டும் —ஒன்றன்பால்.
அவை வரவேண்டும் —பலவின்பால்.
நான் வரவேண்டும் —ஒருமை.
நாம் வரவேண்டும் —பன்மை.
நீ வரவேண்டும் —ஒருமை.
நீர் வரவேண்டும் —பன்மை.

(வேண்டும் என்பது தேற்ற வினையாக வந்தது காண்க.)

அவன் செய்யத் தகும்—என இவ்வாறு பிற பால் திணை இடப்பெயர்களோடும் ஒட்டித் 'தகும்' என்பது தேற்றவினையாக வருவது காண்க.

அவன் அஞ்சப்படும் —என இவ்வாறு பிற பால் திணை இடப்பெயர்களோடும் ஒட்டிப் 'படும்' என்பது தேற்ற வினையாக வருதல் காண்க.

தேற்றப் பொருளாவது, 'வருதலே தக்கது' எனப் பொருள் கொள்ளப்படுவதாம்.

181. வன்மை யுறுத்தற் பொருளைத் தரும் மாட்டு என்னும் விகுதியைப் பெற்று நிற்கும் முதனிலைக ளடியாகத் தோன்றிய வினைச்சொற்கள், வலிமை வினைகளாம்.

மாட்டு என்பது முதனிலைகளோடு புணருமிடத்து அ என்னுஞ் சாரியையையாவது கு அ என்னும் இருசாரியைகளையுமாவது பெறும்.

இது, பெரும்பான்மையும், வ் என்னும் எதிர்கால இடைநிலையோடு வரும்.

| | | |
|---|---|---|
| உ - ம்:—அடிக்கமாட்டுவான். | —கு அ | சாரியை |
| செய்யமாட்டுவான். | —அ | ,, |
| நடக்கமாட்டுவான். | —கு அ | ,, |

182. துணிபுப்பொருளைத் தரும் விடு ஒழி என்னும் விகுதிகளைப் பெற்று நிற்கும் முதனிலைக ளடியாகத் தோன்றிய வினைச்சொற்கள், துணிபுவினைச் சொற்களாம்.

விடு ஒழி என்னும் இவ் விருவிகுதியும் முதனிலைகளோடு புணருமிடத்துத் துகரச்சாரியையையாவது இகரவுயிரையாவது பெறும்.

(துணிபுவினை விகுதி)

உ - ம்:—செய்துவிட்டான், —(து - சாரியை) விடு.
செய்தொழிந்தான், —(து - „ ) ஒழி.
தூங்கிவிட்டான், —(இகரவுயிர்„ ) விடு.
ஆடியொழிந்தான், —(இ „ „ ) ஒழி.

183. சில வினைப் பகுதிகளோடு வேறு வினைப் பகுதிகள் புணர்ந்து ஒருசொல் நீர்மைப்பட்டு நிற்கும் முதனிலைக ளடியாகத் தோன்றிய வினைச்சொற்கள், கூட்டுவினைச் சொற்களாம்.

உ - ம்:—உண்டாக்கினான் —உண்டு, ஆக்கு என்னும் இரு வினைப்பகுதிகள் புணர்ந்தன.
காப்பாற்றினான் —கா, ஆற்று என்னும் இரு வினைப்பகுதிகள் புணர்ந்தன.

184. இவ் வினைச்சொற்கள், வினையடியிற் றோன்றுவதன்றிச் சிறுபான்மை பெயரடியிலும் இடையடியிலும் உரியடியிலும் தோன்றும்.

உ - ம்:—கடைக்கணித்தான், சித்திரித்தான்—என்பன, கடைக்கண் சித்திரம் என்னும் பெயரடியாகத் தோன்றின.

பொன்போன்றான், புலிநிகர்த்தான்—என்பன; போல் நிகர் என்னும் இடையடியாகத் தோன்றின.

சான்றான், சிறுத்தான்—என்பன, சால் சிறு என்னும் உரியடியாகத் தோன்றின.

185. இவையன்றி, படு என்பது சில பெயர்ச் சொற்களோடு புணர்ந்து ஒரு முதனிலைத் தன்மைப் பட்டு வினையடியாக வருதலும் உண்டு.

உ - ம்:—ஆசைப்பட்டான். துன்பப்பட்டான்.

186. குறிப்புவினைகளாவன, காலத்தைக் குறிப்பாக உணர்த்தும் வினைச்சொற்களாம்.

இவை, பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் இவ்வாறும் அடியாகத் தோன்றி, முற்றும் பெயரெச்சமும் வினையெச்சமுமாகிவரும்.

187. குறிப்புவினை முற்றுச்சொற்கள், காலத்தைக் குறிப்பாக உணர்த்திப் பால்காட்டும் விகுதிகளை இறுதியிற்பெற்று முற்றி நின்று பெயரைக் கொண்டு முடிவனவாய் வரும் வினைச் சொற்களாம்.

உ - ம்:—பொன்னன் — பொருள்.
அகத்தன் — இடம்.
வேனிலான் — காலம்.
கண்ணன் — சினை.
கரியன் — குணம்.
நடையன் — தொழில்.

இவை அன் ஆன் என்னும் ஆண்பால் விகுதிகளைப் பெற்றவாறும், 'அவன்' முதலிய பெயர்களைக்கொண்டு முடிய நிற்குமாறுங் காண்க.

இவைகளுள், 'பொன்னன்' என்பது, பொன்னையுடையனாயினான் என இறந்தகாலங் கருதியாவது, பொன்னையுடையனாகின்றான் என நிகழ்காலங் கருதியாவது, பொன்னையுடையனாவான் என எதிர்காலங் கருதியாவது சொல்லுவோன்குறிப்பாற் கேட்போனுக்குத் தோன்ற உரைக்கப்படுவது. மற்றவைகளும் இப்படியே.

இக் குறிப்புவினைமுற்றுச் சொற்கள் அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, று, டு, அ, என், ஏன்; அம், ஆம், எம், ஏம், ஓம், ஐ, ஆய், இ, இர், ஈர் முதலிய பால் காட்டும் விகுதிகளை இறுதியிற் பெற்றுவரும்.

| | (விகுதி) | | (விகுதி) |
|---|---|---|---|
| உ-ம்:—குழையன், | —அன் | குழையான், | —ஆன் |
| குழையள், | —அள் | குழையாள், | —ஆள் |
| குழையர், | —அர் | குழையார், | —ஆர் |
| குழையது, | —து | குழையிற்று, | —று |
| குறுந்தாட்டு, | —டு | குழையன, | —அ |
| குழையினென், | —என் | குழையினேன், | —ஏன் |
| குழையம், | —அம் | குழையாம், | —ஆம் |
| குழையினெம், | —எம் | குழையினேம், | —ஏம் |
| குழையினோம், | —ஓம் | குழையினை, | —ஐ |
| குழையாய், | —ஆய் | வில்லி, | —இ |
| குழையிர், | —இர் | குழையீர், | —ஈர் |

188. பெயரெச்ச வினைக்குறிப்புச் சொற்கள், பால்காட்டும் முற்றுவிகுதிகளைப் பெறாத குறைச்சொற்களாய், அகரவிகுதியை இறுதியிற் பெற்றுக் காலத்தைக் குறிப்பாக உணர்த்தி முடிக்குஞ் சொற்களாகப் பெயரை ஏற்கவரும் வினைச்சொற்களாம்.

உ-ம்:—பெரிய (சேனை)
கரிய (குதிரை)
முகத்த (களிறு)
உள்ள (காரியம்)

இவை அகர விகுதி பெற்றுப் பெயர் கொண்டு முடிந்தவாறு காண்க.

189. வினையெச்ச வினைக்குறிப்புச்சொற்கள், பால்காட்டும் முற்றுவிகுதிகளைப் பெறாத குறைச்சொற்

களாய், அ, றி, து, மல் முதலிய விகுதிகளை இறுதியிற் பெற்றுக் காலத்தைக் குறிப்பாக உணர்த்தி முடிக்குஞ் சொற்களாக வினையை ஏற்கவரும் வினைச்சொற்களாம்.

(விகுதி)

உ - ம்—:மெல்ல (ப் பேசினான்), —அ
அருளின்றி (ச் சொன்னான்), —றி
அதுவல்லது (இல்லை), —து
அதுவல்லாமல் (இல்லை), —மல்
} இவை வினை கொண்டு முடிந்தவாறு காண்க.

190. வேறு இல்லை உண்டு என்னும் இம் மூன்று குறிப்புவினைமுற்றுச் சொற்களும், இருதிணையைம்பால் மூவிடங்கட்கும் பொதுவாகி வரும்.

உ - ம்:—அவன், அவள், அவர்
அது, அவை, யான்
யாம், நீ, நீர்,
} வேறு. இல்லை. உண்டு.
} இவை திணை பால் இடங்கட்குப்பொதுவாய் வந்தவாறு காண்க.

191. யார் என்னும் வினா வினைக்குறிப்பு முற்றுச்சொல், ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவாகி வரும்.

உ - ம்:—அவன், அவள், அவர்,
அது, அவை, யான்,
யாம், நீ, நீர்,
} யார்.

யார் என்பது - ஆர் எனவுந் திரிந்துவரும்.

192. எவன் என்னும் வினா வினைக்குறிப்பு முற்றுச்சொல், அஃறிணையிருபாற்கும் பொதுவாகி வரும்.

உ. - ம்.—அஃது
அவை
} எவன்.

எவன் என்பது—என், என்ன, என்னை எனத் திரிந்து வருவதே பெரும்பான்மை.

**193. தெரிநிலைவினைமுற்றுகளும், குறிப்புவினைமுற்றுகளும், தம்மை முடித்தற்கேலாத வினையையும் பெயரையும் கொண்டுவரின், முற்றுப்பொருள் கொள்ளப்படாமல் எச்சப்பொருள் கொள்ளப்படும்.**

உ - ம்:—உண்டான் வந்தான்—என வரின், உண்டு வந்தான், என வினையெச்சமாகவும்;

உண்டான் சாத்தன் ஊர்க்குப் போயினான்—என வரின், உண்ட சாத்தன் ஊர்க்குப் போயினான், எனப் பெயரெச்சமாகவும்;

உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து—என வரின் உச்சிக்கூப்பிய கையினராகித் தற்புகழ்ந்து, என வினையெச்சமாகவும்;

வெந்திறலினன் விறல் வழுதி—என வரின், வெந்திறலினனாகிய விறல் வழுதி, எனப் பெயரெச்சமாகவும், பொருள் கொள்ளப்படும்.

**194. தன் வினைமுதலின் வினையைக் கொள்ளும் வினையெச்சங்கள்*, பிற வினைமுதலின் வினையைக் கொண்டு வருமிடத்து, பிறவினைமுதலின் வினையைக் கொள்ளும் வினையெச்சமாகவும்†; வினைமுதனிலைகள், முற்றுப்பொருள் தருமிடத்து முற்றாகவும் வினையெச்சப்பொருள் தருமிடத்து வினையெச்சமாகவும் பொருள் கொள்ளப்படும்.**

* இவற்றை 63-வது பக்கத்திற் காண்க.

† இவற்றை 64-வது பக்கத்திற் காண்க.

6

**உ - ம்:**—அவன் சூரியன் பட்டு வந்தான்—என்னுமிடத்துத் தன் வினைமுதலின் வினையைக் கொள்ளும் பட்டு என்னும் செய்தெனெச்சம், வந்தான் என்னும் பிற வினைமுதலின் வினையைக்கொண்டு வருதலின் படஎன்னும் செயவெனெச்சமாகப் பொருள் கொள்ளப்படும்.

பெறுவது கொள்வாருங் கள்வரு நேர்—என்னுமிடத்து நேர் என்பது நேர்வர் என வினைமுற்றுப்பொருளைத் தருதலின் வினைமுற்றாகவும்,

வரிப்புனை பந்து—என்னுமிடத்து, வரி என்பது வரிந்து என வினையெச்சப்பொருள் தருதலின் வினையெச்சமாகவும் பொருள் கொள்ளப்படும்.

---

## 3. இடைச்சொல்லியல்.

---

**195.** இடைச்சொற்களாவன, தனித்து நடவாமல் பெயர்வினைகளோடு சேர்ந்து பொருளை உணர்த்தி வருஞ் சொற்களாம்.

**196.** அவை, வேற்றுமை யுருபுகளும்; விகுதி யுருபுகளும்; இடைநிலையுருபுகளும்; சாரியையுருபுகளும்; ஒப்புருபுகளும்; சுட்டுப் பொருளை யுணர்த்தி வருபவைகளும்; வினாப்பொருளை யுணர்த்தி வருபவைகளும்; தத்தமக்குரிய பொருள்களை யுணர்த்திவரும் ஏ, ஓ, உம், என, என்று, கொல், மற்று, மன், அம்ம, தொறும், தோறும், இனி, ஆவது—என்பவைகளும்; ஒலி, அச்சம், விரைவு, இவற்றைக் குறிப்பால் உணர்த்தி வருபவைகளும்; இரக்கப்பொருளை உணர்த்திவருபவைகளும்; இகழ்ச்சிப்பொருளை உணர்த்தி வருபவைக

ளும்; அதிசயப் பொருளை யுணர்த்தி வருபவைகளும்; இசை நிறைத்தலே பொருளாய் வருபவைகளும்; அசைத்தலே பொருளாய் நிற்பவைகளும் ஆம்.

197. வேற்றுமை யுருபிடைச் சொற்களாவன, முன் பெயரியலிலே சொல்லப்பட்ட ஐ ஆல் கு முதலியனவாம்.

198. விகுதி யுருபிடைச் சொற்களாவன, முன் பெயரியலிலும் வினையியலிலும் சொல்லப்பட்ட அன் ஆன் அள் ஆள் முதலியனவாம்.

199. இடைநிலை யுருபிடைச் சொற்களாவன, மேலியலிற் கூறப்பட்ட த் ட் ற் இன் கின்று கிறு முதலியனவாம்.

200. சாரியை யுருபிடைச் சொற்களாவன, அன் ஆன் அம் ஆம் அல் அத்து அற்று இன் இற்று தம் நம் நும் அ ஆ உ ஏ ஐ கு து ன் முதலியனவாம்.

உ - ம்:—

| | (சாரியை) | | (சாரியை) |
|---|---|---|---|
| அதன்கால் | —அன் | எல்லாநம்மையும் | —நம் |
| ஒருபாற்கு | —ஆன் | எல்லீர்நும்மையும் | —நும் |
| புளியங்காய் | —அம் | தமிழப்பிள்ளை | —அ |
| புற்றஞ்சோறு | —ஆம் | இல்லாப்பொருள் | —ஆ |
| தொடையல் | —அல் | உண்ணுவான் | —உ |
| மரத்துக்கோடு | —அத்து | ஒன்றேகால் | —ஏ |
| பலவற்றை | —அற்று | இரட்டைப்பிள்ளை | —ஐ |
| வண்டின்கால் | —இன் | உண்குவான் | —கு |
| பதிற்றுப்பத்து | —இற்று | செய்துகொண்டான் | —து |
| எல்லார்தம்மையும் | —தம் | ஆன் | —ன் |

**201. ஒப்புருபிடைச் சொற்களாவன, போல ஒப்ப நேர நிகர அன்ன இன்ன முதலியனவாம்.**

உ - ம்:—புலிபோலப் பாய்ந்தான், குருவியோப்பக் கூப்பிட்டான், புலியன்ன கொற்றன். மற்றவையும் இப்படியே.

போல ஒப்ப நேர நிகர என்பன, இடைச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்ச வினையெனவும்; அவைகளிலே போல் ஒப்பு நேர் நிகர் என்னும் முதனிலைகளே இடைச்சொல்லெனவும்; அன்ன இன்ன என்பன இடைச்சொல் லடியாகப் பிறந்த பெயரெச்ச வினையெனவும்; அவைகளிலே அ இ என்னும் முதனிலைகளே இடைச்சொல்லெனவுங் கொள்க.

**202. சுட்டுப்பொருளைத் தரும் இடைச் சொற்களாவன, அ இ உ என்பனவாம்.**

உ - ம்:—அக் கொற்றன், இக் கொற்றன், உக் கொற்றன்.

அ என்பது அந்த எனவும், இ என்பது இந்த எனவும் மருவியும் வரும்.

**203. வினாப்பொருளைத் தரும் இடைச் சொற்களாவன, எ யா ஆ முதலியனவாம்.**

உ - ம்:—எக் கொற்றன், யாவன், கொற்றனு.

**204. ஏகார இடைச்சொல், (1) தேற்றமும் (2) வினாவும் (3) எண்ணும் (4) பிரிநிலையும் (5) எதிர்மறையும் (6) இசைநிறையும் (7) ஈற்றசையும் என்னும் ஏழு பொருளில் வரும்.**

உ - ம்:—(1) உண்டேமறுமை—என்பதில், ஏ தெளிவுப்பொருளைத் தருதலாலே தேற்றத்தில் வந்தது.

(2) நீயே கொண்டாய்—என்பதில், நீயாகொண்டாய் என வினவிநிற்கையால், ஏ வினாப்பொருளில் வந்தது.

(3) நிலமே நீரே தீயே என்றிவை—என்பதில், நிலமும் நீரும் தீயும் என எண்ணி நிற்றலால், ஏ எண்ணுப்பொருளில் வந்தது.

(4) அவருள் இவனே கொண்டான்—என்பதில், ஒரு கூட்டத்திலிருந்து ஒருவனைப் பிரித்துநிற்றலால், ஏ பிரிநிலையில் வந்தது.

(5) நானே கொண்டேன்—என்பதில், நான் கொள்ளிலேன் என்னும் பொருளைத் தருதலால், ஏ எதிர்மறையில் வந்தது.

(6) ஏயே இவளொருத்தி பேடி—என்பதில், வேறு பொருளின்றி இசைநிறைத்து நிற்றலால் ஏ இசைநிறையில் வந்தது.

(7) இயம்புவ னெழுத்தே—என்பதில், வேறுபொருளின்றி இறுதியில் அசைத்து நிற்கையால், ஏ ஈற்றசையில் வந்தது.

**205. ஓகார இடைச்சொல், (1) ஒழியிசையும் (2) வினாவும் (3) சிறப்பும் (4) எதிர்மறையும் (5) தெரிநிலையும் (6) கழிவும் (7) பிரிநிலையும் (8) அசைநிலையும் ஆகிய எட்டுப்பொருளில் வரும்.**

உ-ம்:—(1) உண்ணுதற்கோ வந்தாய் — என்பதில், கலகஞ்செய்யவந்தாய் என ஒழிந்த சொற்களைத் தருதலால், ஓ ஒழியிசையில் வந்தது.

(2) குற்றியோ மகனோ—என்பதில், குற்றியா மகனா என வினவி நிற்கையால், ஓ வினாவில் வந்தது.

(3) சிறப்பு, (*a*) உயர்வுசிறப்பு, (*b*) இழிவுசிறப்பு, என இருவகைப்படும்.

(*a*) ஓஓபெரியன்—என்பதில், ஒருவனது பெருமை மிகுதியைக் காட்டுதலால், ஓ உயர்வுசிறப்பில் வந்தது.

(*b*) ஓஓகொடியன்—என்பதில், ஒருவனது கொடுமை மிகுதியையுணர்த்தலால், ஓ இழிவுசிறப்பில் வந்தது.

(4) அவனோகொண்டான்—என்பதில், கொண்டிலன் என்னும் பொருளைத்தரின், ஓ எதிர்மறை.

(5) (அலியைநோக்கி) ஆணோ அதுவுமன்று, பெண்ணோ அதுவுமன்று—என்னுமிடத்து, அத்தன்மை யில்லாமையைத் தெரிய வுணர்த்தலால், ஓ தெரிநிலையில் வந்தது.

(6) (உறுதியுணராது கெட்டாரை) ஓஓ தமக்கோர் உறுதியுணராரோ—என்னு மிடத்து, கழிவிரக்கப் பொருளைத்தருதலால், ஓ, கழிவுப்பொருளில் வந்தது.

(7) இவனோ கொண்டான்—என்பதில், பலரிலிருந்து ஒருவனைப் பிரித்தலாலே, ஓ பிரிநிலையில் வந்தது.

(8) காணிய வம்மினோ கங்குலது நிலையே—என்பதில், ஓ வேறுபொருளின்றி அசைநிலையாய் வந்தது.

**206. உம் என்னும் இடைச்சொல், (1) எதிர்மறையும் (2) சிறப்பும் (3) ஐயமும் (4) எச்சமும் (5) முற்றும் (6) எண்ணும் (7) தெரிநிலையும் (8) ஆக்கமும் ஆகிய எட்டுப் பொருளில் வரும்.**

உ-ம்:—(1) சாத்தன் வருதற்கும் உரியன் — என்பதில், வாராமைக்கும் உரியனெனப் பொருள்தருதலின், உம் எதிர் மறையில் வந்தது.

(2) இங்கேயும் சிறப்பு, (*a*) உயர்வுசிறப்பு (*b*) இழிவு சிறப்பு என இருவகைப்படும்.

(*a*) குறவரும் மருளுங்குன்று—என்பதில், குன்றின் உயர்வைச் சிறப்பித்தலால், உம் உயர்வுசிறப்பில் வந்தது.

(*b*) புலையனும் விரும்பாப் புன்புலால் யாக்கை—என்பதில், உடலின் இழிவைச் சிறப்பித்தலால், உம் இழிவு சிறப்பில் வந்தது.

(3) பத்தாயினும் எட்டாயினும் கொடு — என்னுமிடத்து, ஒன்றைத் துணியாமையை யுணர்த்தலால், உம் ஐயத்தில் வந்தது.

(4) எச்சவும்மை, (*a*) இறந்தது தழீஇயதும், (*b*) எதிரது தழீஇயதும், என இருவகைப்படும். தழீஇயது—தழுவியது.

சாத்தனும் வந்தான்—என்பதில், (*a*) கொற்றன் வந்தது மன்றி எனப்பொருள்படின், இறந்தது தழீஇய எச்சவும்மையாம். (*b*) இனிக் கொற்றனும் வருவான் எனப் பொருள்படின், எதிரதுதழீஇய எச்சவும்மையாம்.

(5) தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்—என்பதில், குறைவில் பொருளைத் தருதலால், உம் முற்றுப்பொருளில் வந்தது.

(6) சாத்தனும் கொற்றனும் பூதனும் வந்தார்—என்பதில், எண்ணி நிற்றலின், உம் எண்ணுப்பொருளில் வந்தது.

(7) (அலியை நோக்கி) ஆணுமன்று பெண்ணுமன்று—என்பதில், இன்னதெனத் தெரியுமிடத்து வருதலால், உம் தெரிநிலையில் வந்தது.

(8) பாலும் ஆயிற்று—என்பதில், அதுவே மருந்தும் ஆயிற்று எனப் பொருள்படின், ஆக்கவும்மையாம்.

அன்றியும், எல்லாரும் வந்திலர் — என முற்றும்மை எதிர்மறை வினையையடுத்து வருங்கால் எச்சவும்மையும் ஆமெனக் கொள்க.

**207. என என்று—என்னும் இரண்டிடைச் சொற்களும், (1) வினை (2) பெயர் (3) எண் (4) பண்பு (5) குறிப்பு (6) இசை (7) உவமை என்னும் ஏழு பொருளில் வரும்.**

**உ-ம்.—(1)** மைந்தன் பிறந்தானெனத் தந்தை உவந்தான்—என்பதில், என என்பது வினையோடு இயைந்தது.

**(2)** ஊரெனப்படுவதுறையூர்—என்பதில், என என்பது பெயரோடு இயைந்தது.

**(3)** நிலமென நீரென நெருப்பென காற்றென ஆகாயமெனப் பூதங்களைந்து—என்பதில், என என்பது எண்ணுப் பொருளில் வந்தது.

**(4)** வெள்ளென விளர்த்தது—என்பதில், என என்பது பண்போடியைந்தது.

**(5)** பொள்ளென வாங்கே புறம்வேரார் — என்பதில், என என்பது விரைவுக் குறிப்போடியைந்தது.

**(6)** ஒல்லென வொலித்தது—என்பதில், என என்பது இசை என்னு மொலிக்குறிப்போ டியைந்தது.

**(7)** புலிபாய்ந்தெனப் பாய்ந்தான்—என்பதில், என என்பது உவமையோடியைந்தது. என்று என்பதையும் இப்படியே யொட்டிக்கொள்க.

மேற்கூறிய, ஏ, உம், என, என்று, என்னும் நான்கு இடைச்சொற்களன்றியும், என்று, எனா, ஒடு, என்னும் இம் மூன்றிடைச் சொற்களும், எண்ணுப் பொருளில் வரும்.

உ - ம்:—நிலமென்று, நீரென்று.
நிலனென, நீரென.
நிலனோடு, நீரோடு.

எண்ணிடைச்சொற்கள், சாத்தனும் கொற்றனும் தேவனும் பூதனும் நால்வரும் வந்தார்—எனத் தொகைபெற்றும், பகைபாவமச்சம் பழியென நான்கும்—என எண்ணுப் பொருடோறும் வாராமல் ஓரிடத்தும், சாத்தன் கொற்றன் தேவன் பூதன் நால்வரும் வந்தார்—எனத் தொக்கும், கற்றுங்கேட்டுங் கற்பனை கடந்தார்—எனச் சிறுபான்மை வினையோடும் வருதலு முளவெனக்கொள்க.

**208. கொல் என்னும் இடைச்சொல், (1) ஐயப் பொருளினும், (2) அசைநிலையினும் வரும்.**

உ - ம்:—(1) அவன்கொல், இவன்கொல்—என்பதில், கொல், அவனோ இவனோ என ஐயப்பொருளில் வந்தது.

(2) 'கற்றதனா லாய பயனென்கொல்' — என்பதில், கொல்,வேறுபொருளின்றி வருதலால் அசைநிலையில் வந்தது.

**209. மற்று என்னும் இடைச்சொல், (1) வினை மாற்றுப் பொருளினும் (2) பிறிதென்னும் பொருளினும் (3) அசைநிலையினும் வரும்.**

உ-ம்:—(1)'மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது' என்னுமிடத்து, நல்வினையை விரைந்தறிவா மென்னும் வினையையொழித்து, விரையாதறிவா மென்னும் வினையைத் தருதலால், மற்று வினைமாற்றில் வந்தது.

(2) 'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று-சூழினுந் தான்முந் துறும்'—என்னுமிடத்து,ஊழல்லதொன்று என்னும் பொருளைத்தருதலால், மற்று, பிறிதென்னும் பொருளில் வந்தது.

(3) 'மற்றடிகள் கண்டருள்செய்ய மலரடிக்கீழ்'—என்பதில் வேறுபொருளுணர்த்தாமையால், மற்று, அசைநிலையில் வந்தது.

210. **மன் என்னும் இடைச்சொல், (1) ஒழியிசைப்பொருளிலும் (2) ஆக்கப்பொருளிலும் (3) கழிவுப் பொருளிலும் (4) மிகுதிப்பொருளிலும் (5) அசைநிலையிலும் வரும்.**

உ-ம்:—(1) கூரியதோர்வாண்மன்—என்னுமிடத்து, இரும்பை யறத்துணித்தது என்னும் ஒழிந்த சொற்களைத் தருதலால், மன், ஒழியிசைப்பொருளில் வந்தது.

(2) நெடியன்மன்—என்னுமிடத்து, அவனே வலியனுமாயினன் எனப் பொருள்படுதலால், மன், ஆக்கப்பொருளில் வந்தது.

(3) 'சிறியகட் பெறினே யெமக்கீயுமன்னே'—என்னுமிடத்து, அவனிறத்தலின் எமக்குக் கொடுத்தல் கழிந்தது எனப் பொருள்படுதலால், மன், கழிவுப்பொருளில் வந்தது.

(4) எந்தையெமக்கருளுமன்—என்னுமிடத்து மிகுதியுங்கொடுப்பான் எனப் பொருள்படுதலால், மன், மிகுதிப் பொருளில் வந்தது.

(5) 'அதுமற் கொண்கன்றேரே' —என்னுமிடத்து, வேறு பொருளின்றி வருதலால், மன் அசைநிலையில் வந்தது.

211. **அம்ம என்னும் இடைச்சொல்,(1)ஒன்று சொல்லுவேன் கேளென்னும் ஏவற் பொருளிலும் (2) அசைநிலையிலும் வரும்.**

உ-ம்:— (1) 'அம்மவாழி தோழி'—என்னுமிடத்து, அம்ம என்பது ஒன்று சொல்லுவேன் கேளென்னும் பொருளில் வந்தது.

(2) அதுமற்றம்ம — என்னுமிடத்து, வேறுபொருளின்றி வருதலால், அம்ம என்பது அசைநிலையில் வந்தது.

**212. தொறும், தோறும், என்னும் இவ்விரண்டு இடைச் சொற்களும், (1) இடப்பன்மைப் பொருளிலும் (2) தொழிற்பயில்வுப்பொருளிலும் வரும்.**

உ - ம்:—(1) சோழநாட்டி லூர்தொறுஞ் சிவாலயங்களுண்டு (2) படிக்குந்தோறும் பயனுண்டு.

**213. இனி என்பது, (1)எல்லைப் பொருளிலும் (2) காலப்பொருளிலும் வரும்.**

உ - ம்:—(1) இனியெம்மூர், (2) இனிவருவேன்.

**214. ஆவது என்னும் இடைச்சொல், விகற்பப் பொருளில் வரும்.**

உ - ம் :— வல்லெழுத்தாவது மெல்லெழுத்தாவது மிகும்.

**215. கோவென, சோவெனா, துடுமெனா, ஓல்லெனா, கஃறெனா, சுஃறெனா, என்றும் ; கடகடெனா, களகளெனா, திடுதிடெனா, நெறுநெறெனா, படபடெனா, என்றும் வருவன ஒலிக்குறிப்புப் பொருளைத்தரும் இடைச்சொற்களாம்.**

**216. துண்ணெனா, துடுக்கெனா, திட்கெனா, திடுக்கெனா, என்றற்போல்வன அச்சக் குறிப்புப் பொருளைத்தரும் இடைச்சொற்களாம்.**

**217. பொள்ளெனா, பொருக்கெனா, ஞெரேலெனா, என்றற்போல்வன விரைவுக்குறிப்புப்பொருளைத்தரும் இடைச்சொற்களாம்.**

218. அந்தோ, அன்னே, ஐயோ, ஆஅ, ஓஒ, என்ருற்போல்வன இரக்கப்பொருளைத் தரும் இடைச்சொற்களாம்.

219. சீ, சீசீ, சிச்சீ, சை, முதலியன இகழ்ச்சிப் பொருளைத் தரும் இடைச்சொற்களாம்.

220. ஆஅ, ஆகா, ஓஒ, ஓகோ, அம்மா, என்ருற்போல்வன அதிசயப் பொருளைத் தரும் இடைச்சொற்களாம்.

221. மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ, என்பன முன்னிலையிடத்து வேறுபொருளின்றி அசைத்தலே பொருளாய் வரும் இடைச்சொற்களாம்.

உ - ம்:—கேண்மியா, என்பதில் மியாவென்பது முன்னிலையிடத்துஅசையாய் வந்தது. மற்றவைகளும் இப்படியே.

222. யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஒரும், போலும், அன்று, ஆம், முதலியன, மூவிடத்தும் வேறுபொருளின்றி அசைத்தலே பொருளாய்வரும் இடைச்செற்களாம்.

உ - ம்:—யா பன்னிருவர் மாணுக்கர் அகத்தியனுர்க்கு —என்பதில், யா என்பது அசையாய் வந்தது. மற்றவைகளும் இப்படியே.

## 4. உரிச்சொல்லியல்.

**223.** உரிச்சொற்களாவன, பொருள்களின் பண்புகளை யுணர்த்துஞ் சொற்களாம்.

அவை, குணப்பண்புச்சொற்களும் தொழிற் பண்புச் சொற்களும் என இருவகைப்படும்.

**224.** குணப்பண்புச் சொற்கள், நிறத்தையும் வடிவையும் சுவையையும் பரிசத்தையும் நாற்றத்தையும் சாதியையும் அளவையும் அறிவு முதலியனவற்றையும் உணர்த்தும் சொற்களாம்.

**225.** நிறத்தையுணர்த்தும் பண்புச்சொற்கள், செம்மை கருமை வெண்மை பொன்மை பசுமை முதலியனவாம்.

**226.** வடிவையுணர்த்தும் பண்புச் சொற்கள், வட்டம் சதுரம் இருகோணம் முக்கோணம் கூன் குறள் முதலியனவாம்.

**227.** சுவையையுணர்த்தும் பண்புச்சொற்கள், கைப்பு புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு கார்ப்பு இனிப்பு என்னும் அறுசுவைகளை உணர்த்திவரும் சொற்களாம்.

**228.** பரிசத்தையுணர்த்தும் பண்புச்சொற்கள், வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்ம்மை சீர்மை இழுமெனல் சருச்சரை என்னும் எண்வகைப் பரிசங்களை உணர்த்திவரும் சொற்களாம்.

**229.** நாற்றத்தையுணர்த்தும் பண்புச்சொற்கள், நற்கந்தம் துற்கந்தம் என்னும் இருவகை நாற்றங்களை உணர்த்திவரும் சொற்களாம்.

**230. சாதியையுணர்த்தும் பண்புச்சொற்கள், அந்தணர் அரசர் முதலிய சாதியை உணர்த்திவரும் சொற்களாம்.**

**231. அளவையுணர்த்தும் பண்புச்சொற்கள், குறுமை நெடுமை முதலிய அளவை உணர்த்திவரும் சொற்களாம்.**

**232. அறிவுமுதலியனவற்றையுணர்த்தும் பண்புச்சொற்கள், அறிவு அச்சம் மானம் பொறுமை மயக்கம் விருப்பு வெறுப்பு இரக்கம் நன்மை தீமை முதலியனவாம்.**

இவை பொருள்களின் குணப்பண்பை உணர்த்துமிடத்து உரிச்சொற்களென்றும், அப் பண்புகளுக்குப் பெயர்களாய் வருமிடத்துப் பெயர்ச்சொற்களென்றும் கொள்ளப்படும்.

**233. தொழிற் பண்புச்சொற்கள், பொருள்களின் தொழிற்பண்புகளை யுணர்த்தும் நட, வா, முதலியனவாம்.**

இவை, பொருள்களின் தொழிற்பண்பை உணர்த்துமிடத்து உரிச்சொற்களென்றும், வினைமுதல்முதலிய காரணங்களாற்புடைபெயர்ந்து தொழிற்பண்பின் காரியமாய்ப் பொருட் புடைபெயர்ச்சியை உணர்த்துமிடத்து வினைச்சொற்களென்றும், தொழிற்குத் தொன்றுதொட்டு வழங்கும்பெயர்களாக வருமிடத்துத் தனிவினைப் பெயர்களென்றும்கொள்ளப்படும்.

**234. இவ்வுரிச்சொற்கள், ஒருகுணத்தையும் பலகுணத்தையும் உணர்த்திவரும்.**

**235. சால், உறு, தவ, நனி, கூர், கழி, என்பன மிகுதி என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாம்.**

உ - ம்:—சீர்சால் அகத்தியன், உறுபுகழ், தவப்பல, நனி பேதை, துயர்கூர்ந்தான், கழிநலம்,

**236. செழுமை என்பது, வளனும் கொழுப்பும் என்னும் இருகுணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாம்.**

உ - ம்:—செழுஞ்சாலி, செழும்புலியேறு.

இவ்வாறு ஒரு குணத்தையும், பல குணத்தையும், உணர்த்திவரும் ஏனைய உரிச்சொற்க ளெல்லாவற்றையும் அறிந்துகொள்க.

---

பெயரியல் முதலிய நான்கியல்களிலே சொல்லப்பட்டபடி-சமுதாயவாற்றலானும், உறுப்பாற்றலானும், பொருளையுணர்த்தி நிற்கும் சொற்களைப் பெயர்ச்சொற்களென்றும், வினைமுதல் முதலிய காரணங்களாலே புடைபெயரும் பொருட் புடைபெயர்ச்சியை உணர்த்தி நிற்கும் சொற்களை வினைச்சொற்களென்றும், பொருளையும் பொருட் புடைபெயர்ச்சியையும் தம்மாலன்றித் தத்தம் குறிப்பால் உணர்த்திப் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களுமாகாமல் அவற்றின் வேறுமாகாமல் இடை நிகரனவாய் நிற்குஞ் சொற்களை இடைச்சொற்களென்றும், பொருட்கு உரிமை பூண்டு நிற்பனவாகிய குணப் பண்பையுந் தொழிற்பண்பையும் உணர்த்தி நிற்குஞ் சொற்களை உரிச்சொற்களென்றும் கொள்க.

---

# III. புணர்ச்சியதிகாரம்.

## 1. உயிரீற்றுப்புணரியல்.

237. புணர்ச்சியதிகாரம், உயிரீற்றுப்புணரியல், மெய்யீற்றுப் புணரியல், பொதுப்புணரியல், வடவெழுத்துப் புணரியல், என நான்கு இயல்களாக வகுக்கப் படும்.

238. புணர்ச்சியாவது, நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடப் புணர்வதாம்.

239. அவை புணருமிடத்து, வேற்றுமைவழியாலும் அல்வழியாலும் புணரும்.

240. வேற்றுமைப்புணர்ச்சியாவது, ஐ, ஆல், கு, இன், அது, கண், என்னும் ஆறுருபுகளும் இடையிலே மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரச் சொற்கள் புணர்வதாம்.

உ - ம்:—(வேற்றுமைத்தொகை) (வேற்றுமைவிரி)

| | |
|---|---|
| மரம்வெட்டினுன், | மரத்தைவெட்டினுன். |
| கல்லெறிந்தான், | கல்லாலெறிந்தான். |
| கொற்றன்மகன், | கொற்றனுக்குமகன். |
| மலைவீழருவி, | மலையின்வீழருவி. |
| சாத்தன்கை, | சாத்தனதுகை. |
| மலைநெல், | மலையின்கண்நெல். |

241. அல்வழிப் புணர்ச்சியாவது, வேற்றுமையல்லாத வழியிற் புணர்வதாம்.

242. அது, (1)வினைத்தொகையும், (2) பண்புத்தொகையும், (3) உவமைத்தொகையும், (4) உம்மைத்

தொகையும், (5) அன்மொழித்தொகையும், (6) எழுவாய்த்தொடரும், (7) விளித்தொடரும் (8) வினைமுற்றுத் தொடரும், (9) பெயரெச்சத் தொடரும், (10) வினையெச்சத்தொடரும், (11) இடைச்சொற்றொடரும், (12) உரிச்சொற்றொடரும் எனப் பன்னிரண்டு வகைப் படும்.

உ - ம்:—

| | | |
|---|---|---|
| (1) | கொல்யானை.<br>ஓடுபாம்பு. | வினைத்தொகை. |
| (2) | கருங்குதிரை.<br>செந்தாமரை. | பண்புத்தொகை. |
| 2a) | சாரைப்பாம்பு.<br>ஆயன்சாத்தன். | இருபெயரொட்டுப் பண்புத்தொகை. |
| (3) | பவளவாய்.<br>மதிமுகம். | உவமைத்தொகை. |
| (4) | இராப்பகல்.<br>உடலுயிர். | உம்மைத்தொகை. |
| (5) | பொற்றொடி.<br>தாழ்குழல். | அன்மொழித்தொகை. |
| (6) | சாத்தன் வந்தான்.<br>மரம் வளர்ந்தது. | எழுவாய்த்தொடர். |
| (7) | சாத்தா வா.<br>கொற்றா கொள். | விளித்தொடர். |
| (8) | வந்தான் சாத்தன்.<br>வளர்ந்தது மரம். | முற்றுத்தொடர். |
| (9) | வந்த சாத்தன்.<br>வருகின்ற புலி. | பெயரெச்சத்தொடர். |
| (10) | வந்து போனான்.<br>வரச் சொன்னான். | வினையெச்சத்தொடர். |

| | | |
|---|---|---|
| (11) | மற்றொன்று. இனிச்செய்வேன். | இடைச்சொற்றொடர். |
| (12) | நனி பேதை. கடிக் கமலம். | உரிச்சொற்றொடர். |

பொன்னனவன் என வரும் குறிப்புவினைமுற்று, முற்றுத் தொடரிலும்; கரியகுதிரை என வரும் குறிப்புப்பெயரெச்சம், பெயரெச்சத் தொடரிலும்; நாளன்றிப்போனான் என வரும் குறிப்புவினை யெச்சம், வினையெச்சத் தொடரிலும் அடங்கு மெனக் கொள்க.

அன்றியும், பாம்புபாம்பு என ஒரு சொல் அடுக்கிவருதல் முதலாக வேற்றுமை வழியில் வாராதனவெல்லாம் அல்வழி யாம் என அறிக.

**243. இப்படி வேற்றுமை வழியானும் அல்வழி யானும் புணருமிடத்து, நிலைமொழியும் வருமொழியும் இயல்பாகவாவது விகாரமாகவாவது புணரும்.**

**244. இயல்புப் புணர்ச்சியாவது, நிலைமொழி யும் வருமொழியும் விகாரமின்றிப் புணர்வதாம்.**

உ - ம்:—பொன்மணி, சாத்தன்கை.

**245. விகாரப் புணர்ச்சியாவது, நிலைமொழியே னும் வருமொழியேனும் இவ்விருமொழியுமேனும், தோன்றல் திரிதல் கெடுதல் என்னும் இம் மூன்று விகாரங்களுள் ஒன்றையாவது பலவற்றையாவது பெற்றுப் புணர்வதாம்.**

உ - ம்:—வாழைப்பழம்— (ப்) தோன்றல்.
மட்குடம்— (ண்) திரிதல்.
மரவேர் — (ம்) கெடுதல்.
நிலப்பனை— (ம்) கெடுதல், (ப்)தோன்றல்.
பனங்காய்— (ஐ) கெடுதல், (அம்) தோன்றல், (ம்) திரிதல்.

246. இ, ஈ, ஐ, இம் மூன்று உயிரீற்றின் முன்னும் உயிர்முதன்மொழி வரின், இடையில் யகர உடம்படு மெய் வரும்.

உ - ம்:—கிளி + அழகு = கிளியழகு.
தீ + அழகு = தீயழகு.
கை + அழகு = கையழகு.

247. அ, ஆ, உ, ஊ, ஓ, ஒ, ஔ, இவ்வேழுயிரீற்றின் முன்னும் உயிர்முதன்மொழி வரின், இடையில் வகர உடம்படுமெய் வரும்.

உ - ம்:—பல + அணி = பலவணி.
பலா + இலை = பலாவிலை.
திரு + அடி = திருவடி.
பூ + அரும்பு = பூவரும்பு.
நொ + அழகா = நொவ்வழகா.
கோ + அழகு = கோவழகு.
கௌ + அழகு = கௌவழகு.

248. ஏகார உயிரீற்றின்முன் உயிர்முதன்மொழி வரின், இடையில் யகரமாவது வகரமாவது உடம்படு மெய்யாக வரும்.

உ - ம்:—அவனே + அடித்தான் = அவனேயடித்தான்.
சே + உழுதது = சேவுழுதது.

249. குற்றியலுகர வீற்றின் முன் உயிர்முதன் மொழி வந்தால், அவ்வுகரங்கெடும்; உகரங்கெட நின்ற மெய்யின்மேல் வந்த உயிர் ஏறும்.

உ - ம்:—ஆடு + அரிது = ஆடரிது.
அஃது + இல்லை = அஃதில்லை.
வரகு + அரிது = வரகரிது.
கொக்கு + ஓடிற்று = கொக்கோடிற்று.
குரங்கு + ஏறிற்று = குரங்கேறிற்று.
தெள்கு + அழகிது = தெள்கழகிது.

250. வேற்றுமையில் உயிரீற்று மரப்பெயர்முன் வல்லெழுத்து வந்தால், சிலவற்றின்முன் வந்த வல்லெழுத்தும், சிலவற்றின்முன் அவ் வல்லெழுத்திற் கினமாகிய மெல்லெழுத்தும், சிலவற்றின்முன் அம்முச் சாரியையும் தோன்றும்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம்:—பலா | + காய் | = பலாக்காய். | வல்லெழுத்து தோன்றின. |
| ஆத்தி | + செதிள் | = ஆத்திச்செதிள். | |
| இலந்தை | + துளிர் | = இலந்தைத்துளிர். | |
| கொன்றை | + பூ | = கொன்றைப்பூ. | |
| விளா | + காய் | = விளங்காய். | மெல்லெழுத்து தோன்றின. |
| காயா | + செதிள் | = காயாஞ்செதிள். | |
| மா | + துளிர் | = மாந்துளிர். | |
| களா | + பழம் | = களம்பழம். | |
| புளி | + காய் | = புளியங்காய். | அம்முச்சாரியை தோன்றின. |
| அரை | + செதிள் | = அரையஞ்செதிள். | |
| கடம்பு | + துளிர் | = கடப்பந்துளிர். | |
| வேம்பு | + பழம் | = வேப்பம்பழம். | |

அன்றியும், ஐகாரவீற்று மரப்பெயர்களுட்சில, **பனங்காய், மாதளம்பழம்,** என ஐகாரங்கெட்டு அம்முச்சாரியை பெற்றும் வரும்.

இம் மரப்பெயர்களின்முன் அல்வழியில் வரும்வல்லினமும், இருவழியிலும் வரும் மெல்லினமும் இடையினமும், அவ்வவ்வீறு கூறுமிடத்துக் கூறப்படும் விதிகளைப் பெறும்.

**251. மூன்று சுட்டிடைச் சொல் முன்னும், எ என்னும் வினாவிடைச்சொல் முன்னும், யகரம் ஒழிந்த மெய்கள் வரின் வந்த எழுத்து மிகும்.**

**உ - ம்:**—அ + கொற்றன் = அக்கொற்றன்.
இ + கொற்றன் = இக்கொற்றன்.
உ + கொற்றன் = உக்கொற்றன்.
எ + கொற்றன் = எக்கொற்றன்.
அ + நாள் = அந்நாள்.
இ + நாள் = இந்நாள்.
உ + நாள் = உந்நாள்.
எ + நாள் = எந்நாள்.
அ + வாழ்வு = அவ்வாழ்வு.
இ + வாழ்வு = இவ்வாழ்வு.
உ + வாழ்வு = உவ்வாழ்வு.
எ + வாழ்வு = எவ்வாழ்வு.

**252. இவைகளின்முன் யகரமும் உயிரும் வந்தால் இடையில் வகரம் தோன்றும்.**

**உ - ம்:**—அ + யானை = அவ்யானை. இ + யானை = இவ்யானை.
உ + யானை = உவ்யானை. எ + யானை = எவ்யானை.
அ + உயிர் = அவ்வுயிர். இ + உயிர் = இவ்வுயிர்.
உ + உயிர் = உவ்வுயிர். எ + உயிர் = எவ்வுயிர்.

253. அந்த, இந்த, எந்த, என மரூஉ மொழிகளாய் வரும் சுட்டுவினாக்களின் முன் வரும் வல்லினம் மிகும்; மெல்லினமும் இடையினமும் இயல்பாம்.

உ - ம்:—அந்த + கல் = அந்தக்கல்.
அந்த + மலை = அந்தமலை.
அந்த + யானை = அந்தயானை.
இந்த + கல் = இந்தக்கல்.
இந்த + மலை = இந்தமலை.
இந்த + யானை = இந்தயானை.
எந்த + கல் = எந்தக்கல்.
எந்த + மலை = எந்தமலை.
எந்த + யானை = எந்தயானை.

[அகரவீறு]

254. அகரவீற்றுப் பெயர்ச்சொல் முன் வரும் வல்லெழுத்து இருவழியிலும் மிகும்.

உ - ம்:—விள + குறிது = விளக்குறிது. (அல்வழி)
அத + சிறிது = அதச்சிறிது. ,,
விள + குறுமை = விளக்குறுமை (வேற்றுமை)
அத + சிறுமை = அதச்சிறுமை. ,,

255. அகரவீற்றுச் செயவென்னும் வினையெச்சத்தின்முன்னும், இடைச்சொல் முன்னும், உரிச்சொல் முன்னும் வரும் வல்லினம் மிகும்.

உ - ம்:—

உண்ண + கொண்டான் = உண்ணக்கொண்டான் } வினை
புலிபோல + பாய்ந்தான் = புலிபோலப்பாய்ந்தான் } யெச்சம்.
பொள்ளென + புறம்வேரார் = பொள்ளெனப்புறம்வேரார்.
—இடைச்சொல்.
தவ + பெரியன் = தவப்பெரியன். —உரிச்சொல்.

**256. அகரவீற்றுப் பெயரெச்சத்தின் முன்னும், வியங்கோள் வினைமுற்றின்முன்னும், அஃறிணைப் பன்மை வினைமுற்றின்முன்னும், ஆறும் வேற்றுமையின் அகரவுருபின் முன்னும், அம்ம என்னும் இடைச்சொல்லின் முன்னும் வரும் வல்லினம் இயல்பாம்.**

உ - ம்:—

| | | | |
|---|---|---|---|
| உண்ட + குதிரை | = உண்ட குதிரை. | | பெய ரெச்சம். |
| உண்கின்ற + செந்நாய் | = உண்கின்ற செந்நாய். | | |
| உண்ணாத + தகர் | = உண்ணாத தகர். | | |
| வாழ்க + கொற்றா | = வாழ்க கொற்றா. | | வியங்கோள் வினைமுற்று. |
| வாழிய + சாத்தா | = வாழிய சாத்தா. | | |
| உண்டன + குதிரைகள் | = உண்டன குதிரைகள். | | |
| உண்கின்றன + செந்நாய்கள் | = உண்கின்றன செந்நாய்கள். | | |
| உண்பன + தகர்கள் | = உண்பன தகர்கள் | | |
| உண்ணாத + பன்றிகள் | = உண்ணாத பன்றிகள். | | —அஃறிணைப்பன்மை வினைமுற்று. |
| தன + கைகள் | = தன கைகள். | | —அகரவுருபு. |
| அம்ம + கொற்றா | = அம்ம கொற்றா. | | அம்மவென்னு மிடைச்சொல். |
| அம்ம + சாத்தா | = அம்ம சாத்தா. | | |

அன்றியும், உண்ணியகொண்டான், உண்ணியசென்றான், எனச் செய்யுளிலே வரும் செய்யிய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்தின் முன் வரும் வல்லினம் இயல்பாமெனவும்; வாழிய சாத்தா என்பது வாழி சாத்தா என ஈறு கெட்டு வருமெனவும், கெட்டவிடத்து வரும் வல்லினம் இயல்பாமெனவும் அறிக.

257. மேற்கூறிய அகரவீற்றுச் சொற்களின் முன் வரும் மெல்லினமும் இடையினமும் இயல்பாம்.

உ - ம்:—விள + நீண்டது = விளநீண்டது.
விள + நீட்சி = விளநீட்சி.
அத + வலிது = அதவலிது.
அத + வலிமை = அதவலிமை.
உண்ண + மாண்டது = உண்ணமாண்டது.
உண்ட + மான் = உண்டமான்.
உண்டன + வானரங்கள் = உண்டன வானரங்கள்.

மற்றவைகளு மிப்படியே.

258. பல சில என்னும் சொற்கள், தம்முன் தாம் வரின் வருமொழி முதலெழுத்து இயல்பாகியும், மிக்கும், நிலைமொழி லகரம் இரட்டித்தும், நிலைமொழி யீற்று அகரங்கெட லகரம் றகரமாய்த் திரிந்தும், திரியாமலும் வரும்.

உ - ம்:—பல + பல = பலபல, சில + சில = சிலசில,
பலப்பல, சிலச்சில,
பல்லபல, சில்லசில,
பற்பல, சிற்சில,
பல்பல. சில்சில.

அன்றியும், பலகலை, பல்கலை; சிலசேனை, சில்சேனை; பலஞானம், பன்ஞானம்; சிலயானை, சில்யானை எனப் பிறசொற்கள் வரின் ஈற்று அகரங் கெட்டும் கெடாமலும் வருமென அறிக.

[ஆகாரவீறு]

259. ஆகாரவீற்றுப் பெயர்ச்சொல்முன் வரும் வல்லினம் இருவழியிலும் மிகும்.

உ - ம்:—தாரா + கடிது = தாராக்கடிது.
தாரா + கடுமை = தாராக்கடுமை.

மூங்கா + சிறிது = மூங்காச்சிறிது.
மூங்கா + சிறுமை = மூங்காச்சிறுமை.
உசா + தீது = உசாத்தீது.
உசா + தீமை = உசாத்தீமை.
வயா + பெரிது = வயாப்பெரிது.
வயா + பெருமை = வயாப்பெருமை.

**260.** அல்வழியில், ஆ, மா, ஆமா, என்கிற மூன்று பெயர்களின் முன்னும், யா என்னும் வினாப் பெயர் முன்னும், ஆ என்னும் ஈற்று வினாவிடைச் சொல்முன்னும், ஆகாரவீற்று அஃறிணைப் பன்மை வினைமுற்றின் முன்னும், ஏவல் வினைமுற்றின்முன்னும், மியா என்னும் இடைச்சொல் முன்னும் வரும் வல்லினம் இயல்பாம்.

உ-ம்:—ஆ + குறிது = ஆகுறிது.
மா + சிறிது = மாசிறிது.
ஆமா + பெரிது = ஆமாபெரிது.
யா + குறியன = யாகுறியன.
யா + சிறியன = யாசிறியன.
யா + தீயன = யாதீயன.
சாத்தனா + கொண்டான் = சாத்தனாகொண்டான்.
கொற்றனா + சென்றான் = கொற்றனாசென்றான்.
உண்ணா + குதிரைகள் = உண்ணாகுதிரைகள்.
ஓடா + செந்நாய்கள் = ஓடாசெந்நாய்கள்.
நடவா + தகர்கள் = நடவாதகர்கள்.
செய்யா + பன்றிகள் = செய்யாபன்றிகள்.
தா + கொற்றா = தாகொற்றா.
வா + சாத்தா = வாசாத்தா.
கேண்மியா + கொற்றா = கேண்மியாகொற்றா.
சென்மியா + சாத்தா = சென்மியாசாத்தா.

அன்றியும், உண்ணுக்கொற்றன், என ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன்னும், உண்ணுப் போனான், என ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சத்தின்முன்னும் வரும் வல்லினம் மிகுமெனக்கொள்க.

261. மேற்கூறிய ஆகாரவீற்றுச் சொற்களின் முன் வரும் மெல்லினமும் இடையினமும், இருவழியிலும் இயல்பாம்.

| | | |
|---|---|---|
| உ - ம்:—தாரா | + ஞான்றது | = தாராஞான்றது. |
| தாரா | + ஞாற்சி | = தாராஞாற்சி. |
| மூங்கா | + வலிது | = மூங்காவலிது. |
| மூங்கா | + வன்மை | = மூங்காவன்மை. |
| ஆ | + நீண்டது | = ஆநீண்டது. |
| ஆ | + நீட்சி | = ஆநீட்சி. |
| ஆ | + யாது | = ஆயாது. |
| ஆ | + யாப்பு | = ஆயாப்பு. |
| யா | + நீண்டன | = யாநீண்டன. |
| யா | + வலியன | = யாவலியன. |
| கொற்றனு | + நடந்தான் | = கொற்றனுநடந்தான். |
| கொற்றனு | + வந்தான் | = கொற்றனுவந்தான். |
| உண்ணு | + நாகங்கள் | = உண்ணுநாகங்கள். |
| நடவா | + யானைகள் | = நடவாயானைகள். |
| தா | + நாகா | = தாநாகா. |
| வா | + வளவா | = வாவளவா. |
| கேண்மியா | + நாகா | = கேண்மியாநாகா. |

சுறவுக்கோடு, புறவுச்சிறை, எனக் குற்றெழுத்தின்கீழ் நின்ற ஆகாரம் குறுகி உகரச்சாரியை பெற்றவிடத்தும் வரும் வல்லினம் மிகும் எனவும் கொள்க.

## [இகரவீறு]

262. இகர வீற்று மொழிகளின் முன் அல்வழியில் வல்லினம் வரின், எழுவாய்த்தொடரிலும், வினைமுற்றுத் தொடரிலும், உம்மைத் தொகையிலும், இயல்பாம்; இருபெயரொட்டுப் பண்புத் தொகையிலும், உவமைத் தொகையிலும், செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சத்தொடரிலும், குறிப்புவினையெச்சத் தொடரிலும், இடைச்சொற் றொடரிலும், உரிச்சொற் றொடரிலும், சிறுபான்மை பிற தொடரிலும் மிகும்.

உ - ம்:—

| | | | |
|---|---|---|---|
| பருத்தி | + குறிது | = பருத்திகுறிது. | எழுவாய்த் தொடர். |
| கொடி | + சிறிது | = கொடிசிறிது. | |
| உண்டி | + சாத்தா | = உண்டிசாத்தா. | முன்னிலை வினைமுற்று. |
| உண்ணுதி | + கொற்றா | = உண்ணுதிகொற்றா. | |
| எறி | + சாத்தா | = எறிசாத்தா. | ஏவல் வினைமுற்று. |
| படி | + கொற்றா | = படிகொற்றா. | |
| பரணி | + கார்த்திகை | = பரணிகார்த்திகை. | உம்மைத் தொகை. |
| வெள்ளி | + சனி | = வெள்ளிசனி. | |
| மாசி | + திங்கள் | = மாசித்திங்கள். | பண்புத் தொகை. |
| அலி | + கொற்றன் | = அலிக்கொற்றன். | |
| காவி | + கண் | = காவிக்கண் | —உவமைத்தொகை. |
| தேடி | + கொண்டான் | = தேடிக்கொண்டான். | —செய்தென்வினையெச்சம். |
| ஓடி | + போனான் | = ஓடிப்போனான். | |
| நாளன்றி | + செய்தான் | = நாளன்றிச்செய்தான். | —குறிப்புவினையெச்சம். |
| நாளின்றி | + போனான் | = நாளின்றிப்போனான். | |
| இனி | + செய்வேன் | = இனிச்செய்வேன். | —இடைச்சொல். |
| கடி | + கமலம் | = கடிக்கமலம். | —உரிச்சொல். |

**263. இகரவீற்று மொழிகளின்முன், வேற்றுமையில் வல்லினம் வரின் மிகும்.**

உ - ம்:—கரி + கோடு = கரிக்கோடு.
கிளி + சிறகு = கிளிச்சிறகு.
நரி + தலை = நரித்தலை.
பருத்தி + பூ = பருத்திப்பூ.
மாசி + திருவிழா = மாசித்திருவிழா.
காவி + தடம் = காவித்தடம்.

ஏரிகட்டினான் என இரண்டனுருபு தொக்கு வருமிடத்து இயல்பாமெனவும், ஏரிகரை குழவிகை எனச் சிறுபான்மை அஃறிணைப் பெயரிடத்து வரும் வல்லினம் இயல்பாதலும் உளவெனவும் கொள்க.

அன்றியும், புளிக்கறி, புளிங்கறி, எனச்சுவையை உணர்த்தும் புளி என்பதன் முன் வல்லெழுத்தும் மெல்லெழுத்தும் உறழ்ந்துவரும் என்றறிக.

**264. மேற்கூறிய இகரவீற்று மொழிகளின் முன் மெல்லினமும் இடையினமும் வரின், இருவழியிலும் இயல்பாம்.**

உ - ம்:—பருத்தி + நீண்டது = பருத்திநீண்டது.
பருத்தி + நீட்சி = பருத்திநீட்சி.
கொடி + வலிது = கொடிவலிது.
கொடி + வன்மை = கொடிவன்மை.
தேடி + நின்றான் = தேடிநின்றான்.
ஓடி + வந்தான் = ஓடிவந்தான்.

மற்றவைகளு மிப்படியே.

### [ஈகாரவீறு]

**265. ஈகாரவீற்றுப் பெயர்ச்சொல்முன், இருவழியிலும் வல்லினம் வரின் மிகும்.**

உ - ம்:—அல்வழி. வேற்றுமை.

ஈ + குறிது = ஈக்குறிது. ஈ + குறுமை = ஈக்குறுமை.
தீ + சிறிது = தீச்சிறிது. தீ + சிறுமை = தீச்சிறுமை.
வீ + பெரிது = வீப்பெரிது. வீ + பெருமை = வீப்பெருமை.

அல்வழியில் வல்லினம்வரின், பீகுறிது, நீகுறியை, என இவ் விரு பெயர்களின்முன் இயல்பாமெனவும்; ஈகொற்று சீசாத்தா என ஏவல் வினைமுற்றின்முன் இயல்பாமெனவும்; மீ என்பதன்முன் வல்லெழுத்து வரின், மீகண் என இயல்பாதலும் மீக்கூற்று, மீக்கோள், என வல்லெழுத்து மிகுதலும், மீந்தோல் என மெல்லெழுத்து மிகுதலும் உளவெனவும் கொள்க.

**266. மேற் கூறிய ஈகார வீற்று மொழிகளின் முன், இருவழியிலும் மெல்லினமும் இடையினமும் வரின் இயல்பாம்.**

உ-ம்:—அல்வழி. வேற்றுமை.

ஈ + நீண்டது = ஈநீண்டது. ஈ + நீட்சி = ஈநீட்சி.
தீ + வலிது = தீவலிது. தீ + வன்மை = தீவன்மை.

மற்றவைகளு மிப்படியே.

### [முற்றியலுகரவீறு]

**267. முற்றியலுகரவீற்றுப் பெயர்களின்முன், இருவழியிலும் வரும் வல்லினம் மிகும்.**

உ - ம்:—வடு + குறிது = வடுக்குறிது.
வடு + குறுமை = வடுக்குறுமை.
மது + சிறிது = மதுச்சிறிது.
மது + சிறுமை = மதுச்சிறுமை.
பசு + தீது = பசுத்தீது.
பசு + தீமை = பசுத்தீமை.

திரு + பெரிது = திருப்பெரிது.
திரு + பெருமை = திருப்பெருமை.

**268.** அது, இது, உது, என்னும் சுட்டுப்பெயர் முன்னும், எது என்னும் வினாப்பெயர் முன்னும், ஒரு, இரு, அறு, எழு, என்று விகாரப்பட்டு வரும் எண்ணுப்பெயர் முன்னும், ஏவல் வினைமுற்றின்முன் னும், ஒடு என்னும் மூன்றனுருபின் முன்னும், அது என்னும் ஆறனுருபின் முன்னும் வரும் வல்லினம் இயல்பாம்.

உ-ம்:—அது + குறிது = அதுகுறிது.
அது + கண்டான் = அதுகண்டான்.
இது + சிறிது = இதுசிறிது.
இது + செகுத்தான் = இதுசெகுத்தான்.
உது + பெரிது = உதுபெரிது.
உது + தந்தான் = உதுதந்தான்.
எது + சிறிது = எதுசிறிது.
எது + பெற்றான் = எதுபெற்றான்.
ஒரு + கை = ஒருகை.
இரு + சேனை = இருசேனை.
அறு + தானை = அறுதானை.
எழு + புவி = எழுபுவி.
விடு + சாத்தா = விடுசாத்தா.
எடு + கொற்றா = எடுகொற்றா.
அவனொடு + சென்றான் = அவனொடுசென்றான்.
அவனது + கை = அவனதுகை.

**269.** மேற் கூறிய முற்றியலுகரவீற்று மொழி களின்முன் உயிர்வரின் பொதுவிதியால்உடம்படுமெய் பெறுவதன்றிச் சிறுபான்மை நிலைமொழி யீற்று உக

**ரம்கெடும்; மெல்லினமும் இடையினமும்வரின், இரு வழியிலும் இயல்பாம்.**

உ - ம்:—அல்வழி. வேற்றுமை.

கதவு + அழகிது = கதவழகிது. கதவு + அழகு = கதவழகு.
வரவு + அரிது = வரவரிது. வரவு + அருமை = வரவருமை.
வடு + நீண்டது = வடுநீண்டது. வடு + நீட்சி = வடுநீட்சி.
பசு + வலிது = பசுவலிது. பசு + வன்மை = பசுவன்மை.

மற்றவைகளு மிப்படியே.

## [குற்றியலுகரவீறு]

270. **வன்றொடர் குற்றியலுகரவீற்று மொழிகளின்முன் வரும் வல்லினம், இரு வழியிலும் மிகும்.**

உ - ம்:—கொக்கு + கடிது = கொக்குக்கடிது.
கொக்கு + கடுமை = கொக்குக்கடுமை.
கச்சு + சிறிது = கச்சுச்சிறிது.
கச்சு + சிறுமை = கச்சுச்சிறுமை.

படித்துச் சென்றான், கற்றுப் பேசினான், என வினைச் சொல்முன் அல்வழியிலே மிக்கன.

271. **மென்றொடர் குற்றியலுகரவீற்று மொழிகளின்முன் வரும் வல்லினம், அல்வழியில் இயல்பாம்; வேற்றுமையிலே மிகும்.**

உ - ம்:—குரங்கு + கடிது = குரங்குகடிது.
குரங்கு + கால் = குரங்குக் கால்.
அம்பு + தீது = அம்புதீது.
அம்பு + தலை = அம்புத்தலை.

அறிந்துகொண்டான், நடந்துசென்றான் என வினைச் சொல்முன் அல்வழியில் இயல்பாயின.

272. நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், இடைத்தொடர், என்னும் இந் நான்கு தொடர்க் குற்றியலுகரவீற்று மொழிகளின்முன் வரும் வல்லினம் இருவழியிலும் இயல்பாம்.

உ - ம்:—நாகு + கடிது = நாகுகடிது.
நாகு + கடுமை = நாகுகடுமை.
எஃகு + தீது = எஃகுதீது.
எஃகு + தீமை = எஃகுதீமை.
வரகு + சிறிது = வரகுசிறிது.
வரகு + சிறுமை = வரகுசிறுமை.
தெள்கு + பெரிது = தெள்கு பெரிது.
தெள்கு + பெருமை = தெள்கு பெருமை.

ஏகுகால், அஃகுபிணி, பொருதுசென்றான், அறிந்து தந்தான், என வினைச்சொல்முன் அல்வழியில் இயல்பாயின.

273. மேற்கூறிய அறுவகைக் குற்றியலுகர வீற்றுமொழிகளின்முன் வரும் மெல்லினமும் இடையினமும் இருவழியிலும் இயல்பாம்.

உ - ம்:—நாகு + ஞான்றது = நாகுஞான்றது.
நாகு + ஞாற்சி = நாகுஞாற்சி.
எஃகு + நீண்டது = எஃகுநீண்டது.
எஃகு + நீட்சி = எஃகுநீட்சி.
வரகு + மாண்டது = வரகுமாண்டது.
வரகு + மாட்சி = வரகுமாட்சி.
கொக்கு + நெடிது = கொக்குநெடிது.
கொக்கு + நெடுமை = கொக்குநெடுமை.
குரங்கு + வந்தது = குரங்குவந்தது.
குரங்கு + வருகை = குரங்குவருகை.
தெள்கு + வலிது = தெள்குவலிது.
தெள்கு + வன்மை = தெள்குவன்மை.

**274.** டவ்வையும் றவ்வையும் இறுதியிலுடைய நெடிற்றொடர் உயிர்த்தொடர் குற்றியலுகரவீற்று மொழிகளின் முன்னர் நாற்கணமும்வரின் வேற்றுமையிற் பெரும்பாலும் உகரமேறிய டகர றகர மெய்கள் இரட்டும்.

உ - ம்:—ஆடு + அதர் = ஆட்டதர்.
ஆறு + ஊறல் = ஆற்றூறல்.
ஆடு + கால் = ஆட்டுக்கால்.
ஆறு + கால் = ஆற்றுக்கால்.
ஆடு + மயிர் = ஆட்டுமயிர்.
ஆறு + மணல் = ஆற்றுமணல்.
ஆடு + வால் = ஆட்டுவால்.
ஆறு + வழி = ஆற்றுவழி.
பகடு + அடி = பகட்டடி.
வயிறு + அணி = வயிற்றணி.
பகடு + கால் = பகட்டுக்கால்.
வயிறு + குடல் = வயிற்றுக்குடல்.
பகடு + மார்பு = பகட்டுமார்பு.
வயிறு + மயிர் = வயிற்றுமயிர்.
பகடு + வால் = பகட்டுவால்.
வயிறு + வலி = வயிற்றுவலி.

சிறுபான்மை, மலட்டுப்பசு, வரட்டாடு, என அல்வழியில் இரட்டலும், வெருக்குக்கண், எருத்துமாடு, என இருவழியிலும் பிறவொற்றிரட்டலும் உளவெனக் கொள்க.

**275.** மென்றொடர் குற்றியலுகரவீற்று மொழிகளிலே சில நாற்கணமும்வரின் இருவழியிலும் வன்றொடர் குற்றிய லுகரமாகவும் பெறும்.

உ-ம்:—கன்று + ஆ = கற்று.
மருந்து + பை = மருத்துப்பை.
சுரும்பு + நாண் = சுருப்புநாண்.
கரும்பு + வில் = கருப்புவில்.
என்பு + உடம்பு = எற்புடம்பு.
அன்பு + தளை = அற்புத்தளை.
குரங்கு + மனம் = குரக்குமனம்.

அன்றியும், பண்டு + காலம் = பண்டைக்காலம், இன்று + நாள் = இன்றைநாள், என மென்றொடர் குற்றியலுகர மொழிகள் சிறுபான்மை ஐகாரச்சாரியை இறுதியிற் பெற்று வருதலும் உளவெனக் கொள்க.

**276. திசைப்பெயர்களும் பிறபெயர்களும் வந்து புணருமிடத்துக் குற்றியலுகரவீற்றுத் திசைப்பெயர் களுட் சில ஈற்றுயிர்மெய்யும் ககரமெய்யும் கெடவும், சில ஈற்றுயிர்மெய்கெட்டு மேனின்ற றகர மெய் னகர மெய்யாகவும் லகர மெய்யாகவும் திரியவும் பெறும்.**

உ-ம்:—வடக்கு + கிழக்கு = வடகிழக்கு.
குணக்கு + கடல் = குணகடல்.
தெற்கு + மேற்கு = தென்மேற்கு.
மேற்கு + கடல் = மேல்கடல்.

கிழக்கு என்பது, கீழ்திசை, கீழ்த்திசை, கீழைத்திசை, எனவும்; மேற்கு என்பது, மேலைத்திசை எனவும், விகாரப் பட்டு வருமெனவுங் கொள்க.

இத் திசைப் பெயர்கள் உம்மைத்தொகையிலே கிழக்கு மேற்கு, தெற்குவடக்கு, என இவ் விகாரங்களின்றியும் வரு மென அறிக.

277. ஒன்றுமுதற் பத்தீருகிய குற்றியலுகரவீற்று எண்ணுப்பெயர்கள், தம்முன் எண்ணுப்பெயரும் பிறபெயரும் வரின், இரண்டுபெணம், மூன்றுபொருள், நான்குநாடு, ஐந்துகாசு, ஆறுசாத்திரம், ஏழாயிரம், எட்டுத்திசை, ஒன்பதுவாயில், பத்துக்காதம் என இயல்பாய் வருதலன்றி; ஓராயிரம், ஒருபது எனவும்; ஈராயிரம், இருபது எனவும்; மூவாயிரம், முப்பது எனவும்; நாலாயிரம், நாற்பது எனவும்; ஐயாயிரம், ஐம்பது, எனவும்; ஆறுயிரம், அறுபது எனவும்; ஏழாயிரம், எழுபது எனவும்; எண்ணுயிரம், எண்பது எனவும்; தொள்ளாயிரம், தொண்ணூறு எனவும்; பன்னிரண்டு, பதினுயிரம், பதிற்றுக்கோடி எனவும்; பெரும்பாலும் விகாரப்பட்டுவரும்.

இவற்றுள் ஒன்றென்னும் எண்ணுப் பெயர் இயல்பாக வாராதெனவும், ஒன்பதின்முன் பத்தும் நூறும்வரின் நிலைமொழியின் இறுதி பதுகெட்டுமுறையே ஒன் தொண் எனவும் தொள்ளெனவும் திரிய, வருமொழியாகிய பத்து நூறெனவும் நூறு ஆயிரமெனவும் திரியுமெனவும், இவ் வெண்ணுப்பெயர்களின் முன் வரும் பத்தென்னும் எண்ணுப்பெயரினது இடையொற்றுக் கெடுமெனவும் அறிக.

278. ஒன்பதொழிந்த ஒன்றுமுதற் பத்தீருகிய எண்ணுப்பெயர்களை இரட்டித்துச் சொல்லுமிடத்து நிலைமொழியின் முதலெழுத் தல்லனவெல்லாம் கெட்டு முதல்நெடில் குறுகவும், வந்தது உயிராயின் வகரவொற்றும், மெய்யாயின் வந்த எழுத்தும், மிகவும் பெறும்.

உ-ம்:—ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று.
இரண்டு + இரண்டு = இவ்விரண்டு.
மூன்று + மூன்று = மும்மூன்று.
நான்கு + நான்கு = நந்நான்கு.
ஐந்து + ஐந்து = ஐவ்வைந்து.
ஆறு + ஆறு = அவ்வாறு.
ஏழ் + ஏழ் = எவ்வேழ்.
எட்டு + எட்டு = எவ்வெட்டு.
பத்து + பத்து = பப்பத்து.

[ஊகாரவீறு.]

279. ஊகாரவீற்றுப் பெயர்ச்சொற்களின்முன் இருவழியிலும் வரும் வல்லினம் மிகும்.

உ-ம்:—கொண்மூ + குறிது = கொண்மூக்குறிது.
கொண்மூ + குறுமை = கொண்மூக்குறுமை.
ஊ + சிறிது = ஊச்சிறிது.
ஊ + சிறுமை = ஊச்சிறுமை.
கூ + பெரிது = கூப்பெரிது.
கூ + பெருமை = கூப்பெருமை.
ஆடூ + குறியன் = ஆடூக்குறியன்.
ஆடூ + கை = ஆடூக்கை.
மகடூ + சிறியள் = மகடூச்சிறியள்.
மகடூ + செவி = மகடூச்செவி.

பூவென்பதன்முன், பூக்கொடி என வரும் வல்லெழுத்து மிகுதலன்றிப் பூங் கொடி என இன மெல்லெழுத்து மிகுமெனவுங் கொள்க.

280. மேற்சொல்லப்பட்ட ஊகாரவீற்று மொழிகளின்முன் வரும் மெல்லினமும் இடையினமும் இருவழியிலும் இயல்பாம்.

உ - ம்:—கொண்மூ + ஞான்றது = கொண்மூஞான்றது.
கொண்மூ + ஞாற்சி = கொண்மூஞாற்சி.
ஊ + நீண்டது = ஊநீண்டது.
ஊ + நீட்சி = ஊநீட்சி.
பூ + வலிது = பூவலிது.
பூ + வன்மை = பூவன்மை.
ஆடூ + நின்றான் = ஆடூநின்றான்.
ஆடூ + நிலை = ஆடூநிலை.
மகடூ + வலியள் = மகடூவலியள்.
மகடூ + வன்மை = மகடூவன்மை.

எகரம், வினாவிடைச்சொல்லாகத் தனித்து வருவதன்றி, மொழிகளின் இறுதியில் வாராமையாலும், அவ்விடைச் சொற்கு முன்னரே விதிகூறப்பட்டமையாலும், இங்கே எகர வீற்றிற்கு விதி கூறவில்லை.

[ஏகார வீறு.]

**281. ஏகாரவீற்றுப் பெயர்ச்சொற்களின் முன் இருவழியிலும் வரும் வல்லினம் மிகும்; மெல்லின மும் இடையினமும் இயல்பாம்.**

உ - ம்:— அல்வழி. வேற்றுமை.
ஏ + கடிது = ஏக்கடிது. ஏ + கடுமை = ஏக்கடுமை.
சே + சிறிது = சேச்சிறிது. சே + சிறுமை = சேச்சிறுமை.
தே + பெரிது = தேப்பெரிது. தே + பெருமை = தேப்பெருமை
பே + தீது = பேத்தீது. பே + தீமை = பேத்தீமை.
நே + சிறிது = நேச்சிறிது. நே + சிறுமை = நேச்சிறுமை.
ஏ + ஞான்றது = ஏஞான்றது. ஏ + ஞாற்சி = ஏஞாற்சி.
சே + நீண்டது = சேநீண்டது. சே + நீட்சி = சேநீட்சி.
தே + வலிது = தேவலிது. தே + வன்மை = தேவன்மை.
பே + மாண்டது = பேமாண்டது. பே + மாட்சி = பேமாட்சி.
நே + யாது = நேயாது. நே + யாப்பு = நேயாப்பு.

282. ஏகாரவீற்று இடைச்சொல்முன் வரும் மூவின மெய்களும் இயல்பாம்.

உ - ம்:—அவனே + கொண்டான் = அவனேகொண்டான்.
அவனே + நின்றான் = அவனேநின்றான்.
அவனே + வந்தான் = அவனேவந்தான்.

[ஐகாரவீறு.]

283. ஐகாரவீற்றுச் சொற்களின் முன் வரும் வல்லினம், அல்வழியில் எழுவாய்த்தொடரிலும், வினைமுற்றுத்தொடரிலும், உம்மைத்தொகையிலும், இயல்பாம்; பண்புத்தொகையிலும், இடைச்சொற்றொடரிலும், சிறுபான்மை பிறதொடரிலும் மிகும்.

உ - ம்:—

| | | | |
|---|---|---|---|
| யானை | + குறிது | = யானைகுறிது. | எழுவாய். |
| குதிரை | + சிறிது | = குதிரைசிறிது. | |
| விடலை | + பெரியன் | = விடலைபெரியன். | |
| உண்டனை | + கொற்றா | = உண்டனைகொற்றா. | முன்னிலை வினைமுற்று |
| தின்கின்றனை | + சாத்தா | = தின்கின்றனைசாத்தா. | |
| கரை | + கொற்றா | = கரை கொற்றா. | ஏவல் வினைமுற்று. |
| அமை | + சாத்தா | = அமைசாத்தா. | |
| நன்மை | + தீமை | = நன்மைதீமை. | உம்மைத் தொகை. |
| பெருமை | + சிறுமை | = பெருமைசிறுமை. | |
| வெள்ளை | + குதிரை | = வெள்ளைக்குதிரை. | — பண்பு. |
| சாரை | + பாம்பு | = சாரைப்பாம்பு. | இருபெயரொட்டு. |
| சித்திரை | + திங்கள் | = சித்திரைத்திங்கள். | |
| தாமரை | + கண் | = தாமரைக்கண். | உவமைத் தொகை. |
| குவளை | + கண் | = குவளைக்கண். | |
| மற்றை | + சாதி | = மற்றைச்சாதி. | — இடைத்தொடர். |

**284. வேற்றுமையில் ஐகாரவீற்றுச் சொற்களின் முன் வரும் வல்லினம் மிகும்.**

உ - ம்:—யானை + கோடு = யானைக்கோடு.
பூனை + செவி = பூனைச்செவி.
சித்திரை + திருவிழா = சித்திரைத்திருவிழா.
குவளை + தடம் = குவளைத்தடம்.

யானைகொண்டான், என இரண்டனுருபு தொகவருமிடத்து இயல்பாமெனக் கொள்க.

**285. மேற்சொல்லிய ஐகாரவீற்றுமொழிகளின் முன் வரும் மெல்லினமும் இடையினமும் இருவழியிலும் இயல்பாம்.**

உ - ம்:—யானை + நின்றது = யானைநின்றது.
யானை + நிறம் = யானைநிறம்.
குதிரை + வந்தது = குதிரைவந்தது.
குதிரை + வால் = குதிரைவால்.
உண்டனை + நாகா = உண்டனைநாகா.
தின்றனை + வளவா = தின்றனைவளவா.

மற்றவைகளுமிப்படியே.

அன்றியும், கைஞ்ஞான்றது, கைஞ்ஞாற்சி, கைந்நீண்டது, கைந்நீட்சி, கைம்மாண்டது, கைம்மாட்சி, எனத் தனி ஐம்முன் வரும் மெல்லினம் இருவழியிலும் மிகுமென அறிக.

## [ஓகரவீறு.]

**286. ஓகரவீற்றுஏவல்வினைமுற்றின்முன் வரும் மூவினமெய்களும் மிகும்.**

உ - ம்:—நொ + கொற்றா = நொக்கொற்றா.
நொ + நாகா = நொந்நாகா.
நொ + வளவா = நொவ்வளவா.

வினையாதலின் அல்வழியிலே மிக்கன.

[ஓகாரவீறு.]

287. ஓகாரவீற்றுப் பெயர்களின்முன் இருவழியிலும் வரும் வல்லினம் மிகும்; மெல்லினமும் இடையினமும் இயல்பாம்.

உ - ம்:—

| | | |
|---|---|---|
| ஓ + குறிது = ஓக்குறிது. | வல்லினம் மிக்கன. | |
| ஓ + குறுமை = ஓக்குறுமை. | | |
| சோ + சிறிது = சோச்சிறிது. | | |
| சோ + சிறுமை = சோச்சிறுமை | | |
| கோ + பெரிது = கோப்பெரிது. | | |
| கோ + பெருமை = கோப்பெருமை. | | |
| ஓ + ஞான்றது = ஓஞான்றது. | மெல்லினமும் இடையினமும் இயல்பாயின. | |
| ஓ + ஞாற்சி = ஓஞாற்சி. | | |
| சோ + நீண்டது = சோநீண்டது. | | |
| சோ + நீட்சி = சோநீட்சி. | | |
| கோ + வலிது = கோவலிது. | | |
| கோ + வன்மை = கோவன்மை. | | |

288. ஓகார இடைச்சொல்முன் வரும் மூவின மெய்களும் இயல்பாம்.

உ - ம்:— அவனோ + கொண்டான் = அவனோகொண்டான்.
அவனோ + நின்றான் = அவனோநின்றான்.
அவனோ + வந்தான் = அவனோவந்தான்.

[ஔகாரவீறு.]

289. ஔகார வீற்று முதனிலைத் தொழிற்பெயர் முன்னும் ஏவல் வினைமுற்றின் முன்னும், வலியும் மெலியும் வகரமும் வரின், நிலைமொழியீற்றில் உகரச் சாரியை வரும்; தொழிற்பெயர்முன் வரும் வல்லெழுத்து மிகும்.

உ - ம்:—கௌ + கடிது = கௌவுக்கடிது.
கௌ + கடுமை = கௌவுக்கடுமை.
கௌ + நீண்டது = கௌவுநீண்டது.
கௌ + நீட்சி = கௌவுநீட்சி.
வெள + வலிது = வெளவுவலிது.
வெள + வன்மை = வெளவுவன்மை.
கௌ + கொற்று = கௌவுகொற்று.
கௌ + நாகா = கௌவுநாகா.
கௌ + வளவா = கௌவுவளவா.

---

## 2. மெய்யீற்றுப்புணரியல்.

---

290. மெய்யீற்றின்முன் உயிர் வரின், வந்த உயிர் இருவழியிலும் அம் மெய்ம்மேலேறி ஒன்றுபட்டு இயையும்.

உ - ம்:— அல்வழி. வேற்றுமை.
ஆண் + அழகிது = ஆணழகிது. ஆண் + அழகு = ஆணழகு.
வேல் + அழகிது = வேலழகிது. வேல் + அழகு = வேலழகு.
புகழ் + அரிது = புகழரிது. புகழ் + அருமை = புகழருமை.

291. தனிக் குற்றெழுத்தைச் சேர்ந்த மெய்யின்முன் உயிர்வந்தால் இருவழியிலும் நிலைமொழியீற்றுமெய் இரட்டிக்கும்; இரட்டித்த மெய்ம்மேல் வந்த உயிர் ஏறி இயையும்.

உ - ம்:—அல்வழி. வேற்றுமை.
மண்ணரிது. மண்ணருமை.
பொன்னழகிது. பொன்னொளி.
கல்லழகிது. கல்லழகு.

**292.** யகரமல்லாத மெய்ம்முன் யகரம் வந்தால் இருவழியிலும் அதன்முன் இகரச்சாரியை வருதலும் உண்டு.

உ-ம்:— அல்வழி. வேற்றுமை.

வேள் + யாவன் = வேளியாவன் வேள் + யானை = வேளியானை.
மால் + யாவன் = மாலியாவன். மால் + யானை = மாலியானை.
ஆண் + யாது = ஆணியாது. ஆண் + யாப்பு = ஆணியாப்பு.

வேள்யாவன், என இகரச்சாரியை யின்றியும் வரும்.

**293.** ஞ், ண், ந், ம், ல், வ், ள், ன் என்னும் இவ் வெட்டு மெய்யீற்று முதனிலைத் தொழிற்பெயர்முன்னும், ஏவல் வினைமுற்றின் முன்னும், யகரமல்லாத மெய்கள் வரின், நிலைமொழியீறு உகரச்சாரியை பெறும்; தொழிற்பெயர்முன் வரும் வல்லினம் மிகும்.

உ-ம்:—உரிஞ் + கடிது = உரிஞுக்கடிது.
உரிஞ் + கடுமை = உரிஞுக்கடுமை.
உண் + ஞான்றது = உண்ணுஞான்றது.
உண் + ஞாற்சி = உண்ணுஞாற்சி.
பொருந் + வலிது = பொருநுவலிது.
பொருந் + வன்மை = பொருநுவன்மை.
உரிஞ் + கொற்றா = உரிஞுகொற்றா.
உண் + நாகா = உண்ணுநாகா.
பொருந் + வளவா = பொருநுவளவா.

திரும், செல், தெவ், துள், தின், முதலியவற்றோடும் இவ்வாறே ஒட்டிக்கொள்க.

பொருநுக்குடி, என நகரவீற்றுச் சாதிப் பெயரும், வெரிநுக்கடிது, என நகரவீற்றுச் சினைப்பெயரும், உகரச்சாரியை பெறுமெனவும் கொள்க.

இவ்வெட்டீற்று ஏவல்வினைகளிலே உண்கொற்றா, தின் சாத்தா, வெல்பூதா, துள்வளவா, என ணனலள என்னும் இந் நான்கீறும், உகரச்சாரியை பெறாமலும் வரும்.

294. மொழிகளுக்கிறுதியில் வரும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள், என்னும் பதினொரு மெய்களிலே ஞகரவீற்றுமொழி உரிஞ் என்பதொன்றும், நகரவீற்றுமொழி பொருந் வெரிந் என்பன இரண்டுமேயன்றி வேறுமொழிகளின்மையாலும், அவைகட்கு மேற்கூறிய பொதுவிதியேயன்றி வேறுவிதியின்மையாலும்; அவ்விரண்டீறும் ஒழித்து மற்றைய ஒன்பதீற்று மொழிகளுக்கும் சிறப்புவிதி கூறப்படும்.

## [ணகரனகரவீறு.]

295. ணகர னகரவீற்று மொழிகளின்முன் வல்லினம் வரின், அல்வழியில் அவ்விருமெய்களும் இயல்பாம்; வேற்றுமையில் ணகரம் டகரமாகவும், னகரம் றகரமாகவும் திரியும். அவ்விருவழியிலும் வரும் தகரம் ணகரத்தின்முன் டகரமாயும், னகரத்தின்முன் றகரமாயும் திரியும்

உ - ம்:—மண் + குறிது = மண்குறிது.
மண் + குடம் = மட்குடம்.
மண் + சிறிது = மண்சிறிது.
மண் + சாடி = மட்சாடி.
மண் + தீது = மண்டீது.
மண் + தூண் = மட்டூண்.
மண் + பெரிது = மண்பெரிது.
மண் + பானை = மட்பானை.
பொன் + குறிது = பொன்குறிது.
பொன் + குடம் = பொற்குடம்.
பொன் + சிறிது = பொன்சிறிது.
பொன் + சாடி = பொற்சாடி.

பொன் + தீது = பொன்றீது.
பொன் + தூண் = பொற்றூண்.
பொன் + பெரிது = பொன்பெரிது.
பொன் + பானை = பொற்பானை.
பொன் + ஞான்றது = பொன்ஞான்றது.
பொன் + ஞாற்சி = பொன்ஞாற்சி.
பொன் + நீண்டது = பொன்னீண்டது.
பொன் + நீட்சி = பொன்னீட்சி.
பொன் + மாண்டது = பொன்மாண்டது.
பொன் + மாட்சி = பொன்மாட்சி.
பொன் + யாது = பொன்யாது.
பொன் + யாப்பு = பொன்யாப்பு.
பொன் + வலிது = பொன்வலிது.
பொன் + வன்மை = பொன்வன்மை.

அல்வழியில் வரிற்கொள்ளும் எனச் செயின் என்னும் வாய்பாட்டுவினையெச்சத்தின் இறுதி னகரந் திரிதலும்; மண் கொணர்ந்தான், பொன்கொணர்ந்தான், என இரண்டனுருபு தொகவருமிடத்தும், மண்புகுந்தும் விண்பறந்தும் மாலுமய னுங் காணா ஒருபொருள், என ஏழனுருபு தொகவருமிடத்தும், திரியாது இயல்பாதலும் உளவெனக் கொள்க.

**296. ணகர னகரவீற்று மொழிகளின்முன் மெல்லினமும் இடையினமும் வரின், இறுதி ணனக் கள் இருவழியிலும் இயல்பாம். அவ்விருவழியிலும் வரும் நகரம் ணகரத்தின்முன் ணகரமாயும், னகரத் தின்முன் னகரமாயும் திரியும்.**

உ - ம்:—மண் + ஞான்றது = மண்ஞான்றது
மண் + ஞாற்சி = மண்ஞாற்சி.
மண் + நீண்டது = மண்ணீண்டது.

மண் + நீட்சி = மண்ணீட்சி.
மண் + மாண்டது = மண்மாண்டது.
மண் + மாட்சி = மண்மாட்சி.
மண் + யாது = மண்யாது.
மண் + யாப்பு = மண்யாப்பு.
மண் + வலிது = மண்வலிது.
மண் + வன்மை = மண்வன்மை.

**297. தனிக்குற்றெழுத்தைச் சாராத ணகரனகரங்கள், வரும் நகரம் திரிந்தவிடத்து இருவழியிலும் கெடும்.**

உ - ம்:—தூண் + நன்று = தூணன்று.
தூண் + நன்மை = தூணன்மை.
அரண் + நன்று = அரணன்று.
அரண் + நன்மை = அரணன்மை.
வான் + நன்று = வானன்று.
வான் + நன்மை = வானன்மை.
அரசன் + நல்லன் = அரசனல்லன்.
அரசன் + நன்மை = அரசனன்மை.

பசுமணன்று, பசுமணன்மை, செம்பொனன்று, செம்பொனன்மை எனத் தொடர்மொழியீற்று ணனக்களும், இருவழியிலும் வரும் நகரம் திரிந்தவிடத்துக் கெடுமெனவும் அறிக.

**298. பாண், அமண், பரண், கவண், என்னும் மொழிகளின் இறுதி ணகரம், வேற்றுமையில் வல்லினம்வரின் இயல்பாம்.**

உ-ம்:பாண் + குடி = பாண்குடி. அமண் + குடி = அமண்குடி.
பரண் + கால் = பரண்கால். கவண் + கால் = கவண்கால்.

299. தன், என், நின், என்னும் விகாரப்பட்டு வரும் மொழிகளின் இறுதி னகரம், வேற்றுமையிற் பெரும்பாலும் திரியாதியல்பாம்.

உ - ம்:—தன் + கை = தன்கை. என் + செவி = என்செவி
நின் + பகை = நின்பகை.

300. குயின், ஊன், எயின், எகின், தேன், மீன், நின், மின், பின், பன், கன், என்னும் மொழிகளின் இறுதி னகரம், வேற்றுமையில் வல்லினம்வரின் இயல்பாம்.

உ - ம்:—குயின் + கடுமை = குயின்கடுமை.
நின் + பகை = நின்பகை.
ஊன் + சிறுமை = ஊன்சிறுமை.
மின் + கடுமை = மின்கடுமை.
எயின் + குடி = எயின்குடி.
பின் + சிறுமை = பின்சிறுமை.
எகின் + கால் = எகின்கால்.
பன் + தீமை = பன்றீமை.
தேன் + கடுமை = தேன்கடுமை.
கன் + கடுமை = கன்கடுமை.
மீன் + கண் = மீன்கண்.

இவைகளிலே எயினக்குடி, எகினவாழ்வு, என **எயின், எகின்** என்னும் இவ்விருமொழிகளும் அகரச்சாரியை பெறுதலும்; தேக்குடம், தேங்குடம், எனத் **தேன்** என்பதின் இறுதி னகரம் கெட்டவிடத்து ஒருகால் வரும் வல்லெழுத்தும் ஒருகால் அதற்கினவெழுத்தும் மிகுதலும்; தேமொழி, என மெல்லெழுத்து வருமிடத்து ஈறுகெடுதலும்; மின்னுக்கடிது, பின்னுச்சிறிது, பன்னுநன்று, கன்னுவலிது, என **மின், பின், பன், கன்** என்னும் இந் நான்கு சொற்களின் இறுதி னகரம் யகரமல்லாத மெய்கள்வருமிடத்து உகரச்சாரியை பெறுதலும் உளவெனவும் அறிக.

## [மகரவீறு.]

301. மகரவீற்று மொழிகளின்முன் வல்லினம் வரின், அல்வழியில் எழுவாய்த்தொடரிலும், உம்மைத் தொகையிலும், செய்யுமென்னும் பெயரெச்சத் தொடரிலும், வினைமுற்றுத் தொடரிலும், இடைச்சொற் றொடரிலும், சிறுபான்மை பிறதொடரிலும் நிலைமொழியீற்றுமகரம் வரும் வல்லெழுத்திற்கு இனமாய்த் திரியும்: பண்புத்தொகையிலும், உவமைத்தொகையிலும் இறுதி மகரங்கெடும்; கெட்டவிடத்து வரும் வல்லினம் மிகும்.

உ-ம்:—

| | | | |
|---|---|---|---|
| மரம் + குறிது | = மரங்குறிது. | | எழுவாய். |
| யாம் + கொடியேம் | = யாங்கொடியேம். | | |
| நலம் + தீது | = நலந்தீது. | | உம்மைத்தொகை. |
| பணம் + காசு | = பணங்காசு. | | |
| செய்யும் + காரியம் | = செய்யுங்காரியம். | | பெயரெச்சம். |
| உண்ணும் + சோறு | = உண்ணுஞ்சோறு. | | |
| உண்டனம் + சிறியேம் | = உண்டனஞ்சிறியேம். | | வினைமுற்று. |
| தின்றனம் + குறியேம் | = தின்றனங்குறியேம். | | |
| சாத்தனும் + கொற்றனும் | = சாத்தனுங்கொற்றனும். | | இடைச்சொல். |
| பூதனும் + தேவனும் | = பூதனுந்தேவனும். | | |
| வட்டம் + கல் | = வட்டக்கல். | | பண்புத்தொகை. |
| சதுரம் + பலகை | = சதுரப்பலகை. | | |
| கமலம் + கண் | = கமலக்கண் | | உவமைத்தொகை. |

மற்றவைகளு மிப்படியே.

மரம்பெரிது, எனப் பகரம் வருமிடத்து இறுதிமகரம், இயல்பாமெனக் கொள்க.

302. மகரவீற்று மொழிகளின்முன் வேற்றுமையிலே வல்லினம்வரின், நிலைமொழியிறுதி மகரங்கெடும்; கெட்டவிடத்து வரும்வல்லினம் மிகும். உ - ம்:—

மரம் + கோடு = மரக்கோடு. மரம் + செதிள் = மரச்செதிள்.
பழம் + தோல் = பழத்தோல். நிலம் + பரப்பு = நிலப்பரப்பு.

செயங்கொண்டான், மணங்கண்டான், என இரண்டாம் வேற்றுமைத்தொகையிற் கெடாது, வரும் வல்லெழுத்திற்கு இனமாய்த் திரியுமெனக் கொள்க.

303. தனிக்குற்றெழுத்தின் கீழ்நின்ற மகரம், இருவழியிலும் வரும் வல்லினத்திற்கு இனமாகத் திரியும்.

| உ - ம்:—அல்வழி. | வேற்றுமை. |
| --- | --- |
| கம் + குறிது = கங்குறிது. | கம் + குறுமை = கங்குறுமை. |
| அம் + சிறிது = அஞ்சிறிது. | அம் + சிறுமை = அஞ்சிறுமை. |
| செம் + கோழி = செங்கோழி. | நம் + கை = நங்கை. |
| ———————— | தம் + செவி = தஞ்செவி. |
| ———————— | எம் + தலை = எந்தலை. |

304. மகரவீற்று மொழிகளின் முன் மெல்லினம் வரின், இறுதிமகரம் இருவழியிலும் கெடும்.

| உ - ம்.—அல்வழி. | வேற்றுமை. |
| --- | --- |
| மரம் + ஞான்றது = மரஞான்றது. | மரம், ஞாற்சி = மரஞாற்சி. |
| மரம் + நீண்டது = மரநீண்டது. | மரம் + நீட்சி = மரநீட்சி. |
| மரம், மாண்டது = மரமாண்டது. | மரம் + மாட்சி = மரமாட்சி. |

305. தனிக் குறிலின்கீழ்நின்ற மகரம், ஞநக்கள் வந்தால் வந்தவெழுத்தாகத் திரியும்.

உ - ம்:—

அம் + ஞானம் = அஞ்ஞானம். நும் + ஞானம் = நுஞ்ஞானம்.
எம் + நூல் = எந்நூல். நம் + நூல் = நந்நூல்.
தம் + நூல் = தந்நூல்.

306. மகரவீற்று மொழிகளின்முன் உயிரும் இடையினமும் வரின், அல்வழியில் எழுவாய்த் தொடரிலும், உம்மைத்தொகையிலும், செய்யுமென்னும் பெயரெச்சத்தொடரிலும், வினைமுற்றுத்தொடரிலும், இடைச்சொற்றொடரிலும், சிறுபான்மை பிறதொடரிலும், நிலைமொழியிறுதி மகரம் இயல்பாம்; பண்புத்தொகையிலும், உவமைத்தொகையிலும், இறுதி மகரம் கெடும்.

உ - ம்:—மரம் + அரிது = மரமரிது.
மரம் + வலிது = மரம்வலிது. } எழுவாய்த்தொடர்.

| | | | |
|---|---|---|---|
| வலம் | + இடம் | = வலமிடம். | உம்மைத் தொகை. |
| நிலம் | + வான் | = நிலம்வான், | |
| உண்ணும் | + உணவு | = உண்ணுமுணவு. | பெயரெச்சம். |
| தின்னும் | + வாரணம் | = தின்னும்வாரணம். | |
| உண்டனம் | + அடியேம் | = உண்டனமடியேம். | வினைமுற்று. |
| உண்டனம் | + யாம் | = உண்டனம்யாம். | |
| அரசனும் | + அரசியும் | = அரசனுமரசியும். | இடைச்சொல். |
| புலியும் | + யானையும் | = புலியும்யானையும். | |
| வட்டம் | + ஆழி | = வட்டவாழி. | பண்புத் தொகை. |
| வட்டம் | + யாழ் | = வட்டயாழ். | |
| பவளம் | + இதழ் | = பவளவிதழ். | உவமைத் தொகை. |
| பவளம் | + வாய் | = பவளவாய். | |

307. மகரவீற்றுப் பெயர்ச்சொற்களின் முன் வேற்றுமையில் உயிரும் இடையினமும் வரின், இறுதி மகரம் கெடும்.

உ - ம்:—மரம் + அடி = மரவடி. மரம் + இலை = மரவிலை.
மரம் + யாழ் = மரயாழ். மரம் + வேர் = மரவேர்.

செயமடைந்தான், மரம்வெட்டினான் என இரண்டனுருபு தொகவருமிடத்து இயல்பாமெனவுங் கொள்க.

மகரவீற்றுமொழிகளின்முன் உயிர்வரின், ஒரோவிடத்து, குளம் + ஆம்பல் = குளாம்பல், மரம் + அடி = மராடி, என வேற்றுமையிலும்; ஓணம் + அவிட்டம் = ஓணாவிட்டம், கோணம் + அகோணம் = கோணாகோணம், என அல்வழியிலும் நிலைமொழியீறும் வருமொழிமுதலும் விகாரப்பட்டு வருதலும்; ஈமுக்கடிது, கம்முநீண்டது, உருமுவலிது, என **ஈம், கம், உரும்,** இம் மூன்று சொற்களின் இறுதிமகரம் யகரமல்லாத மெய்கள் வருமிடத்து உகரச்சாரியை பெறுதலும் உள வெனவு மறிக.

## [யகர ரகர ழகரவீறு.]

**308. யரழவென்னும் இம் மூன்று மெய்யீற்றுமொழிகளின்முன் வரும் வல்லினம், அல்வழியில் எழுவாய்த் தொடரிலும், உம்மைத்தொகையிலும், வினைமுற்றுத்தொடரிலும், சிறுபான்மை பிறதொடரிலும், இயல்பாம்; பண்புத்தொகையிலும் உவமைத் தொகையிலும், வினையெச்சத் தொடரிலும் சிறு பான்மை பிறதொடரிலும் மிகும்.**

உ - ம்:—

| | | | |
|---|---|---|---|
| வேய் | + குறிது | = வேய்குறிது. | எழுவாய். |
| வேர் | + சிறிது | = வேர்சிறிது. | |
| வீழ் | + பெரிது | = வீழ்பெரிது. | |
| பேய் | + பூதம் | = பேய்பூதம். | உம்மைத் தொகை. |
| கார் | + பூ | = கார்பூ. | |
| இகழ் | + புகழ் | = இகழ்புகழ். | |
| உண்டாய் | + கொற்றா | = உண்டாய்கொற்றா. | முன்னிலை வினை முற்று. |
| உண்டனிர் | + சாத்தரே | = உண்டனிர்சாத்தரே. | |
| உண்டீர் | + பூதரே | = உண்டீர்பூதரே. | |

| | | | |
|---|---|---|---|
| செய் | + கொற்று | = செய்கொற்று. | ஏவல் வினைமுற்று. |
| சேர் | + சாத்தா | = சேர்சாத்தா. | |
| வாழ் | + பூதா | = வாழ்பூதா. | |
| மெய் | + கீர்த்தி | = மெய்க்கீர்த்தி. | பண்புத் தொகை. |
| கார் | + பருவம் | = கார்ப்பருவம். | |
| பூழ் | + பறவை | = பூழ்ப்பறவை. | |
| வேய் | + தோள் | = வேய்த்தோள். | உவமைத் தொகை. |
| கார் | + குழல் | = கார்க்குழல். | |
| காழ் | + படிவம் | = காழ்ப்படிவம். | |
| போய் | + கொண்டான் | = போய்க்கொண்டான். | —வினையெச்சம். |

உண்ணியர்போவான், என ரகரவீற்று வினையெச்சத்தின் முன் இயல்பாமெனவும்; ழகரவீறு முன்னிலைவினைமுற்றிற்கும் வினையெச்சத்திற்கும் இன்றெனவு முணர்க.

309. ய ர ழ என்னும் இம்மூன் றீற்று மெய்களின்முன் வரும் வல்லினம், வேற்றுமையிலே மிகும்.

உ - ம்:—நாய் + கால் = நாய்க்கால்.
பூழ் + செவி = பூழ்ச்செவி.
தேர் + தலை = தேர்த்தலை.

யரழமுன் வரும் வல்லினம், வேய்பிளந்தான் தேர்செய்தான் தமிழ்கற்றான் என இரண்டனுருபு தொகவருமிடத்தும், வாய்புகுவது என ஏழனுருபு தொகவருமிடத்தும் இயல்பாதலும் ; பேய்கோட்பட்டான்-பேய்க்கோட்பட்டான், சூர்கோட்பட்டான் - சூர்க்கோட்பட்டான் எனச் செயப்பாட்டு வினை முடிக்குஞ் சொல்லாக வருமிடத்தும், கீழ்குளம் - கீழ்க்குளம் எனக் கீழ் என்பதன் முன்னும் உறழ்தலும் உளவெனக் கொள்க.

310. மேற்கூறிய, ய ர ழ என்னும் இம் மூன் றீற்று மொழிகளின்முன் வரும் மெல்லினமும் இடை யினமும் இருவழியிலும் இயல்பாம்.

உ - ம்:—வேய் + ஞான்றது = வேய்ஞான்றது.
வேய் + ஞாற்சி = வேய்ஞாற்சி.
வேர் + நீண்டது = வேர்நீண்டது.
வேர் + நீட்சி = வேர்நீட்சி.
வீழ் + யாது = வீழ்யாது.
வீழ் + யாப்பு = வீழ்யாப்பு.
உண்டாய் + நாகா = உண்டாய்நாகா.
உண்டீர் + வளவரே = உண்டீர்வளவரே.
மற்றவைகளு மிப்படியே.

மெய்ஞ்ஞான்றது, மெய்ந்நீண்டது, மெய்ம்மாண்டது எனவும்; மெய்ஞ்ஞாற்சி, மெய்ந்நீட்சி, மெய்ம்மாட்சி எனவும்; தனிக்குறிற்கீழ்நின்ற யகரமெய்ம்முன் வரும் மெல்லினம் இருவழியிலும் மிகுமெனவும்; வேயாது, வேயாப்பு, என நெடிற்கீழ்நின்ற யகரமெய் யகரம் வரின் இருவழியிலுங் கெடு மெனவும்; தமிழக்கோமான், தாழக்கோல், எனத் தமிழ் தாழ் என்னும் இவ்விருமொழியும் அகரச்சாரியை பெறுமெனவுங் கொள்க.

## [லகர ளகர வீறு]

311. லகர ளகர ஈற்று மொழிகளின்முன் வல்லி னம் வரின், வேற்றுமையில் நிலைமொழியீற்று லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாகவுந் திரியும்; அல்வழி யில் இறுதி லளக்கள் ஒருகால் இயல்பாகவும், ஒருகால் திரியவும் பெறும்.

உ - ம்:—

| | | | | |
|---|---|---|---|---|
| கல் | + குடம் | = கற்குடம். | | வேற்றுமையில் லகர ளகரங்கள் திரிந்தன. |
| பால் | + குடம் | = பாற்குடம். | | |
| கல் | + சாடி | = கற்சாடி. | | |
| பால் | + சாடி | = பாற்சாடி. | | |
| கல் | + தூண் | = கற்றூண். | | |
| விரல் | + தீமை | = விரற்றீமை. | | |
| கல் | + பானை | = கற்பானை. | | |
| விரல் | + பெருமை | = விரற்பெருமை. | | |
| கள் | + குடம் | = கட்குடம். | | |
| வாள் | + குறுமை | = வாட்குறுமை. | | |
| கள் | + சாடி | = கட்சாடி. | | |
| வாள் | + சிறுமை | = வாட்சிறுமை. | | |
| கள் | + தாழி | = கட்டாழி. | | |
| பொருள் | + தீமை | = பொருட்டீமை. | | |
| கள் | + பானை | = கட்பானை. | | |
| அருள் | + பெருமை | = அருட்பெருமை. | | |
| கல் | + குறிது | = கல்குறிது, | கற்குறிது. | அல்வழியில் இயல்பாயும் திரிந்தும் வந்தன. |
| கல் | + சிறிது | = கல்சிறிது, | கற்சிறிது. | |
| கல் | + பெரிது | = கல்பெரிது, | கற்பெரிது. | |
| முள் | + குறிது | = முள்குறிது, | முட்குறிது. | |
| முள் | + சிறிது | = முள்சிறிது, | முட்சிறிது. | |
| முள் | + பெரிது | = முள்பெரிது, | முட்பெரிது. | |

312. குற்றெழுத்தின்பின் நின்ற லளக்கள் அல்வழியில் வரும் தகரந் திரிந்தவிடத்து றகர டகரங்களாகவும், அல்லது ஆய்தமாகவுந் திரியும்.

உ - ம்:—கல் + தீது = கற்றீது, கஃறீது.

முள் + தீது = முட்டீது, முஃடீது.

நெற்கடிது, செற்சிறிது, கொற்றீது, சொற்பெரிது, என நெல், செல், கோல், சொல், என்னும் இந் நான்கு சொற்களின் இறுதிலகரம் அல்வழியில் வலிவரின் உறழாது திரிபொன்றையே பெறுமென்றுங் கொள்க.

**313. குற்றெழுத்தைச் சாராத லளக்கள் அல்வழியில் வருந் தகரம் திரிந்தவிடத்துக் கெடும்.**

உ - ம்:—வேல் + தீது = வேறீது.
தோன்றல் + தீயன் = தோன்றீயன்.
வாள் + தீது = வாடீது.
வேள் + தீயன் = வேடீயன்.

அன்றியும், சிறுபான்மை, தோன்றீமை, வேடீமை, என வேற்றுமையிற் கெடுதலும்; காற்றூணை, தாட்டூணை, என அல்வழியிற் கெடாது திரிதலும் உளவென வறிக.

குற்றெழுத்தைச் சாராத லளக்கள் தகரமொழிந்த வல்லினம் வரின், கால்கடிது, மரங்கள்கடிய, என எழுவாய்த் தொடரில் உறழா தியல்பாமெனவும்; வேற்படை வாட்படை எனப் பண்புத்தொகையிலும், வந்தாற்செய்வேன் எனச் செயினென்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத் தொடரிலும், உறழாது திரியுமெனவும்; கால்குதித்தோடி வாள்போழ்ந்தட்ட என மூன்றனுருபு தொக வருமிடத்தும், ஏனல்காப்பவள் திரள்காப்பவன் என இரண்டனுருபு தொகவருமிடத்தும் திரியா தியல்பாமெனவுங் கொள்க.

**314. லகர ளகர ஈற்று மொழிகளின்முன் மெல்லினம்வரின் இருவழியிலும் லகரம் னகரமாயும், ளகரம் ணகரமாயும் திரியும்; வரும் நகரம் லகரத்தின்முன் னகரமாயும், ளகரத்தின் முன் ணகரமாயும் திரியும்.**

| | | |
|---|---|---|
| உ-ம்:—கல் | + ஞெரிந்தது | = கஞ்ஞெரிந்தது. |
| கல் | + ஞெரி | = கஞ்ஞெரி. |
| வில் | + நீண்டது | = விந்நீண்டது. |
| வில் | + நீட்சி | = விந்நீட்சி |
| புல் | + மாண்டது | = புன்மாண்டது. |
| புல் | + மாட்சி | = புன்மாட்சி. |
| முள் | + ஞெரிந்தது | = முண்ஞெரிந்தது. |
| முள் | + ஞெரி | = முண்ஞெரி. |
| புள் | + நீண்டது | = புண்ணீண்டது. |
| புள் | + நீட்சி | = புண்ணீட்சி. |
| கள் | + மாண்டது | = கண்மாண்டது. |
| கள் | + மாட்சி | = கண்மாட்சி. |

**315. குற்றெழுத்தைச் சாராத லளக்கள் இருவழியிலும் வரும் நகரந் திரிந்தவிடத்துக் கெடும்.**

| | | |
|---|---|---|
| உ-ம்:—வேல் | + நன்று | = வேனன்று. |
| பொருள் | + நன்று | = பொருணன்று. |
| வேல் | + நன்மை | = வேனன்மை. |
| பொருள் | + நன்மை | = பொருணன்மை. |

கருங்கனன்று, கருங்கொணன்று, எனத் தொடர்மொழியிறுதியிற் குறிற்கீழ்நின்ற லளக்களுங் கெடுமெனவுங்கொள்க.

**316. லகர ளகரவீற்று மொழிகளின்முன் இடையினம் வரின், இருவழியிலும் லளக்கள் இயல்பாம்.**

| | | |
|---|---|---|
| உ-ம்:—கல் | + யாது | = கல்யாது. |
| விரல் | + வலிது | = விரல்வலிது. |
| முள் | + யாது | = முள்யாது. |
| வாள் | + வலிது | = வாள்வலிது. |
| கல் | + யாப்பு | = கல்யாப்பு. |
| விரல் | + வன்மை | = விரல்வன்மை. |

முள் + யாப்பு = முள்யாப்பு.
வாள் + வன்மை = வாள்வன்மை.

இல் என்பதின் இறுதி ஐகாரச்சாரியை பெற்றவிடத்து வரும் வல்லினம், இல்லைபொருள், இல்லைப்பொருள், என ஒரு கால் இயல்பாயும் ஒரு கால் மிக்கும் வருமெனவும்; ஆகாரச்சாரியை பெற்றவிடத்து வரும் வல்லினம், இல்லாப் பொருள், என மிகுமெனவும், இவ் விருசாரியையும் பெறாது இல்பொருள் என இயல்பா மெனவுங் கொள்க.

[வகரவீறு.]

**317. அவ், இவ், உவ், என்னும் அஃறிணைப் பன்மைச் சுட்டுப் பெயர்களின் இறுதி வகரம், அல்வழியில் வல்லினம்வரின் ஆய்தமாகத் திரியவும், மெல்லினம்வரின் வந்த எழுத்தாகத் திரியவும், இடையினம் வரின் இயல்பாகவும் பெறும்.**

**உ - ம்:**—அவ் + கடியன = அஃகடியன.
இவ் + சிறியன = இஃசிறியன.
உவ் + தீயன = உஃதீயன.
அவ் + ஞாண்கள் = அஞ்ஞாண்கள்.
இவ் + யாழ்கள் = இவ்யாழ்கள்.
உவ் + மணிகள் = உம்மணிகள்.
அவ் + யாழ்கள் = அவ்யாழ்கள்.
இவ் + நூல்கள் = இந்நூல்கள்.
உவ் + வளைகள் = உவ்வளைகள்.
அவ் + பெரியன = அஃபெரியன.

தெம்மன்னர், எனத் தேவ் என்னும் மொழியின் இறுதி வகரம், மகரம் வருமிடத்து மகரமாய்த் திரியு மென்றுங் கொள்க.

## 3. பொதுப்புணரியல்.

318. உயிரையும் மெய்யையும் ஈறாகவுடைய வினைத்தொகைமுன் வரும் வல்லினம் இயல்பாம்.

உ - ம்:—விரி + கதிர் = விரிகதிர்.
விடு + கணை = விடுகணை.
ஈட்டு + தனம் = ஈட்டுதனம்
உண் + கலம் = உண்கலம்.
செய் + கடன் = செய்கடன்.
கொள் + கலம் = கொள்கலம்.
எறி + படை = எறிபடை.
ஓடு + பாம்பு = ஓடுபாம்பு.
அறை + கடல் = அறைகடல்.
கொல் + களிறு = கொல்களிறு.
சேர் + புகழ் = சேர்புகழ்.
தின் + பண்டம் = தின்பண்டம்.

விரிமலர், கொல்யானை, என வரும் மெல்லினமும் இடையினமும் இயல்பாமெனவும்; ண ன ல ள இந் நான்கு ஈற்றின் முன் வரும் தகரமும் நகரமும் திரியும் எனவுங் கொள்க.

319. மெய்யீற்று உயிரீற்று உயர்திணைப்பெயர் முன்னும், பொதுப்பெயர்முன்னும், வல்லினம் வரின், வேற்றுமையிலே நிலைமொழியீற்று மெய் இயல்பாம்; உயிர்முன்னும் யகர ரகர மெய்களின்முன்னும் வரும் வல்லினம் மிகாவாம்.

| | | | |
|---|---|---|---|
| உ - ம்:—அவன் | + கை | = அவன்கை. | உயர்திணைப் பெயர். |
| அவள் | + செவி | = அவள்செவி. | |
| நம்பி | + கை | = நம்பிகை. | |
| நங்கை | + செவி | = நங்கைசெவி | |
| அவர் | + கை | = அவர்கை. | |
| ஆண் | + கை | = ஆண்கை. | பொதுப்பெயர். |
| பெண் | + புறம் | = பெண்புறம். | |
| சாத்தி | + கை | = சாத்திகை. | |
| செவியிலி | + தலை | = செவியிலிதலை. | |
| தாய் | + கை | = தாய்கை. | |

**320. உயிரீற்று மெய்யீற்று விளிப்பெயர்முன் வல்லினம் வரின் பெரும்பாலும் இயல்பாம்.**

| | | |
|---|---|---|
| உ - ம்:—வேந்து | + கேள் | = வேந்துகேள். |
| நங்காய் | + பார் | = நங்காய்பார். |
| புலியே | + கொல் | = புலியேகொல். |
| சாத்தா | + செல் | = சாத்தாசெல். |
| தாய் | + தா | = தாய்தா. |
| இள்ளாய் | + போ | = இள்ளாய்போ. |

ஆடுக்கூறாய் கோக்கூறாய் என ஒரோவிடத்து வரும் வல்லினம் மிகுமெனவும், வேந்துநில், தாய்வா, என வரும் மெல்லினமும் இடையினமும் இயல்பாமெனவும் கொள்க.

**321. உயிரையும் மெய்யையும் ஈறாகவுடைய எண்ணுப்பெயர், நிறைப்பெயர், அளவுப்பெயர், இவற்றின்முன் இவற்றிற்குறைந்த பெயர்கள் வரின் பெரும்பாலும் ஏ என்னும் சாரியை பெறும்.**

| | | |
|---|---|---|
| உ - ம்:—ஒன்று | + கால் | = ஒன்றேகால். |
| கால் | + காணி | = காலேகாணி. |
| தொடி | + கஃசு | = தொடியேகஃசு. |

கழஞ்சு + குன்றி = கழஞ்சேகுன்றி.
கலன் + பதக்கு = கலனேபதக்கு.
உழக்கு + ஆழாக்கு = உழக்கேயாழாக்கு.

ஒன்றரை, தொடியரை, குறுணிநானாழி, நாழியுழக்கு, எனச் சிறுபான்மை ஏகாரச்சாரியை பெறுமலும் வரும்.

அன்றியும், நாழி என்னும் அளவுப்பெயர்முன் உரி என்னும் அளவுப்பெயர் வரின், நாடுரி என நிலைமொழியீற் றுயிர்மெய் கெட்டு டகரமெய் தோன்றுமென்றும்; உரி என்னும் அளவுப் பெயர்முன் ஏற்ற மொழிகள்வரின், உரியவுப்பு உரியபயறு என யகரவுயிர் மெய் வருமென்றுங் கொள்க.

**322. உயிரையும் மெய்யையும் முதலு மீறுமாக உடைய வேற்றுமை யுருபுகள், நிலைமொழியோடும் வருமொழியோடும் புணருமிடத்துப் போன இரண்டிய லுள்ளும் மெய்யுயிர் முதலீற்றுப் பெயர்களுக்கு வேற் றுமைப்பொருட்புணர்ச்சிக்கண் விதித்தவாறு பெரும் பாலும் இயல்புவிகாரங்களைப் பெறும்.**

உ - ம்:—நம்பி + **கண்** + வாழ்வு = நம்பிகண்வாழ்வு, என உயிரீற்று உயர்திணைப்பெயர்முன் வேற்றுமையில் வரும் வல்லி னம் மிகாவென்றும், ணகரம் இடையினம்வரின் இருவழியிலு மியல்பாமென்றும் விதித்தவாறு, கண்ணுருபின் முதலு மீறும் இயல்பாயின.

உறி + **கண்** + தயிர் = உறிக்கட்டயிர், என இகரவீற்றுச் சொன்முன் வேற்றுமைப்பொருளில் வரும் வல்லினம் மிகு மென்றும், ணகரம் வேற்றுமைப்பொருளில் வல்லினம் வரின் டகரமாய்த் திரியுமென்றும் விதித்தவாறு, கண்ணுருபின் முதலு மீறும் விகாரமாயின.

சிறுபான்மை, நம்பி + கு = நம்பிக்கு, என இகரவீற்று உயர்திணைப்பெயர்முன் வேற்றுமைப்பொருளில் வரும் வல்லினம் இயல்பா மென்றவாறு இயல்பாகாமற் குவ்வுருபு மிகுதலுங் கொள்க.

**323. உயிரீற்று மெய்யீற்று இடைச்சொற்களின் முன்னும் உரிச்சொற்களின் முன்னும் வல்லெழுத்து முதலியன வந்து புணருமிடத்து, நிலைமொழியீறும் வருமொழிமுதலும், மேற்கூறிய புணர்ச்சி விதிக்குச் சிறுபான்மை வேறுபட்டும் வரும்.**

உ - ம்:—வண்டு + இன் + கால் = வண்டின்கால், என வேற்றுமைப் பொருட்புணர்ச்சியில் வல்லினம் வந்தவிடத்து, சாரியை இடைச்சொல்லினிறுதி னகரம் திரியாமல் இயல்பாயிற்று.

செல் + மதி + பெரும = சென்மதிபெரும, என இகரவீற்றிடைச்சொன்முன் வரும் வல்லெழுத்து மிகாதியல்பாயிற்று.

மழ + களிறு = மழகளிறு, நனி + பேதை = நனிபேதை, கழி + கண்ணோட்டம் = கழிகண்ணோட்டம், என அகர இகர வீற்று உரிச்சொற்களின்முன் வரும் வல்லினம் மிகாமல் இயல்பாயும், தட + தோள் = தடந்தோள், என அகரவீற்று உரிச்சொன்முன் இனமெல்லினம் மிக்கும் வந்தன.

**324. விதியின்றி விகாரப்பட்டு வருவனவுஞ் சிலவுள. அவை, மருவிவழங்குதல், ஓத்துநடத்தல், தோன்றல், திரிதல், கெடுதல், நீளல், நிலைமாறுதல், என எழுவகைப்படும். மருவிவழங்குத லொன்றுந் தொடர்மொழியிலும், மற்றவை பெரும்பாலும் ஒருமொழியிலும் வரும்.**

**325. மருவிவழங்குதல், விதியின்றிப் பலவாறு விகாரப்பட்டு மருவி வரும்.**

உ - ம்:—அருமருந்தன்னபிள்ளை = அருமருந்தபிள்ளை.
கிழங்கன்னபழஞ்சோறு = கிழங்கம்பழஞ்சோறு.
பாண்டியநாடு = பாண்டிநாடு.
தஞ்சாவூர் = தஞ்சை.
வடுகன்றந்தை = வடுகந்தை.
என்றந்தை = எந்தை.
ஆற்றூர் = ஆறை.
வடக்குள்ளது = வடாது.

326. ஒத்துநடத்தல்,ஓர் எழுத்து நின்றவிடத்து மற்றொரெழுத்து வந்து பொருள் வேறுபடாது நடத்தலாம். அவை வருமாறு :

அஃறிணை யியற்பெயருள் குறிலிணையின்கீழ் மகர நின்ற விடத்து னகரம் வந் தொத்து நடக்கும்.

உ - ம்:—அகம் = அகன். முகம் = முகன்.
நிலம் = நிலன். நலம் = நலன்.

மொழிமுதலிடைகளில் சகர ஞகர யகரங்களின் முன் அகரம் நின்றவிடத்து, ஐகாரம் ஒத்து நடக்கும்.

உ - ம்:—பசல் = பைசல். அமச்சு = அமைச்சு.
மஞ்சு = மைஞ்சு. இலஞ்சி = இலைஞ்சி.
மயல் = மையல். அரயர் = அரையர்

பல மொழிகளிலே நகர நின்ற விடத்து ஞகரம் வந்து ஒத்து நடக்கும்.

உ - ம்:—நண்டு = ஞண்டு. நமன் = ஞமன்.
நெண்டு = ஞெண்டு. ஐந்நூறு = ஐஞ்ஞூறு.
செய்ந்நின்ற = செய்ஞ்ஞின்ற.

சில அஃறிணைப் பெயரீற்றில் லகர மிருந்தவிடத்து ரகரம் வந்து ஒத்து நடக்கும்.

உ - ம்:—சாம்பல் =சாம்பர். பந்தல் =பந்தர்.
குடல் =குடர்.

அஃறிணையிலே சில குற்றுகரமொழிகளின் இறுதியிற் குற்றியலுகர நின்றவிடத்து, அர் வந்து ஒத்து நடக்கும்.

உ - ம்:—அரும்பு =அரும்பர். சுரும்பு= சுரும்பர்.
வண்டு =வண்டர்.

327 தோன்றலாவது, எழுத்தும் சாரியையும் விதியின்றித் தோன்றுதலாம்.

உ - ம்:—யாது-யாவது. —வகர உயிர்மெய் தோன்றிற்று.
குன்று-குன்றம். —அம்முச்சாரியை தோன்றிற்று.
செல்உழி-செலவுழி. விண் அத்து-விண்வத்து.
—மெய்யீற்றின்முன் வகரமெய் தோன்றிற்று.

328. திரிதலாவது, ஓரெழுத்து மற்றோரெழுத்தாக விதியின்றித் திரிதலாம்.

உ - ம்:—மாகி-மாசி. —ககரஞ் சகரமாய்த் திரிந்தது.
மழை பெயின் விளையும்-மழை பெயில் விளையும்.
—னகரம் லகரமாய்த் திரிந்தது.

329. கெடுதலாவது, மெய்யாவது உயிர்மெய்யாவது விதியின்றிக் கெடுதலாம்.

உ - ம்:—யாடு - ஆடு, யானை-ஆனை.—யகரமெய் கெட்டது.
யாவர் - யார். —வகர உயிர்மெய் கெட்டது.

330. நீளலாவது, விதியின்றிக் குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீளலாம்.

உ - ம்:—பொழுது-போழ்து,—ஒகரம் ஓகாரமாக நீண்டது.
பெயர் - பேர்,— எகரம் ஏகாரமாக நீண்டது.

**331.** நிலைமாறுதலாவது, எழுத்துகள் ஒன்று நின்றவிடத் தொன்று சென்று மாறிநிற்றலாம்.

**உ - ம்:**—வைசாகி - வைகாசி, நாளிகேரம் - நாரிகேளம், தசை - சதை, ஞிமிறு - மிஞிறு, சிவிறி - விசிறி.

இவையன்றி, இலக்கணப்போலி மொழிகளும் விதியின்றி விகாரப்பட்டுவரும்.

**உ - ம்:**—இல் முன்—முன்றில். பொது இல்—பொதியில்.

---

## 4. வடவெழுத்துப்புணரியல்.

**332.** வடவெழுத்துப் புணர்ச்சியாவது, தமிழிற் சிறுபான்மை வந்து வழங்கும் வடமொழித் தொகைநிலைத்தொடருள், நிலைமொழியீறும் வருமொழிமுதலும் வடநூற் புணர்ச்சி விதிப்படியே தோன்றல் திரிதல் கெடுதல் என்னும் விகாரங்களைப் பெற்றுவருவது, இயல்பாகவாவது இயைந்து நிற்றலாம்.

வடவெழுத் தென்பதற்கு வடமொழியெழுத்தெனப் பொருள் கொள்க.

வடநூலார், தோன்றற்கு- ஆகமம் என்றும், திரிதற்கு- ஆதேசம் என்றும், கெடுதற்கு - லோபம் என்றும் பெயர் கூறுவர்.

**333.** வடவெழுத்துக ளிவையென்றும், வடமொழிகள் தற்சமமாகியுந் தற்பவமாகியுந் தமிழில் வந்து வழங்குமாறு இவ்வாறென்றும் உணர்ந்தன்றி வடவெழுத்துப்புணர்ச்சி உணரலாகாமையின், அவை இவையென முன்ன ருணர்த்தப்படும்.

வடவெழுத்துகளுள் உயிரெழுத்துகள் 𑌅, 𑌆, 𑌇, 𑌈, 𑌉, 𑌊, 𑌋, 𑍠, 𑌌, 𑌏, 𑌐, 𑌓, 𑌔, 𑌅𑌂, 𑌅𑌃 எனப் பதினைந்தாம்; மெய்யெழுத்துகள் 𑌕, 𑌖, 𑌗, 𑌘, 𑌙, 𑌚, 𑌛, 𑌜, 𑌝, 𑌞, 𑌟, 𑌠, 𑌡, 𑌢, 𑌣, 𑌤, 𑌥, 𑌦, 𑌧, 𑌨, 𑌪, 𑌫, 𑌬, 𑌭, 𑌮, 𑌯, 𑌰, 𑌲, 𑌵, 𑌶, 𑌷. 𑌸, 𑌹, 𑌳, 𑌕𑍍𑌷, ஃ𑌕, ஃ𑌪 என முப்பத்தேழாம்.

வடநூலார், உயிரை-அச்சென்றும், மெய்யை-அல்லென்றும் கூறுவர்.

334. உயிரெழுத்துகள் பதினைந்தனுள், அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் பத்தும்; மெய்யெழுத்துகள் முப்பத்தேழனுள், க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ள, என்னும் பதினைந்தும், ஆகிய இருபத்தைந்தும் ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொது எழுத்துகளாம்.

உயிரெழுத்துகளுள் அப் பத்தொழிந்த ஐந்தும், மெய்யெழுத்துகளுள் அப் பதினைந்தொழிந்த இருபத்திரண்டும், ஆகிய இருபத்தேழும் ஆரியத்திற்கே யுரிய சிறப்பெழுத்துகளாம்.

335. ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகி விகாரமுறாமல் தமிழில் வந்து வழங்கும் வடமொழிகள், தற்சமமொழிக ளெனப்படும்.

உ - ம்:—கமலம், காரணம், மணி, வேணு; குங்குமம், மேரு.

336. ஆரியத்திற்கே யுரிய சிறப்பெழுத்தாலும் பொதுவுஞ் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகித் திரிதல் முதலாகிய விகாரங்களைப் பெற்றுத் தமிழில்வந்து வழங்கும் வடமொழிகள், தற்பவமொழிக ளெனப்படும்.

[அவை வருமாறு.]

உயிர்களுள் மொழியிறுதி அகரம் உயர்திணையில் னகரமும்,அஃறிணையில் மகரமும் பெறும்.

உ - ம்:—காமன், கும்பம்.

மொழியிறுதி ஆகாரம் ஐகாரமாயும் ஈகாரம்இகரமாயுந் திரியும்.

உ - ம்:—மாலை, புரி.

மொழியிறுதி ஊகாரம் உகரமாய்த் திரியும்.

உ - ம்:—சுயம்பு.

ஏழாமுயிர் இகரமாயும் இருவாயுந் திரியும்.

உ - ம்:—இடபம், மிருகம்.

மெய்யெழுத்துகளுள், க, ச, ட, த, ப, என்னும் ஐந்து வருக்கங்களின் நடுநின்ற மும்மூன் றெழுத்துக்களும்,அவ்வவ்வருக்கங்களின் முதலெழுத்துக்களாகும்.

| | | | |
|---|---|---|---|
| உ - ம்:— | நகம், | நாகம், | மேகம். |
| | சலவாதி, | விசயம், | சருச்சரை. |
| | பீடம், | பீடை, | திடம். |
| | தலம், | தினம், | தரை, |
| | பலம், | பந்தம், | பாரம், |

அன்றியும் எட்டாம் மெய் யகரமுமாகும்.

உ - ம்:—பங்கயம்.

பதினாறும் மெய்யும் பதினெட்டாம் மெய்யும் றகரமாகும்.

உ - ம்:—உற்பலம், அற்புதம்.

இருபதாம் மெய் மொழியிடையில் ணகரமாகும்.

உ - ம்:—தினம், மனம்.

10

இருபத்தொன்றும் மெய்யாகிய பகரம் முதல் அவ் வருக்கத்து நான்கு மெய்களும் வகரமுமாம்.

உ - ம்:—பாவம், கவம், விந்து, வீமன்.

இருபத்தெட்டாம் மெய் றகரமாகும்.

உ - ம்:—கற்பகம்.

இருபத்தொன்பதாம்மெய், ஓரோவிடத்துப் பகரமுமாகும்.

உ - ம்:—காப்பியம்.

முப்பதாம்மெய் மொழிக்கு முதலிற் சகரமும், இடையிற் சகரமும் யகரமுமாகும்.

உ - ம்:—சாலை, பாசம், மயானம்.

முப்பத்தொன்றும் மெய் மொழிக்கு முதலிற் சகரமும், இடையினுங் கடையிலும் டகரமுமாகும்.

உ - ம்:—சண்முகம், விடம், பாடை.

முப்பத்திரண்டாம் மெய், மொழிக்கு முதலிற் சகரமும், இடையிற் சகரமும் தகரமு மாகும்.

உ - ம்:—சித்தி, வாசம், வாதனை.

முப்பத்துமூன்றும்மெய், மொழிக்குமுதலிற்கெட்டும், இடையினுங் கடையினுங் ககரமாகியும் வரும்.

உ - ம்:—அரன், மோகம், அகி.

முப்பத்தைந்தாம் மெய், மொழிக்கு முதலில் ஒரு ககரமும், இடையினுங் கடையிலும் இரு ககரமுமாகும்.

உ - ம்:—கிரம், பக்கம்; குக்கி.

வடமொழிகளுள் இரண்டுமெய்க ளிணைந்து ஒரெழுத்துப்போல வருமிடத்து நகர யகர ரகர லகரங்

களுக்கு முன்னின்றமெய்கள், மொழிக்கு முதலிலும் இடையிலும் இகரம்பெறும்.

உ - ம்:—(முதல்.) (இடை.)
சிநேகம், விக்கினம்.
தியாகம், வாக்கியம்.
திரவியம், வக்கிரம்.
கிலேசம், சுக்கிலம்.

இணைந்துநிற்கும் மகர வகரங்களுக்கு முன்னின்ற மெய்கள், மொழிக்கு முதலிலும் இடையிலும் உகரம் பெறும்.

உ - ம்:—(முதல்.) (இடை.)
சுமார்த்தன், பதுமம்.
சுவசம், பக்குவம்.

மொழிக்கிடையில் ந ய ர ல வக்களுக்கு முன்னின்ற மெய்கள், பெரும்பாலும் இரட்டித்துவரும். அவை இரட்டித்துவருதல் மேற்காட்டிய உதாரணங்களிற் கண்டுகொள்க.

இணைந்துநிற்கும் நகரத்திற்கு முன்னின்றமெய் அகரம்பெறும்.

உ - ம்:—அரதநம்.

தனிக்குறிலின் கீழ்நின்ற ரகரம், பின்னிற்கும் மெய்களோடு இணைந்துநிற்கும்போது உகரம்பெறும்.

உ - ம்:—அருக்கன், கருப்பம்.

நகர, யகர, ரகர, லகர, வகர, மகரங்க ளல்லாத மெய்களுக்கு முன்னின்ற மெய்கள், பெரும்பாலுங் கெடும்.

உ - ம்:—தானம், ஞானம்.

மொழிக்கு ஈற்றில் நிற்குங் ககர முதலிய வல்லின மெய்கள், இரட்டித்து உகரம் பெறும்.

உ - ம்:—வாக்கு, விராட்டு.

மேலும் சம்பகம் - சண்பகம், கோகநதம் - கோகநகம், தபநீயம் - தமனியம், ரூபம் - உருவம்-உருவு - உரு, ஆத்மா-ஆன்மா, தர்மம்-தன்மம், அஸ்தம்-அத்தம், சப்தம் - சத்தம், சக்தி-சத்தி, மோக்ஷம்-மோக்கம்-மோட்சம், பத்மம்-பதுமம், பஸ்பம் - பற்பம் எனப் பலவாறு விகாரப்பட்டுவருதலுங் கொள்க.

337. வடசொற்களுக்கு முதலாகி வருகின்ற ரகர லகர யகரங்களில், ரகரம் அகர இகர உகரங்களி லொன்றையும், லகரம் இகர உகரங்களிலொன்றை யும், யகரம் இகரத்தையும் முதலிற் பெற்றுவரும்.

உ - ம்:—அரங்கன், இராமன், உரோமம்.
இலாபம், உலோபம்.
இயக்கன்.

338. வடநூற் புணர்ச்சிவிதிப்படியே, தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி, என்னும் இம் மூவகைச் சந்திகளையும் பெற்றுவரும் வடமொழித் தொகைநிலைத் தொடர்கள், தமிழில் ஆங்காங்கு வரும். இம் மூன்று சந்திகளும் உயிரீற்றின்முன் உயிர்வருமிடத்து வருவன வெனவறிக.

339. அ ஆக்களி லொன்றன்முன் அ ஆக்களி லொன்றுவந்தால், நிலைமொழியீறும் வருமொழிமுதலுங் கெட ஓர் ஆகாரமும்; இஈக்களி லொன்றன்முன் இஈக்களிலொன்றுவந்தால், நிலைமொழியீறும்வருமொழி முதலுங்கெட ஓர் ஈகாரமும்; உ ஊக்களிலொன்றன் முன் உஊக்களிலொன்றுவந்தால், நிலைமொழி யீறும்

வருமொழிமுதலுங்கெட ஓர் ஊகாரமும் தோன்றுதல் தீர்க்கசந்தியாம்.

உ - ம்:—பத + அம்புயம் = பதாம்புயம்.
பரம + ஆனந்தம் = பரமானந்தம்.
கங்கா + அமிர்தம் = கங்காமிர்தம்.
சதா + ஆனந்தம் = சதானந்தம்.
சுசி + இந்திரம் = சுசீந்திரம்.
கிரி + ஈசன் = கிரீசன்.
மகி + இந்திரன் = மகீந்திரன்.
மகி + ஈசன் = மகீசன்.
குரு + உதயம் = குரூதயம்.
மேரு + ஊர்த்துவம் = மேரூர்த்துவம்.
சுயம்பூ + உபதேசம் = சுயம்பூபதேசம்.
சுயம்பூ + ஊர்ச்சிதம் = சுயம்பூர்ச்சிதம்.

340. அ ஆக்களி லொன்றன்முன் இ ஈக்களி லொன்று வந்தால் நிலைமொழியீறும் வருமொழிமுதலுங்கெட ஓர் ஏயும், அ ஆக்களி லொன்றன்முன் உ ஊக்களிலொன்று வந்தால் நிலைமொழியீறும் வருமொழிமுதலுங்கெட ஓர் ஓவுந் தோன்றுதல் குணசந்தியாம்.

உ - ம்:—நர + இந்திரன் = நரேந்திரன்.
சுர + ஈசன் = சுரேசன்.
தரா + இந்திரன் = தரேந்திரன்.
உமா + ஈசன் = உமேசன்.
பாத + உதகம் = பாதோதகம்.
ஞான + ஊர்ச்சிதன் = ஞானோர்ச்சிதன்.
தயா + உற்பத்தி = தயோற்பத்தி.
தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்.

341. அ ஆக்களி லொன்றன்முன் ஏ ஐக்களி லொன்றுவந்தால் நிலைமொழியீறும் வருமொழி முத

லுங்கெட ஓர் ஐகாரமும், அ ஆக்களி லொன்றின்முன் ஓ ஔக்களிலொன்றுவந்தால் - நிலைமொழியீறும் வருமொழிமுதலுங் கெட ஒரௌகாரமும், தோன்றுதல் **விருத்திசந்தியாம்.**

| | | |
|---|---|---|
| உ - ம் :—ஏக | + ஏகன் | = ஏகைகன். |
| பர | + ஐக்கியம் | = பரைக்கியம். |
| சதா | + ஏகரூபம் | = சதைகரூபம். |
| மகா | + ஐச்சுவரியம் | = மகைச்சுவரியம். |
| கோமள | + ஓடதி | = கோமளௌடதி. |
| திவ்விய | + ஔடதம் | = திவ்வியௌடதம். |
| மகா | + ஓடதி | = மகௌடதி. |
| மகா | + ஔடதம் | = மகௌடதம். |

342. விருத்திசந்தி இருமொழிப் புணர்ச்சிக்கண்ணன்றி ஒருமொழியிலும் வரும்.

மொழிமுதலில் இ ஈ ஏக்கள் ஐயாகவும், உ ஊ ஓக்கள் ஔவாகவும், அகரம் ஆகாரமாகவும், ஏழாமுயிர் ஆராகவும், திரிந்துவருதல் ஆதிவிருத்திசந்தியாம்

| | |
|---|---|
| உ - ம் :—சிவனைத்தொழுவோன் | சைவன். |
| வீரத்தின்தன்மை, | வைரம். |
| கேவலத்தின்தன்மை, | கைவல்யம். |
| புத்தனைத்தொழுவோன், | பௌத்தன். |
| சூரன்தன்மை, | சௌரியம். |
| கோசலையிற்பிறந்தாள், | கௌசலை. |
| தசரதன்புத்திரன், | தாசரதி. |
| கிர்த்திகையின்புத்திரன், | கார்த்திகேயன். |

கார்த்திகேயன் என்னு மிடத்து மகனென்னும் பொருளில் ஏய என்னும் விகுதி வருதல் காண்க.

343. வடமொழித் தொகைநிலைத் தொடருட் சிலவட நூன்முடிபின்படி நிலைமொழியீறும்வருமொழி முதலும் இயல்பினைப் பொருந்தித் தமிழிற் சிறுபான்மை வரும்.

இவ்வியல்பு உயிரீற்றின்முன் மெய்ம்முதன்மொழி வருமிடத்து ஆமெனவறிக.

உ - ம்:—தாரதம்மியம், உமாபதி,
குலசேகரன், தனதடம்,
கங்காதீரம், மாயாகாரியம்,
ஆதிபகவன், அளிகுலம்.

சூரியச்சாயை, பதச்சேதம், எனச் சகரவருக்கத்துள் இரண்டாம் மெய் வரின் மிகுமெனவும், கௌரீச்சாயை கௌரீசாயை, என நிலை மொழியீறு நெடிலாயின் விகற்பமாய் வருமெனவும் அறிக.

344. வடமொழித் தொகைநிலைத் தொடருள், நிலைமொழி யீறேனும் வருமொழி முதலேனும் அவ்விரண்டுமேனுந் தமிழைநோக்கி விகாரமுற்ற விடத்தும், நிலைமொழியேனும் வருமொழியேனும் தமிழ்மொழியாகியவிடத்தும், தமிழ்நூற்புணர்ச்சி விதியைப் பெற்று வரும்.

உ - ம்:—கங்கை + சடை = கங்கைச்சடை.
அளி + கூட்டம் = அளிக்கூட்டம்.
மாயை + குணம் = மாயைக்குணம்.
மற்றவைகளு மிப்படியே.

345. வடமொழி மெய்யீற்றின்முன் உயிரும்மெய்யும் வருமிடத்து, திக் + அந்தம் = திகந்தம், சித் + ஆகாசம் = சிதாகாசம், சித் + சத்தி = சிச்சத்தி, சகத் + நா

தன்=சகந்நாதன், சித்+மயம்=சின்மயம், மநஸ்+லயம்=மநோலயம், சரஸ்+ருகம்=சரோருகம், எனத் தமக்கேற்ற புணர்ச்சிவிதியைப் பெற்று வரும்.

உண்மைநோக்குமிடத்து வடவெழுத்துமெய்களில், லகரம் ளகரமாக உச்சரிக்கப்படுவதன்றி ளகரம் வேறெழுத் தன்றெனவும், க்ஷகரங் கூட்டெழுத்தன்றித் தனியே ஓரெழுத் தன்றெனவும் உணர்க.

## IV. தொடர்மொழியதிகாரம்.

### 1. தொகைநிலைத்தொடரியல்.

346. தொடர்மொழியதிகாரம், தொகைநிலைத் தொடரியல், தொகாநிலைத்தொடரியல், பிரயோகவியல், ஒழிபியல், என நான்கு இயல்களாக வகுக்கப்படும்.

347. தொடர்மொழிகள், பெயர், வினை, இடை, உரி, என்னும் நால்வகைச்சொற்களுள் இரண்டு முதலி யன தொகைநிலையாகவுந் தொகாநிலையாகவும் தொடர் வனவாம்.

348. தொகைநிலைத்தொடர், பெயரோடும் பெ யரெச்சத்தோடும் பெயரும், பெயரோடு வினை வினைக் குறிப்புப்பெயர்களும், இடையில் வேற்றுமை யுருபுகள் முதலிய உருபுகள் மறைந்து நிற்க, ஒருமொழித்தன் மைப்பட்டுத் தொடர்வனவாம். ஒருமொழித்தன்மைப் படுதலாவது, பிளவுபடாமல் நிற்றலாம்.

349. அத் தொகைநிலைத்தொடர், வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என அறுவகைப்படும்.

350. வேற்றுமைத்தொகை இரண்டாவது முதல் ஏழாவது இறுதியாகிய ஆறு வேற்றுமை யுருபுகளும் இடையிலே மறைந்துநிற்க, மொழிகள் தொடர்வன வாம்.

உ - ம்:—நிலங்கடந்தவன்— 2-ம் வேற்றுமைத்தொகை.
தலைவணங்கினவன்—3-ம் ,, ,,
சாத்தன்மைந்தன்— 4-ம் ,, ,,
ஊர்நீங்கினவன்— 5-ம் ,, ,,
சாத்தன்கை— 6-ம் ,, ,,
குன்றக்கூகை— 7-ம் ,, ,,

பொன்னாற் செய்த குடம் என்பது பொற்குடம் எனவும், கையையுடைய களிறு என்பது கைக்களிறு எனவும், வருவனவற்றை உருபும்பொருளு மொருங்குதொக்க வேற்றுமைத்தொகை யென்பர்.

**351. வினைத்தொகை, பெயரெச்சத்தின் இடைநிலையும் இறுதிநிலையுமாகிய உருபுகள் மறைந்து நிற்க முதனிலையோடு பெயர்ச்சொற்கள் தொடர்வனவாம்.**

உ - ம்:—(நேற்றுக்)கொல்களிறு. (முன்)விடுகணை. } இறந்தகாலவினைத்தொகை.
(இன்று)கொல்களிறு. (இப்போது)விடுகணை. } நிகழ்கால வினைத்தொகை.
(நாளைக்)கொல்களிறு. (பின்)விடுகணை. } எதிர்கால வினைத்தொகை.

இவை, கொன்ற கொல்கின்ற கொல்லும் எனவும், விட்ட விடுகின்ற விடும் எனவும் விரியும்.

கொல்களிறு, விடுகணை, என்றாற்போல்வன முக்காலமும்பற்றிவரின், முக்காலவினைத்தொகை யெனப்படும்.

அன்றியும், நடந்திடுகுதிரை படித்திடுபுத்தகம் எனச் சில இடுவென்பதைப் பெற்றுவரும்.

**352. பண்புத்தொகை, பண்புக்கும் பண்பிக்குமுண்டா யிருக்கின்ற ஒற்றுமையை விளக்குகிற ஆகிய என்னும் உருபு இடையிலே மறைந்து நிற்கப் பண்புச்**

**சொல்லோடு பண்பிச்சொல் தொடர்வன வாம். பண் பாவன, வண்ணம் வடிவு அளவு சுவை முதலியன.**

உ - ம்:—செந்தாமரை. கருங்குவளை. } வண்ணப்பண்புத் தொகை.

வட்டக்கல். சதுரப்பலகை. } வடிவுப் பண்புத் தொகை.

ஒருபொருள். முக்குணம். } அளவுப் பண்புத் தொகை.

துவர்க்காய். இன்சொல். } சுவைப் பண்புத் தொகை.

அன்றியும், ஆகிய என்னும் பண்புருபு இடையிலே மறைந்துநிற்கப் பொதுப்பெயரோடு சிறப்புப்பெயராவது, சிறப்புப் பெயரோடு பொதுப்பெயராவது, ஒருபொருண்மேல்வந்து தொடர்வன இருபெயரொட்டுப் பண்புத் தொகையாம்.

உ - ம்:—சாரைப்பாம்பு, ஆயன்சாத்தன்.

இவை செம்மையாகியதாமரை, சாரையாகியபாம்பு என விரியும். மற்றவைகளு மிப்படியே.

353. **உவமைத்தொகை, போல முதலிய உவமையுருபுகள் இடையிலே மறைந்துநிற்க, உபமானச் சொல்லோடு உபமேயச்சொல் தொடர்வனவாம். இவ்வுவமை, வினை பயன் மெய் உருவு என்பன பற்றி வருமெனக்கொள்க.**

உ - ம்:—புலிக்கொற்றன் - வினையுவமைத்தொகை.
மழைக்கை - பயனுவமைத்தொகை.
துடியிடை - மெய்யுவமைத்தொகை.
பவளவாய் - உருவுவமைத் தொகை.

இவை, புலிபோலுங்கொற்றன், மழைபோலுங்கை, என விரியும். பிறவு மன்ன.

உவமை யுருபுகளாவன, போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன முதலியனவாம்.

**354. உம்மைத்தொகை, எண்ணப்படு பொருளில் வரும் உம்முருபு, இடையிலும் இறுதியிலும் மறைந்துநிற்கச் சொற்கள் தொடர்வனவாம்.**

இவ் வும்மைத்தொகை, எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் என்னும் நால்வகை அளவுப்பெயர்களிலே வருமென்று கொள்க.

உ - ம்:—இராப்பகல்.
ஒன்றேகால். } எண்ணலளவை.
கழஞ்சேகால்.
தொடியேகஃசு. } எடுத்தலளவை.
கலனேதூணி.
நாழியாழாக்கு. } முகத்தலளவை.
சாணரை.
சாணங்குலம். } நீட்டலளவை.

இவை, இரவும் பகலும், ஒன்றுங் காலும், என விரியும். பிறவுமன்ன.

**355. அன்மொழித்தொகை, வேற்றுமைத் தொகை முதல் ஐந்து தொகை நிலைத்தொடரும் தத்தம் பொருள்படத் தொகாது அல்லாதமொழிப் பொருள்படத் தொகுவனவாம்.**

உ - ம்:—(1) பூங்குழல், பொற்றொடி, கவியிலக்கணம், பொற்றாலி, கிள்ளிகுடி, கீழ்வயிற்றுக்கழலை, என்றாற்போல்வன, வேற்றுமைத்தொகையிடத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

இவை பூவையுடைய குழலினையுடையாள், பொன்னு லாகிய தொடியினையுடையாள், கவிக்கிலக்கணஞ் சொல்லப் பட்ட நூல், பொன்னினுகிய தாலியினையுடையாள், கிள்ளியி னது குடியிருக்குமூர், கீழ்வயிற்றின்கண் ணெழுந்த கழலை போல்வான், என விரியும்.

(2) தாழ்குழல் என்பது, வினைத்தொகையிடத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தாழ்ந்த குழலினையுடை யாள் என விரியும்.

(3) கருங்குழல் என்பது, பண்புத்தொகையிடத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கருமையாகிய குழலினை யுடையாள் என விரியும்.

(4) தேன்மொழி என்பது, உவமைத்தொகையிடத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தேன்போலு மொழியினை யுடையாள் என விரியும்.

(5) உயிர்மெய் என்பது, உம்மைத்தொகையிடத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது உயிரும் மெய்யுமாகிய இரண்டெழுத்துக்கூடிப் பிறந்த எழுத்து என விரியும்.

**356. ஐயுருபும் கண்ணுருபும் மறைந்து நிற்கும் தொடர்மொழிகளிலே முடிக்குஞ் சொல் சிறுபான்மை முன்வரவும்பெறும்.**

உ - ம்.—கடந்தானிலம், இருந்தான்மாடத்து.

இவ்வாறு வருவன வெல்லாம் உருபுமறைந்து நிற்கினும் ஒருமொழித்தன்மைப்படாமற் பிளவுபட்டு வருதலாலே தொ காநிலைத்தொடரென்றே கொள்ளப்படும்.

**357. வேற்றுமையுருபுகள் விரிந்து நிற்குமிடத் து எப் பொருள்படுமோ, அப் பொருள்படுமிடத்தே மறைந்து நிற்கப்பெறும். அப் பொருள் படாவிடத்து மறைந்து நிற்கப்பெருவாம்.**

உ - ம். — சாத்தனையடித்தான் சாத்தனோடுவந்தான் என விரிந்துநிற்குமிடத்துச் செயப்படுபொருளும் உடனிகழ்ச்சிப்பொருளும் படுதல்போலச் சாத்தனடித்தான் சாத்தன் வந்தா னென்னுமிடத்து அப் பொருள்படாமையால்;இவ்விடங்களிலே அவ்வுருபுகள் மறைந்துநிற்கப்பெறா எனவறிக.

358. வினைத்தொகை விரிந்தவிடத்துப் பெயரெச்சத் தொடரும்; பண்புத்தொகையும் உம்மைத் தொகையும் விரிந்த விடத்து இடைச்சொற்றொடரும்; உவமைத்தொகை விரிந்தவிடத்து இடைச்சொற்றொடரும், இடைச்சொலடியாகப்பிறந்த பெயரெச்ச வினையெச்சத்தொடரும்; அன்மொழித் தொகை விரிந்தவிடத்துச் சொற்களுஞ் சந்திகளும் பலவாதலின் பல தொடரும் ஆதலால், இவை ஐந்தும் விரிந்தவிடத்துத் தொகாநிலை யெனப்படாவென்றும், வேற்றுமைத் தொகையை விரித்தவிடத்துப் பொருளும் சந்தியும் வேறுபடாமைபற்றி வேற்றுமைத் தொகாநிலை யெனப் படுமென்றும் அறிக.

359. உயர்திணை யொருமைப்பாலில் வரும் உம்மைத் தொகைநிலைத்தொடர்மொழியி னிறுதி, ரகர விகுதியும் கள் விகுதியுமாகிய பலர்பா லீற்றனவாகும்.

உ - ம்:—சேரசோழபாண்டியர், தேவன்றேவிகள்:

நன்மைதீமை - நன்மைதீமைகள், தந்தைதாய் - தந்தை தாய்கள், என அஃறிணை பொதுத்திணை யொருமைப்பாலில் வரும் உம்மைத்தொகைகளி னிறுதி ஒருமையீற்றாலும் பன்மையீற்றாலும் வருமெனக் கொள்க.

360. தொகைநிலைத் தொடர்மொழிகளை விரித்துப் பொருள்கொள்ளுமிடத்து, ஒருபொருள் கொள்

ளப்படுதலுமன்றி, இரண்டுமுதல் ஏழெல்லையாகிய பல பொருளுங் கொள்ளப்படும்.

உ - ம்:—தெய்வவணக்கமென்பது, தெய்வத்தைவணங்கும் வணக்கம், தெய்வத்துக்கு வணங்கும் வணக்கம், என இருபொருள் கொள்ளப்பட்டது.

தற்சேர்ந்தாரென்பது, தன்னைச்சேர்ந்தார், தன்னோடு சேர்ந்தார், தன்கட்சேர்ந்தார் என மூன்றுபொருள் கொள்ளப்பட்டது.

சொல்லிலக்கணமென்பது, சொல்லின திலக்கணம், சொற்கிலக்கணம், சொல்லின்கணுள்ளவிலக்கணம், சொல்லிலக்கணஞ் சொன்னநூல் என நான்குபொருள் கொள்ளப்பட்டது.

பொன்மணியென்பது, பொன்னாலாகியமணி, பொன்னாகியமணி, பொன்னின்கண் விளங்குகின்றமணி, பொன்னோடு சேர்ந்தமணி, பொன்னும்மணியும் என ஐந்து பொருள் கொள்ளப்பட்டது.

மரவேலியென்பது, மரத்தைக்காக்கும்வேலி, மரத்திற்குவேலி, மரத்தினதுவேலி, மரத்தின்புறத்துவேலி, மரத்தாலாகியவேலி, மரமாகியவேலி, என ஆறு பொருள் கொள்ளப்பட்டது.

சொற்பொருளென்பது, சொல்லாலறியப்படும் பொருள், சொல்லினதுபொருள், சொற்குப்பொருள், சொல்லின்கணுள்ளபொருள், சொல்லும்பொருளும், சொல்லாகிய பொருள், சொல்லானதுபொருள், என ஏழு பொருள் கொள்ளப்பட்டது.

**361. தொகைநிலைத் தொடர்மொழிகளுள், வேற்றுமைத்தொகையிலும், பண்புத்தொகையிலும், முன்மொழிகளிலாயினும் பின்மொழிகளிலாயினும் பொ**

ருள் சிறந்துநிற்கும். வினைத்தொகையிலும் உவமைத் தொகையிலும், முன்மொழிகளிற் பொருள் சிறந்து நிற்கும். உம்மைத்தொகையிலே பலமொழிகளினும் பொருள் சிறந்துநிற்கும். அன்மொழித் தொகையில் இருமொழியுமல்லாத மொழிகளிலே பொருள் சிறந்து நிற்கும்.

உ-ம்:—வேங்கைப்பூ, செந்தாமரை, என வரும் வேற்றுமைத்தொகை பண்புத்தொகைகளிலே முன்மொழிகள் இனம்விலக்கி நிற்கையால், அம் முன்மொழிகளிற் பொருள் சிறந்தன.

கண்ணிமை, செஞ்ஞாயிறு, என வரும் வேற்றுமைத் தொகை பண்புத்தொகைகளிலே முன்மொழிகள் இனம் விலக்குதலின்றி நிற்கையால் பின்மொழிகளிற் பொருள்சிறந்தன

ஆடுபாம்பு, வேற்கண், என வரும் வினைத்தொகை உவமைத்தொகைகளிலே முன்மொழிகள் இனம் விலக்கி நிற்கையால், அம் முன்மொழிகளிற் பொருள்சிறந்தன.

இராப்பகல், சேரசோழபாண்டியர், என வரும் உம்மைத்தொகைகளிலே பல மொழிகளும் இனம் விலக்கலும் விலக்காமையுமின்றி நிற்கையால் அப் பலமொழிகளிலும் பொருள் சிறந்தன.

பொற்றொடி, உயிர்மெய், என வரும் அன்மொழித் தொகைகளிலே சொல்லுவோன் கருத்து இவ் விருமொழிப்பொருண்மேல தாகாமல், இவ்விருமொழியு மல்லாத உடையாள் முதலிய மொழிப்பொருண்மே லாதலால், அவ் வல்லாத மொழிகளிற் பொருள் சிறந்தன.

## 2. தொகாநிலைத்தொடரியல்

362. தொகாநிலைத்தொடர்மொழிகள், இடையே வேற்றுமையுருபு முதலிய உருபுகள் மறைந்து நில்லாமலும், ஒருமொழித்தன்மைப் படாமலும், சொற்கள் தொடர்வனவாம்.

363. அத் தொகாநிலைத்தொடர்கள், (1) எழுவாய்த் தொடர், (2) விளித்தொடர், (3) வேற்றுமை விரித் தொடர்,(4) வினைமுற்றுத்தொடர், (5) பெயரெச்சத் தொடர், (6) வினையெச்சத்தொடர். (7) இடைச்சொற்றொடர், (8) உரிச்சொற்றொடர் என எட்டு வகைப்படும்.

உ - ம்:—(1) சாத்தன் வந்தான்,(2) சாத்தா வா, (3) நிலத்தைக் கடந்தான், (4) செய்தானவன், (5) உண்ட சாத்தன், (6) உண்டு வந்தான், (7) மற்றொன்று,(8) கடிக்கமலம்.

இவற்றின் விகற்பங்களெல்லாம் சொல்லதிகாரத்தில் விரித்துரைக்கப்பட்டமையால் ஈண்டு விரிக்கப்படவில்லை என அறிக.

சாத்தன் வந்தான் என வினைமுற்று எழுவாய்க்கு முடிக்குஞ் சொல்லாக வருமிடத்துச், சாத்தன் இதுசெய்தான் என வினைமுதல் விசேடணமாக, வினை முக்கியப்பொருளாம்.

வந்தான் சாத்தான், என வினைமுற்றிற்குப் பெயர் முடிக்குஞ் சொல்லாக வருமிடத்து, இது செய்தான் சாத்தன் என வினை விசேடணமாக, வினைமுதல் முக்கியப்பொருளாம்.

364. வேற்றுமை யுருபுகளும் வினைமுற்றுகளும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் கொள்ளும் பெயர்வினைகளுக்கிடையே, வருமொழியோடு இயையத்தக்க பிற சொற்கள் வரவும்பெறும்.

உ-ம்.—சாத்தன் வயிறுற உண்டான், அறத்தை அழகுபெறச் செய்தான், வாளான் மாய வெட்டினான், தேவர்க்குச் செல்வம்வேண்டிச் சிறப்பெடுத்தான், மலையினின் றுருண்டு வீழ்ந்தான், சாத்தனது இத் தடக்கை யானை, ஊர்க்கணுயர்ந்த வொளி மாடம், சாத்தா விரைந்தோடி வா, வந்தானவ்வூர்க்குப் போன சாத்தன், வந்த வடகாசி மன்னன், வந்து சாத்தன் இன்று அவனூர்க்குப் போயினான். மற்றவைகளுமிப்படியே.

உண்டு விருந்தோடு வந்தான் என்னுமிடத்து, இடையில் வந்த விருந்து என்னும் சொல் வருமொழியோடு இயைதலன்றி விருந்தோ டுண்டு வந்தா னென நிலைமொழியோடும் இயைதலால் இதுபோல்வன இடையில் வரப்பெறுமென் றறிக.

## 3. பிரயோகவியல்.

**365. பிரயோகமாவது, வாக்கியங்களிலே முடிக்கும் சொல்லாக வரும் வினைமுற்றுகள், முடிக்கப்படும் முடிப்பாம்.**

**366. வாக்கியங்களாவன, எழுவாயும் பயனிலையும், செயப்படுபொருள் முதலியவைகளோடு கூடியேனும் கூடாதேனும், முடிவுபெற்று நிற்பனவாம்.**

உ-ம்:—சாத்தன் சோற்றை யுண்டான்.
சாத்தன் மரத்தை வாளால் வெட்டினான்.
சாத்தன் வந்தான்.

**367. அம் முடிப்புகள், செயப்படுபொருளுடைவினைமுதலின் முடிப்பெனவும், செயப்படுபொருளில் வினைமுதலின்முடிப்பெனவும், செயப்படுபொரு**

ளிரண்டுடை வினைமுதலின் முடிப்பெனவும், செயப்படுபொருளின் முடிப்பெனவும், செயப்படுபொருளிரண்டுடைச் செயப்படுபொருளின் முடிப்பெனவும் ஐந்து வகைப்படும்.

368. செயப்படுபொருளுடை வினைமுதலின் முடிப்பாவது, செயப்படுபொருள் குன்றாத வினையை. வினைமுதலைக் காட்டும் விகுதியான் முடித்தலாம்.

உ - ம்.—சாத்தன் உண்டான்.

இதனை வடநூலார், 'சகர்மககர்த்தரிபிரயோகம்' என்பர்.

369. செயப்படுபொருளில் வினைமுதலின் முடிப்பாவது, செயப்படுபொருள் குன்றிய வினையை வினைமுதலைக் காட்டும் விகுதியான் முடித்தலாம்.

உ - ம்.—சாத்தன் வந்தான்.

இதனை வடநூலார், 'அகர்மககர்த்தரிபிரயோகம்' என்பர்.

370. செயப்படுபொருளிரண்டுடை வினைமுதலின் முடிப்பாவது, இரண்டு செயப்படுபொருளுடைய வினையை வினைமுதலைக் காட்டும் விகுதியான் முடித்தலாம்.

உ - ம்.—அரசன் பகைவரைச் சிறைச்சாலையை யடைவித்தான்.

இதனை வடநூலார், 'துவிகர்மககர்த்தரிபிரயோகம்' என்பர்.

371. செயப்படுபொருளின் முடிப்பாவது, செயப்படுபொருள் குன்றாத வினையை, அச் செயப்படுபொருளைக் காட்டும் விகுதியான் முடித்தலாம்.

உ - ம்.—அரசனாற் பகைவர் கொல்லப்பட்டார்.

இதனை வடநூலார், 'கர்மணிபிரயோகம்' என்பர்.

**372. செயப்படுபொருளிரண்டுடைச் செயப்படுபொருளின் முடிப்பாவது, இரண்டு செயப்படு பொருளுடைய வினையை, அவ்விரண்டு செயப்படுபொருள்களுள் ஒன்றைக் காட்டும் விகுதியான் முடித்தலாம்.**

உ-ம்.—*அர்சுனுற் பகைவர் சிறைச்சாலையை யடைவிக்கப்பட்டார்.*

*இதனை வடநூலார், 'துவிகர்மககர்மணிபிரயோகம்' என்பர்.*

**373. அவாய்நிலையாலும், அண்மையாலும், தகுதியாலும், கருத்துணர்ச்சியாலும், ஆற்றலுணர்ச்சி முதலியவைகளாலும், வாக்கியப் பொருளுணர்ச்சி யுண்டாகும்.**

**374 அவாய்நிலையாவது, வாக்கியத்தில் எந்தச் சொல்லுக்கு எந்தச் சொல் இன்றியமையாததாக இருக்கின்றதோ அந்தச் சொல்லை அந்தச் சொல் வேண்டி நிற்றலாம்.**

உ-ம்.—*ஆவைக்கொணு-என்னுமிடத்து, கொணுவென்பதற்கு ஆவையென்பது இன்றியமையாததா யிருத்தலால், அதற்கு அது அவாய்நிலையாயிற்று. ஆவை யென்பதற்குக் கொணுவென்பதும் இன்றியமையாததா யிருத்தலால் அதற்கு அதுவும் அவாய்நிலையாயிற்று.*

**375. அண்மையாவது, வாக்கியத்தின்கணுள்ள சொற்கள் காலம் இடையீடின்றிச் சொல்லப்படுதலாம்.**

உ-ம்.—*ஆற்றங்கரைக்கண் ஐந்து கனிகள் உளவாகின்றன—என்னுமிடத்து, ஒருசாமத்துக்கு ஒருசொல்லாகச்சொன்ஞல் வாக்கியப் பொருளுணர்ச்சி யுண்டாகாமையாற் காலம் இடையீடின்றிச் சொல்லப்படும்.*

அன்றியும், மலையுண்டானெருப்புடையது தேவதத்தன்— என வாக்கியப்பொருளுணர்ச்சிக்குக் காரணமாகாதவாறு மொழிகளைப் புணர்த்திக்கூறுதல் அண்மையாகாதெனவும், மலைநெருப்புடையது, உண்டான்தேவதத்தன், என வாக்கியப்பொருளுணர்ச்சிக்குக் காரண மாகுமாறு மொழிகளைப் புணர்த்திக்கூறல் அண்மையாமெனவும் அறிக.

**376. தகுதியாவது, வாக்கியத்துட் சொற்கள் ஒன்றற்கொன்று பொருள் பொருத்தமுடைத்தா யிருக்கத் தொடர்தலாம்.**

உ - ம்.—நீராலேநனை-என்னுமிடத்து, நனைத்தற்கு நீர் கருவியாதலால் அதற்கு அது தகுதியாயிற்று. நெருப்பாலே நனை - என்றால் நனைத்தற்கு நெருப்பு கருவி அன்றாதலின் அதற்கது தகுதியன்றாமென வறிக.

**377. கருத்துணர்ச்சியாவது, வாக்கியத்துள் எப் பொருளைக் குறித்து எச் சொற் சொல்லப்பட்டதோ, அமையம் நோக்கி அச் சொல்லில் அப் பொருளை அறிதலாம்.**

உ - ம்:—மாவைக் கொண்டுவா-என்னுமிடத்துப் பசித்தோனாற் சொல்லப்பட்டால், தின்னுகின்ற மாவெனவும்; கவசம்பூண்டோனாற் சொல்லப்பட்டால், குதிரையெனவும் அமையம் நோக்கி யறிதல்.

**378. ஆற்றலுணர்ச்சியாவது, விரலழகிது- என்னுமிடத்து, விரலென்னுஞ் சொல் நகத்தை யுணர்த்தாமல் விரலையேயுணர்த்துதல் அச் சொல்லின்கணுள்ள சத்தி என அறிதலாம்.**

## 4. ஒ ழி பி ய ல்.

379. ஈண்டு ஒழிபாவது முற்கூறிய தொகைநிலைத் தொடரியல் முதலிய மூன்றியல்களிலே கூறாமல் ஒழிந்தனவாம். அவற்றைக் கூறுதலால் இவ்வியலுக்கு ஒழிபியல் என்னும் பெயராயிற்று.

### [ஆகுபெயர்]

380. மொழிகள் தொடருமிடத்து ஒருமொழியின் இயற்பொருள் அதனை முடிக்கவரும் மொழிப் பொருளோடு பொருத்தமில்லா விடத்து, அம் மொழியில் ஆக்கப்பொருள் கொள்ளப்படும்.

அவ்வாறு ஆக்கப்பொருள் கொள்ளப்படும் மொழிகள், ஆகுபெயர்களெனப்படும். அவ்வாகுபெயர்கள், (1) பொருளாகுபெயர், (2) இடவாகுபெயர், (3) காலவாகுபெயர், (4) சினையாகுபெயர், (5) குணவாகுபெயர், (6) தொழிலாகுபெயர், (7) எண்ணலளவையாகு பெயர், (8) எடுத்தலளவை யாகுபெயர், (9) முகத்தலளவையாகுபெயர், (10) நீட்டலளவையாகுபெயர், (11) சொல்லாகுபெயர், (12) தானியாகுபெயர், (13) கருவியாகுபெயர், (14) காரியவாகுபெயர், (15) கருத்தாவாகு பெயர், (16) உவமையாகுபெயர் எனப் பதினாறு வகைப்படும்.

உ - ம்:— [1. பொருளாகுபெயர்]

'தாமரை முகம்' என்னுமிடத்துத் தாமரை என்னும் மொழியின் இயற்பொருளாகிய முதற்பொருளுக்கு, அதனை முடிக்கவந்த முகம் என்னும் உபமேயப் பொருளோடு பொருத்த மில்லாமையால், அம் மொழியில் அதன் சினைப்பொருளாகிய மலரென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்பட்டது.

## [2. இடவாகுபெயர்]

'ஊர் வந்தது' என்னுமிடத்து ஊர் என்பதின் இயற்பொருளாகிய இடச் சிறப்புப்பொருளுக்கு, அதனை முடிக்க வந்த வருதலென்னும் வினைப்பொருளோடு பொருத்தமில்லாமையால், அம் மொழியில் அவ்விடத்தில்வாழ்வோர் என்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்பட்டது.

## [3. காலவாகுபெயர்]

'காரறுத்தது' என்னுமிடத்துக் காரென்பதின் இயற்பொருளாகிய காலச் சிறப்புப்பொருளுக்கு, அதனை முடிக்கவந்த அறுத்தலென்னும் வினைப்பொருளோடு பொருத்தமில்லாமையால், அம் மொழியில் ஆக்கப்பொருள் கொள்ளப்பட்டது.

## [4. சினையாகுபெயர்]

'மருக்கொழுந்து நட்டான்' என்னுமிடத்துக் கொழுந்தென்பதின் இயற்பொருளாகிய சினைச்சிறப்புப்பொருளுக்கு, அதனை முடிக்கவந்த நடுதல்என்னும் வினைப்பொருளோடு பொருத்த மில்லாமையால், அம் மொழியில் அதன் முதலென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்பட்டது.

## [5. குணவாகுபெயர்]

'நீலஞ் சூடினாள்' என்னுமிடத்து நீலமென்பதினியற்பொருளாகிய கருமையென்னும் பொருளுக்கு,அதனை முடிக்க வந்த சூடலென்னும் வினைப்பொருளோடு பொருத்த மில்லாமையால், அம் மொழியில் அந் நிறத்தையுடைய மலரென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்பட்டது.

## [6. தொழிலாகுபெயர்]

'வற்றலோ டுண்டான்' என்னுமிடத்து வற்றலென்பதினியற்பொருளாகிய வற்றுதல் என்னுந் தொழிற் சிறப்புப் பொருளுக்கு,அதனை முடிக்கவந்த உண்ணுதலென்னும் வினைப்

பொருளோடு பொருத்தமில்லாமையால், அம் மொழியில் அத் தொழிலையுடைய ஓர் உணவு என்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்பட்டது.

### [7. எண்ணலளவையாகுபெயர்]

'கால் நொந்தது' என்னுமிடத்துக் கால் என்பதின் இயற்பொருளாகிய எண்ணுச் சிறப்புப்பொருளுக்கு, அதனை முடிக்க வந்த நோதலென்னும் வினைப்பொருளோடு பொருத்தமில்லாமையால், அம் மொழியில் உடலின்கணுள்ள அவ்வளவைக் கொண்ட உறுப்பென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்பட்டது.

### [8. எடுத்தலளவையாகுபெயர்]

'துலாக்கோல்' என்னுமிடத்துத் துலாமென்பதின் இயற்பொருளாகிய நிறையளவைச் சிறப்புப்பொருளுக்கு, அதனை முடிக்கவந்த கோலென்னும் பெயர்ப்பொருளோடு பொருத்தமில்லாமையால், அச் சொல்லில் அந் நிறையளவைக் கருவியாகிய தராசென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்பட்டது.

### [9. முகத்தலளவையாகுபெயர்]

'நாழி யுடைந்தது' என்னுமிடத்து நாழி யென்பதின் இயற்பொருளாகிய முகத்தலளவைச் சிறப்புப்பொருளுக்கு, அதனை முடிக்கவந்த உடைதலென்னும் வினைப்பொருளோடு பொருத்த மில்லாமையால், அம் மொழியில் அவ் வளவைக் கொண்ட ஓர் கருவியென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்பட்டது.

### [10. நீட்டலளவையாகுபெயர்]

'கீழைத்தடி விளைந்தது' என்னுமிடத்துத் தடி யென்பதின் இயற்பொருளாகிய நீட்டலளவைச் சிறப்புப் பொருளுக்கு அதனை முடிக்கவந்த விளைதலென்னும் வினைப்பொருளோடு பொருத்தமில்லாமையால், அம் மொழியில் அதனு லளக்கப்படுங் கழனியென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்பட்டது.

## [11. சொல்லாகுபெயர்]

'இந்நூலுக் குரைசெய்தான்' என்னுமிடத்து உரை யென்பதின் இயற்பொருளாகியசொல்லென்னும் பொருளுக்கு, அதனைமுடிக்கவந்த செய்தலென்னும்வினைப்பொருளோடு பொருத்த மில்லாமையால், அம்மொழியிற் பொருளென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்பட்டது.

## [12. தானியாகுபெயர்]

'விளக்கு முரிந்தது,' என்னுமிடத்து விளக்கென்பதின் இயற்பொருளாகிய சுடரென்னுந் தானிப்பொருளுக்கு,அதனை முடிக்கவந்த முரிதலென்னும் வினைப்பொருளோடு பொருத்த மில்லாமையால்,அம் மொழியிலே அச் சுடர்க்குத் தானமாகிய தண்டென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்பட்டது.

## [13. கருவியாகுபெயர்]

'திருவாசக மோதினன்' என்னுமிடத்து வாசகமென்பதின் இயற்பொருளாகிய சொல்லென்னுங் கருவிப் பொருளுக்கு,அதனை முடிக்கவந்த ஓதலென்னும் வினைப்பொருளோடு பொருத்த மில்லாமையால், அம் மொழியில் அதன் காரியமாகிய நூலென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்பட்டது.

## [14. காரியவாகுபெயர்]

'என் அலங்காரஞ் சோரனாற் கவரப்பட்டது' என்னுமிடத்து அலங்காரமென்பதின் இயற்பொருளாகிய அணியென்னுங் காரியப்பொருளுக்கு, அதனை முடிக்கவந்த கவரப்படுதலென்னும் வினைப்பொருளோடு பொருத்தமில்லாமையால், அம் மொழியில் அதனை யுணர்த்துதற்குக் கருவியாகிய நூல் என்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்பட்டது.

## [15. கருத்தாவாகுபெயர்]

'திருவள்ளுவர்படித்தான்'என்னுமிடத்துத் திருவள்ளுவரென்பதின் இயற்பொருளாகிய வள்ளுவநாயனார் என்னுங்

கருத்தாப்பொருளுக்கு, அதனை முடிக்கவந்த படித்தலென்னும் வினைப்பொருளோடு பொருத்தமில்லாமையால், அம்மொழியில் அவராற் செய்யப்பட்ட காரியமாகிய நூலென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்பட்டது.

[16. உவமையாகுபெயர்]

'பாவை வந்தாள்' என்னுமிடத்துப் பாவையென்னுஞ் சொல்லின் இயற்பொருளாகிய சித்திரப்பாவையென்னும் உபமானப்பொருளுக்கு, அதனை முடிக்கவந்த வருதலென்னும் வினைப்பொருளோடு பொருத்தமில்லாமையால், அம் மொழியில் உபமேயப்பொருளாகிய பெண்மகளென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்பட்டது.

காரறுத்தது, என்பதிற் காரென்னுங் கருமைநிறத்தின் பெயர் மேகத்திற்காய் அம் மேகத்தின் பெயர் அது பெய்யும் பருவத்திற்காய், அப் பருவத்தின் பெயர் அப் பருவத்தில் விளையும் நெற்பயிருக்கானமையாலே **மும்மடியாகுபெயர்** எனப்படும்.

மருக்கொழுந்துநட்டான், திருவாசகமோதினான், என்பவைகளிற் கொழுந்தென்பது, மருவென்னும் அடையினையும்; வாசகமென்பது திருவென்னும் அடையினையும் அடுத்து வருதலால் இவை **அடையடுத்த வாகுபெயர்** எனப்படும்.

இவ்வாகுபெயர், விட்டவாகுபெயர், விடாதவாகுபெயர், விட்டும் விடாத வாகுபெயர், என மூவகைப்படும்.

'ஊர்வந்தது' என்பதில் ஊர் என்பது ஊரைவிட்டு அதிலுள்ள மனிதரை யுணர்த்தலாலே விட்டவாகுபெயராம்.

'ஆயிரங் குதிரையால் அவ்வூர் கொள்ளையிடப்பட்டது' என்புழிக் குதிரை என்னும் பெயர் தன் இயற்பொருளாகிய பரிமாவை விடாமல், அவைகளைச் செலுத்தும் சேவகரையு முணர்த்தலால் விடாதவாகுபெயராம்.

'அவனிவன்' என்பதில் அவனென்பதற்கு அக்காலத்து அவ்விடத்தோடு கூடியவனென்பதும், இவனென்பதற்கு இக்காலத்து இவ்விடத்தோடு கூடியவனென்பதும், பொருளாம். இவ்விடத்து இக்காலத்தோடு கூடியிருக்கிறவனிடத்தே அவ்விடத்து அக்காலத்தோடு கூடியிருத்தல் பொருந்தாமைபற்றி, அவனென்பது விசேடணத்தைவிட்டு விசேடியத்தை யுணர்த்தலால் விட்டும் விடாத வாகுபெயராம்.

**381. வேற்றுமையுருபுகள் விரிந்தும், மறைந்தும், வெவ்வேறு பல அடுக்கிவரினும், கலந்து பல அடுக்கிவரினும், முற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் வெவ்வேறு பலவடுக்கிவரினும், இறுதியில் ஒரு வினையாவது ஒரு பெயராவது வர அதனோடு அனைத்தும் முடியும்.**

**உ - ம்:**—சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினான்.

சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தந்தை.

அருளறமுடையான்.

இவை வேற்றுமையுருபுகள் விரிந்தும் மறைந்தும் வெவ்வேறு பலவடுக்கி யொரு வினையும் பெயருங் கொண்டன.

அரசன் பகைவனை வாளால் வெட்டினான்.

அரசன் வாள் கைக்கொண்டான்.

இவை வேற்றுமையுருபுகள் விரிந்தும் மறைந்துங் கலந்து பலவடுக்கி ஒருவினைகொண்டன.

ஆடினான் பாடினான் சாத்தன்.

கற்ற கேட்ட பெரியோர்.

இவை முற்றுகளும் பெயரெச்சங்களும் வெவ்வேறு பலவடுக்கி ஒருபெயர் கொண்டன.

கற்றுக்கேட்டுத் தெரிந்தார் - என வினையெச்சங்கள் வேறுபலவடுக்கி ஒருவினைகொண்டன.

**382. ஒரு தொடரினுள்ளே முன்னிற்கும் பெயர்களெல்லாம் உருபுமறைந்து நிற்கவும் இறுதியினிற்கும் பெயரொன்றும் உருபுவிரிந்து நிற்கவும் பெறும்.**

உ - ம்:—*அறம்பொரு ளின்பங்களைப் பெற்றான்.*

*சேரசோழ பாண்டியர்க்கு நட்பினன்.*

*தந்தைதாயி னீங்கினான்.*

**383. ஒரு தொடரினுள் ஒருபொருளுக்கே பல பெயர் வரவும், அப்பெயர்கள்தோறும் வேற்றுமையுருபுகள் விரிந்து வரவும் பெறும்.**

உ - ம்:— *'சங்கரனை யெண்குணனைச் சம்புவை நால் வேதனொரு—கங்கரனை நெஞ்சே கருது'.*

**384. உயர்திணையாண்பால் பெண்பால் இரண்டற்கும் பொதுவாகிய பெயர்களும் வினைகளும், அஃறிணை யாண் பெண் இரண்டற்கும் பொதுவாகிய பெயர்களும் வினைகளும், தொழின் முதலிய குறிப்பினால் ஒருபாலை யுணர்த்தும்.**

உ - ம்:—*ஆயிரமக்கள் போர்செய்தற்குப் போயினார்— என்னு மிடத்து, மக்களென்னும் உயர்திணையிருபாற் பொதுப் பெயரும் போயினா ரென்னும் பொது வினையும் போர்க்கு என்னுந் தொழிற் குறிப்பினாலே ஆண்பாலை யுணர்த்தின.*

*பெருந்தேவி மகவீன்ற கட்டிலினருகே நால்வர் மக்களிருந்தார் - என்னு மிடத்து, மக்களென்னும் உயர்திணையிருபாற் பொதுப்பெயரும் இருந்தாரென்னும் பொது வினையும் ஈனுதலென்னுந் தொழிற் குறிப்பினால் உயர்திணைப் பெண்பாலை யுணர்த்தின.*

இப் பெற்றம் உழவொழிந்தன-என்னுமிடத்துப் பெற்றமென்னும் அஃறிணை யாண்பெண் ணிரண்டற்கும் பொதுப்பெயரும், ஒழிந்தன வென்னும் பொதுவினையும் உழவென்னுந் தொழிற் குறிப்பால் ஆண்பாலை யுணர்த்தின.

இப் பெற்றங் கறத்தலொழிந்தன-என்னுமிடத்துப் பெற்றமென்னும் அஃறிணை ஆண்பெண் ணிரண்டற்கும் பொதுப்பெயரு மொழிந்தன வென்னும் பொதுவினையுங் கறத்தலென்னுந் தொழிற் குறிப்பாற் பசுவென்னும் பெண்பாலை யுணர்த்தின.

**385. திணைப் பொருளில் ஐயந் தோன்றியவிடத்து அவற்றின் பொதுச் சொல்லாலும், பாற் பொருளில் ஐயந் தோன்றிய விடத்து அவற்றின் பொதுச் சொல்லாலுங் கூறப்படும். அன்றியும், அவற்றுள், துணிந்த பொருண் மேலே சொற் சுருங்குதற்பொருட்டு அன்மையை வைத்துங் கூறுவர்.**

**உ-ம்:**—குற்றியோ மகனோ—எனத் திணைப் பொருளில் ஐயந் தோன்றிய விடத்துக் குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகின்ற வுரு என உரு என்னும் பொதுச் சொல்லினாலும்; ஆண்மகனோ பெண்மகளோ—எனப் பாற் பொருளில் ஐயந் தோன்றிய விடத்து ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்றுகின்றவர் எனத் தோன்றுகின்றவர் என்னும் பொதுச்சொல்லினாலும், சொல்லப்படும். துணிந்தபொருள் குற்றியெனின் மகனன்றெனவும், மகனெனிற் குற்றியல்லனெனவும், ஆண்மகனெனிற் பெண்மகளல்லனெனவும், பெண்மகளெனின் ஆண்மகனல்லளெனவுந் துணிந்த பொருண்மேல் அன்மையை வைத்துஞ் சொல்லுவரெனவறிக. மற்றவைகளு மிப்படியே.

**386. சொற்கள் தொடரு மிடத்து முடிக்கப்படுஞ் சொற்களோடு முடிக்குஞ் சொற்கள், திணை,**

**பால், இடம், காலம், வினா, விடை, மரபு, என்னும் இவ்வேழினாலும் பிறழாமல் தொடர்ந்து நிற்பன வழாநிலையும், பிறழ்ந்து நிற்பன வழுவும், பிறழ்ந்து நிற்கினும் பெரியோரால் அமைத்துக்கொள்ளப்பட்டு வருவன வழுவமைதியுமாம். இம்மூன்றனுள் வழு நீக்கப்படும்; ஏனையவிரண்டுங் கொள்ளப்படும்.**

(நீக்கப்படும் என்ற வழுவாவன.)

அவன்வந்தது—என்பது திணைவழு. அவன் வந்தாள், என்பது பால்வழு. யான் வந்தான்—என்பது இடவழு. நேற்று வருவான்—என்பது காலவழு. ஒருவிரல்காட்டிச் சிறிதோ பெரிதோ—என்பது வினாவழு. கடம்பூர்க்கு வழியாதென்றால், இடம்பூணியென்னாவின் கன்று—என்பது விடைவழு. ஆடுமேய்ப்பானைப் பாகன்—என்பது மரபுவழு.

(கொள்ளப்படும் என்ற வழாநிலையாவன.)

அவன்வந்தான் எனலும், அவள்வந்தாள் எனலும், நான் வந்தேன் எனலும், நேற்றுவந்தான் எனலும், (அளவறியாத ஒருபொருளைச்) சிறிதோ பெரிதோ எனலும், கடம்பூர்க்கு வழி யாதென்றால் இது, எனலுமாம்.

வழுவமைதி இனிக் கூறப்படுவனவற்றா லறிக.

**387. மேலே இறுதியிலே கூறப்பட்ட வினா, விடை, மரபு, என்னும் இம்மூன்றும் இன்னவெனமுன்னர் யாண்டுங் கூறப்படாமையால், இம்மூன்றும் இன்னவென இங்குக் கூறப்படும்.**

[வினா]

388. **அவற்றுள், வினாவாவது அறியலுறுவதை வெளிப்படுத்துவதாம்.**

389. அவ் வினு அறியாமையாலும், ஐயத்தினு லும் நிகழாநிற்கும்.

உ - ம்:—மாணுக்க னிச்சூத்திரத்துக்குப் பொருள் யாது? என்பது அறியாமைவினு. குற்றியோமகனோ? என்பது ஐயவினு.

அன்றியும், அறிதல், கொள்ளுதல், கொடை, ஏவல், முதலியவைகளாலும் வினு நிகழாநிற்கும்.

உ - ம்:—ஆசிரிய னிச்சூத்திரத்திற்குப் பொருள் யாது? என்பது அறிவினு.

வணிகரே ஆடையுண்டோ? என்பது கொள்ளுதல்வினு.

சாத்தற் காடையில்லையோ? என்பது கொடைவினு.

சாத்தா உண்டாயோ? என்பது ஏவல்வினு.

வினுநிகழ்தற்கு அறியாமையும் ஐயமுங் காரண மாதல் போல் அறிந்தது முதலியவை காரண மாகாமையால் இந் நான்கினுலும் நிகழும் வினுக்கள் வழுவமைதியாம்.

[விடை]

390. விடையாவது, வினுவியபொருளை அறி விப்பதாம்.

391. அது செவ்வன் விடையும், விடைப்பொ ருள் தருபவையும், என இருவகைப்படும்.

392. செவ்வன் விடையாவது, வினுவியதை இஃதெனை விளங்க அறிவிப்பதாம்.

உ - ம்:—உயிரெத்தன்மைத்து? என வினுவியவிடத்து- உணர்தற்றன்மைத்து என்பது செவ்வன்விடை.

393. விடைப் பொருள் தருபவைகள், விடை யாதற் பொருளாக வருபவைகளாம். அவை (1) உடன்

படுதலும், (2) மறுத்தலும்,* (3) வினவெதிர்வினவுதலும், (4) ஏவுதலும், (5) உற்றதுரைத்தலும், (6) உறுவதுகூறலும், (7) சொற்றொகுத்துக்கூறலும், என எழுவகைப்படும்.

உ - ம்:—சாத்தா இது செய்வாயோ வென வினவியவிடத்துச் (1) செய்வேன் என்பது உடன்படல். (2) செய்யேன் என்பது மறுத்தல். (3) செய்வேனோ என்பது வினவெதிர்வினவல். (4) நீ செய், என்பது ஏவுதல். (5) உடம்பு நொந்தது என்பது உற்றதுரைத்தல். (6) உடம்பு நோம் என்பது உறுவதுகூறல். (7) பயறுண்டோ வணிகிரே என்றவிடத்து உழுந்தல்லதில்லை என்பது சொற்றொகுத்துக் கூறல்.

## [மரபு]

394. யாதொருபொருளை யாதொருசொல்லால் யாதொருவழியால் மேலோர்கள் சொல்லி வழங்கிவந்தார்களோ அப் பொருளை அச் சொல்லால் அவ் வழியாற் சொல்லுதல் மரபாம்.

உ - ம்:— குதிரைக்குட்டி, யானைக்குட்டி, யானைக்கன்று, பசுவின் கன்று, மான்கன்று.

395. உயர்திணை எழுவாயைத் தொடர்ந்து எழுவாயாக நிற்கும் அஃறிணைப் பொருளாதியாறும், உயர்திணை முடிபைப் பெறும்

உ - ம்:—நம்பி பொன் பெரியன்.
நம்பி நாடு பெரியன்.
நம்பி வாழ்நாள் பெரியன்.
நம்பி மூக்குக் கூரியன்.
நம்பி குடிமை நல்லன்.
நம்பி நடை கடியன்.

---

* உடன்படல் மறுத்தல் இவ்விரண்டையும் செவ்வன் விடையிற் சேர்ப்பர் ஒரு சாரார்.

**396. இருதிணைப் பொருள்கள் கலந்து ஒரு தொடராய் வருமிடத்தும், ஆண் பெண் என்னும் இருபாற் பொருள்கள் கலந்து ஒரு தொடராய் வருமிடத்தும், வெவ்வேறு வினைகட்குரிய பலபொருள்கள் கலந்து ஒரு தொடராய் வருமிடத்தும், சிறப்பினாலும் மிகுதியினாலும் இழிவினாலும் ஒரு முடிபைப் பெறும்.**

உ - ம்: 'திங்களுஞ் சான்றோரு மொப்பர்' எனத் திணைப் பொருள்கள் கலந்து சிறப்பினால் உயர்திணை முடிபைப் பெற்றன.

'பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார் மூத்தோர் குழவியெனு மிவர்கள்' எனத் திணைப்பொருள்கள் கலந்து மிகுதியா லுயர்திணை முடிபைப் பெற்றன.

'எச்சிலார் தீண்டார் பசுப் பார்ப்பார் தீத்தெய்வ முச் சந்தலையோடிவை' எனத் திணைப் பொருள்கள் கலந்து மிகுதியால் அஃறிணை முடிபைப் பெற்றன.

'மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா' எனத் திணைப் பொருள்கள் கலந்து இழிவினால் அஃறிணை முடிபைப் பெற்றன.

'மனைவியுந் தானும் மடிந்தான்' எனப் பாற்பொருள்கள் கலந்து சிறப்பினால் ஆண்பால் முடிபைப் பெற்றன.

'கறியுஞ்சோறு முண்டான்' 'மாலையு முடியுங் கவித்தான்' என வேறு வினைப் பல பொருள்கள் கலந்து சிறப்பினால் ஒரு முடிபைப் பெற்றன.

மற்றவைகளு மிப்படியே.

**397. மகிழ்ச்சியினாலும், உயர்வினாலும், சிறப்பினாலும், கோபத்தினாலும், இழிவினாலும், ஒரு திணைப்**

பொருள் வேறு திணைப்பொருளாகவும், ஒரு பாற்பொருள் வேறு பாற் பொருளாகவும் கூறப்படும்.

உ - ம்:—ஓராவினை 'என்னம்மை வந்தாள்' என்பதில் உவப்பினால் அஃறிணை உயர்திணையாகக் கூறப்பட்டது.

'பசுங்கிளியார் தூது சென்றார்' என்பதில் உயர்வினால் அஃறிணை உயர்திணையாகக் கூறப்பட்டது.

'தம் பொருளென்ப தம் மக்கள்' என்பதிற் சிறப்பினால் உயர்திணை அஃறிணையாகக் கூறப்பட்டது.

பயனில்லாத சொற்களைக் கூறுகின்றவனை 'இந்நாய் குரைக்கின்றது' என்னுமிடத்துக் கோபத்தினால் உயர்திணை அஃறிணையாகக் கூறப்பட்டது.

'நாம் அரனுடைமை', என்பதில் இழிவினால் உயர்திணை அஃறிணையாகக் கூறப்பட்டது.

தன் புதல்வனை 'என்னம்மை வந்தாள்' என்பதில் உவப்பினால் ஆண்பால் பெண்பாலாகக் கூறப்பட்டது.

ஒருவனை 'அவர் வந்தார்' என்னுமிடத்து உயர்வினா லொருமைப்பால் பன்மைப்பாலாகக் கூறப்பட்டது.

'தேவன் மூவுலகுக்குந் தாய்' என்பதிற் சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாகக் கூறப்பட்டது.

'எனைத் துணையராயினு மென்னாந் தினைத்துணையுந் தேரான் பிறனில் புகல்' என்பதிற் கோபத்தினாலே பன்மைப்பால் ஒருமைப் பாலாகக் கூறப்பட்டது.

பெண்வழிச் செல்வானை 'இவன் பெண்' என்னுமிடத்து இழிவினால் ஆண்பால் பெண்பாலாகக் கூறப்பட்டது.

398. ஒருமைப்பாலிற் பன்மைச் சொல்லையும், பன்மைப்பாலில் ஒருமைச் சொல்லையும், ஓரோவிடத்துத் தழுவிக் கூறவும்படும்.

உ - ம்:—'வெயிலெல்லா மறைத்தது மேகம்', என்னுமிடத்து ஒருமைப்பாலிற் பன்மைச் சொல் சேர்த்துக் கூறப்பட்டது.

'இரண்டு கண்ணுஞ் சிவந்தது' என்னுமிடத்துப் பன்மைப்பாலில் ஒருமைச் சொல் சேர்த்துக் கூறப்பட்டது.

**399. ஓரிடத்திற் பிறவிடச் சொல்லும் ஓரோவிடத்துத் தழுவிக் கூறப்படும்.**

உ - ம்:—சாத்தன் தாய் இவை செய்வேனோ, என்னுமிடத்துத் தன்மையிலே படர்க்கைச்சொல் தழுவிக் கூறப்பட்டது.

'எம்பியை யீங்குப் பெற்றேனென்னைக் கரியதென்றூன்' என்னுமிடத்து முன்னிலையிலே படர்க்கைச் சொல் தழுவிக் கூறப்பட்டது.

**400. மூன்றுகாலங்களிலும் இடையருது நிகழுகின்ற தொழிலையுடைய பொருள்கள் நிகழ்காலத்தாற் சொல்லப்படும்.**

உ - ம்.—தெய்வ மிருக்கிறது. மலை நிற்கிறது.

**401. விரைவு, மிகுதி, தெளிவு, என்னும் இம்மூன்று காரணங்களாலும், இக் காரணங்க ளில்லாமலும், ஒருகாலச்சொல் வேறொருகாலச் சொல்லாற் கூறப்படும்.**

உ - ம்.—உண்ண விருப்பவனும், உண்கின்றவனும், விரைவிலே தம்மை உடன்கொண்டுபோக அழைப்பானுக்கு, 'உண்டேன் உண்டேன்' என்னு மிடத்து, விரைவினால் எதிர்காலமும் நிகழ்காலமும்இறந்த காலமாகச் சொல்லப்பட்டன.

'இக்காட்டிற் போனாற் கூறையிழந்தாய்' என்னுமிடத்து மிகுதியால் எதிர்கால மிறந்த காலமாகச் சொல்லப்பட்டது. கூறையிழத்தல் தப்பினும் தப்புமாதலாலே மிகுதியாயிற்று.

'எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழைபெய்தது' என்னுமிடத்துத் தெளிவினால் எதிர்கால மிறந்தகால மாகச் சொல்லப்பட்டது.

'யாம் பண்டுவிளையாடுவ திச்சோலை''யாம் பண்டு விளையாடுகிற திச்சோலை' இவைகளிலே அக் காரணங்க ளில்லாமலே இறந்தகாலம் எதிர்காலமும் நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது.

**402. வெவ்வேறு வினைகளுக்குரிய பலபொருள்களையுந் தழுவிநிற்கும் ஒரு பொதுச்சொல்லும் அவற்றின் சிறப்புச் சொற்களாக எண்ணி நிற்கும் பலசொற்களும் எல்லாவற்றிற்குமுரிய பொதுவினையைக் கொண்டு முடியும்.**

உ - ம்:—அணி யணிந்தார், அடிசி லயின்றார், எனவும்; கிரீடமுங் குண்டலமும் வீரக்கழலு மணிந்தார், சிலநாட் சோறுஞ் சிலநாண் மாவுஞ் சிலநாட் பாலுஞ் சிலநா ணீருஞ் சிலநாட் சருகு மயின்றார் எனவும் வரும்.

இவற்றுள், அணியென்பது, கவிக்கப்படுவது பூணப்படுவது கட்டப்படுவது என்பனவற்றிற் கெல்லாம் பொதுப் பெயரா மெனவும்; அணிதலென்பது, கவித்தல், முதலிவற்றிற் கெல்லாம் பொதுவினை யாமெனவும்; அடிசிலென்பது, உண்ணப்படுவது தின்னப்படுவது நக்கப்படுவது பருகப்படுவது என்பனவற்றிற் கெல்லாம் பொதுப் பெயாமெனவும்; அயிலுதலென்பது, உண்ணல் முதலியவற்றிற் கெல்லாம் பொது வினையா மெனவும் அறிக.

**403. சொற்கள் தொடருமிடத்து, வினையும், சார்பும், இனமும், இடமும், முதலியவைகளைப் பொருந்திக் குறித்த பொருளை விளக்கும் பல பொருளொரு சொற்கள் வாளா கூறப்படும். இவைகளைப்**

**பொருந்தியுங் குறித்த பொருளை விளக்காதவைகள் சிறப்புச்சொற் கூட்டிக் கூறப்படும்.**

**உ-ம்:—** மா என்பது, மாமரத்திற்கும், வண்டிற்கும், ஒருசார்விலங்கிற்கும், திருமாதிற்கும் பொதுவான பலபொரு ளொரு சொல். அச்சொல் அப் பொருள்களுள், 'மாபூத்தது' என்னுமிடத்து மரமென்பதை வினையால் விளக்கிற்று; 'மாவீழ்மலர்' என்னுமிடத்து வண்டென்பதைச் சார்பால் விளக்கிற்று; 'தேர் கரி மாக் காலாள்கள்' என்னுமிடத்துக் குதிரை யென்பதை இனத்தால் விளக்கிற்று; 'மாவாழ் மார்பன்' என்னுமிடத்துத் திருமாதென்பதை இடத்தால் விளக்கிற்று.

'மாவேறினன்,' என்னுமிடத்து மாவென்பது வினையோடு பொருந்தியும் குறித்த பொருளை விளக்காமையால் விளக்குதற் பொருட்டுப் பாய்மாவேறினன், மாமரமேறினன் எனப்-பாய் மரம் என்னுஞ் சிறப்புச்சொற்கள் கூட்டப்படும்.

404. **எழுத்தினியல்பு வேறுபடாமற் பொருள் வேறுபட்டுநிற்குந் தொடர்மொழிகள், குறிக்கப்பட்ட சொற்களி னிறுதியும் முதலுந் தோன்ற இசையறுத்துச் சொல்லும் வகையாலே தெளியப்படும்.**

**உ-ம்:—** செம்பொன்பதின்றொடி, நாகன்றேவன் போத்து, குன்றேறுமா, குறும்பரம்பு என்பனவற்றை, செம்-பொன்பதின்றொடி, செம்பொன்-பதின்றொடி; நாகன்-றேவன்-போத்து, நாகன்றே-வன்போத்து; குன்றேறு-மா, குன்-றேறுமா; குறும்-பரம்பு, குறும்ப-ரம்பு, எனக் குறித்த பொருள் விளங்கும்படி இசையறுத்து உச்சரித்துக் கூறுக.

405. **தேசமும், குலமும், குடியும், உடைமையும், பண்பும், தொழிலும், கல்வியும், முதலியவற்றைப் பற்றிவருகிற சிறப்புப்பெயரோடு இயற்பெயரை ஒரு**

**பொருள் ஒருசேர ஏற்குமாயின் அவ்வியற்பெயர் பின் வருதல் சிறந்த மரபாம்.**

| | |
|---|---|
| உ - ம்:—சோழியன் கொற்றன்— | தேசம். |
| பார்ப்பான் பாராயணன்— | சாதி. |
| பாண்டியன் குலசேகரன்— | குடி. |
| பொன்னன் பொறையன்— | உடைமை. |
| கரியன் கம்பன்— | பண்பு. |
| நாடகி நம்பி— | தொழில். |
| ஆசிரியனமிழ்தன்— | கல்வி. |

சிறுபான்மை இயற்பெயர், கொற்றன் சோழியன், பாராயணன் பார்ப்பான் என முன்வருதல் அவ்வளவு சிறப்பன்றெனக் கொள்க. மற்றவைகளு மிப்படியே.

406. **சொற்கள் தொடருமிடத்து, விரைவு, கோபம், உவகை, அச்சம், துன்பம், முதலிய பொருணிலைக ளிடத்தும், அசைநிலை இசைநிறைக ளிடத்தும், ஒருசொல் இரண்டு முதல் நான்களவும் அடுக்கி வரும்.**

| | |
|---|---|
| உ - ம்:—நீ போபோ— | விரைவு. |
| நீ எறி யெறி— | கோபம். |
| நீ பொலிக பொலிக பொலிக— | உவகை. |
| தீத்தீத்தீயகல்— | அச்சம். |
| யான் வாழேன் வாழேன் வாழேன்— | துன்பம். |
| கூறினானன்றேயன்றே— | அசைநிலை. |
| பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ— | இசைநிறை. |

407. **பிரியாது ஒலித்து நின்று பொருள்படும் இரட்டைச் சொற்கள், தொடர்மொழியில் ஓரோவழி வரப்பெறும்.**

உ - ம்:—சலசலவென மழை பெய்தது.
குறுகுறுவென நடந்துவரும்.
கலகலவென் றொலிக்கும்.

408. இருசொற்கள் ஒரு பொருண்மேல்வந்து செவிக்கின்பம்பட நின்று தொடர்ந்துவரவும் பெறும்.

உ - ம்:—ஞாயிறு.
புனிற்றிளங்கன்று.
நாகிளங்கமுகு.
உயர்ந்தோங்குபெருவரை.
குழிந்தாழ்ந்தகண்.

409. இவ்வளவென்று அறியப்படும் பொருள்களும், எக்காலத்தும் எவ்விடத்துமில்லாத பொருள்களும், முடிக்குஞ் சொற்களோடு இயையு மிடத்து மூற்றும்மை பெறும்.

உ - ம்:—தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார்.
இறைவர்க்குக் கண்மூன்றும் முச்சுடர்.
கண்ணிரண்டுஞ் சிவந்தன.
விரல்களைந்தும் நொந்தன.
முயற்கோ டாகாயப்பூ வென்று மில்லை.
ஒளிமுன் னிரு ளெங்கு மில்லை.

உலகிலில்லாப் பொருட்குக் காலப்பெயரும் இடப்பெயருங் கூட்டப்படும்.

410. செயப்படு பொருள், கருவி, இடம், செயல், காலம், என்னு மிவைகளை வினைமுதல் போல வைத்து வினைமுதல் வினையைப் புணர்த்தி ஓரோவிடத்துக் கூறவும்படும்.

உ - ம்.—இம்மாடு யான் கொண்டது, } செயப்படு
இச்சோறு யான் கொடுத்தது } பொருள்.
இவ்வெழுத்தாணி யானெழுதியது— கருவி.
இவ்வீடு யானிருந்தது— இடம்.
இத்தொழில் யான் செய்தது— தொழில்.
இந்நாள் யான் பிறந்தது— காலம்.

**411. பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் என்னும் இவ்வாறும் பொருள்களுக்குமேல் அடைமொழிகளாகவரும். இவ்வடைமொழிகள் சொல்லக்கருதிய பொருட்கு இனமாயுள்ள பொருளை விலக்கிக் கருதிய பொருளை யுணர்த்தும். இவற்றை இனச்சுட்டுள்ள அடையென்பர். சிறுபான்மை இவ்வடைமொழிகள் இனமில்லவைகளுக்கும் வரும். அவற்றை இனச்சுட்டில்லா அடையென்பர்.**

உ - ம்.—[இனச்சுட்டுள்ளவடை.]

| | |
|---|---|
| நெய்க்குடம்— | பொருள். |
| குளநெல்— | இடம். |
| கார்த்திகைவிளக்கு— | காலம். |
| பூமரம்— | சினை. |
| செந்தாமரை— | பண்பு. |
| ஆடுபாம்பு— | தொழில். |

[இனச்சுட்டில்லாவடை.]

| | |
|---|---|
| உப்பளம்— | பொருள். |
| ஊர்மன்று— | இடம். |
| நாளரும்பு— | காலம். |
| இலைமரம்— | சினை. |
| செம்போத்து— | பண்பு. |
| தோய்தயிர்— | தொழில். |

**412. அடைமொழிகள் சிறுபான்மை இனத்தையும் இனமல்லதையுந் தரும்.**

உ - ம்:—மேலைச் சேரிச் சேவல் அலைத்தது - என்னுமிடத்துக் கீழைச்சேரிச் சேவல் அலைப்புண்டதென இனத்தைத் தந்ததுமல்லாமல், அச் சேவலையுடையார்க்கு வெற்றியாயிற்றென இனமல்லதையுந் தந்தது.

**413. ஓரடையும் ஒருசினையும் ஒருமுதலும் ஒன்றையொன்று விசேடித்து வரவும், ஈரடை முதலையாவது சினையையாவது விசேடித்து வரவும், அடையடுத்துவரும் பல சினைகள் ஒரு முதலை விசேடித்துவரவும், பெறும்.**

உ-ம்:—வேற்கைமுருகன் / செங்கானாரை — அடையும் சினையும் முதலும் ஒன்றையொன்று விசேடித்து வந்தன.

சிறுகருங்காக்கை—ஈரடை முதலை விசேடித்தன

சிறுகருங்கண்— ஈரடை சினையை விசேடித்தன

பெருந்தோட்சிற்றிடைப் / பேரமர்க்கட்பேதை, — அடையடுத்து வந்த பல சினைகள் ஒரு முதலை விசேடித்தன.

**414. குறிப்பினாற் பொருளுணரப்படும் மொழிகள் தொடரப்பட்டு ஓரோவிடத்து வரவும் பெறும்.**

உ-ம்:— குழைகொண்டு கோழியெறியும் வாழ்க்கையர்—என்னுமிடத்துப் பெருஞ்செல்வத்தின ரென்பது குறிப்பால் உணரப்பட்ட பொருளாம்.

கல்லைக் கடித்து நன்றாய்ச் சமைத்தாய், என்னுமிடத்து நன்றாய்ச் சமைத்திலை யென்பது குறிப்பா லுணரப்பட்ட பொருளாம்.

**415. தொடர்மொழியிடத்துச் சிறுபான்மை ஒரு சொல்லாவது, இரண்டு முதலிய பல சொற்களாவது, குறைந்து நிற்கவும் பெறும். ஒருசொல் குறைந்து நின்றதைச் சொல்லெச்சம் எனவும், பல சொல் குறைந்து நின்றதை இசையெச்சம் எனவும் கூறுவர்.**

உ-ம்:— 'பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா—ரிறைவனடி சேரா தவர்' என்னுமிடத்துச் சேர்ந்தார் பிறவிப் பெருங்கடனீந்துவர், என ஒருசொல் வருவிக்கப்படுதல் சொல்லெச்சம்.

'அந்தாமரை யன்னமே நின்னையா னகன் றுற்றவனே' என்னுமிடத்து 'என்னுயிரினுஞ் சிறந்த நின்னை' எனப் பல சொற்கள் வருவிக்கப்படுதல் இசையெச்சம்.

416. **அஃறிணைப் பொருள்களுள் கேளாதவைகள் - கேட்பவைகளாகவும், சொல்லாதவைகள்-சொல்பவைகளாகவும், நடவாதவைகள்-நடப்பவைகளாகவும், செய்யாதவைகள் - செய்பவைகளாகவும் சொல்லவும்படும்.**

உ - ம்:—'இரவெல்லா நின்று யீர்ங்கதிர்த் திங்காள்' 'பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்கும்' 'இவ்வழி யவ்வூர்க்குப் போகும்' 'தன்னெஞ்சே தன்னைச் சுடும்.'

417. **ஒரு பொருளினது பண்பு முதலியவற்றை அப் பொருளினது உடைமையாகிய மற்றொரு பொருண்மேல் வைத்துக் கூறவும்படும்.**

உ - ம்:—செங்கோல், வீரக்கழல். இவ்வுதாரணங்களில், உடையானுடைய செம்மையும், வீரமும், அவனுடைமையாகிய கோலின்மேலும், கழலின்மேலும், வைத்துக் கூறப்படுதல் காண்க.

418. **சொற்கடோறும் இதனிதனிலக்கணம் இவ்வாறென்று சொல்லப்புகுந்தால் மிகவும் விரியும். ஆதலாலே, மேற் சொல்லப்பட்டவற்றின் இலக்கணங்களை ஏதுவாகக் கொண்டு சொல்லப்படாதவற்றின் இலக்கணங்களையும் ஆராய்ந் தறிந்துகொள்க.**

---

Commercial Press, Madras, S. E.

# இயற்கை விளக்க வாசகங்கள்.

## திவான்பஹதூர் வி. கிருஷ்ணமாசாரியார் இயற்றியவை.

சிறுவயதிலேயே 'ஸைன்ஸ்' என்னும் இயற்கை ஞானத்தைப் பிள்ளைகளுக்குச் சிறிதுசிறிதாகப் புகட்டவேண்டுமென்பது இப்பொழுது உயர்ந்த கல்வியதிகாரிகள் ஒவ்வொருவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பல வருஷங்களுக்கு முன்னேயே இவ்வுண்மையை அறிந்து காலஞ்சென்ற திவான்பஹதூர்—கிருஷ்ணமாசாரியார் அவர்கள் 'இயற்கை விளக்க வாசகங்கள்' என்ற தொகுதியில் பல பாட புத்தகங்களை எழுதி வெளியிட்டார்கள். அவை கல்வியதிகாரிகளாலும் உபாத்திமார்களாலும் மிகவும் பாராட்டப்பட்டன. ஆனால் அவை எழுதப்பட்ட காலத்துக்கும் தற்காலத்துக்கும் இடையே, இயற்கை ஞானமும் போதனை முறையும் மிக விருத்தியடைந்துள்ள படியால், அவ் விருத்தியை யனுசரித்து அவை யாவும் திருத்தி மாற்றி விரித்துப் புதுமுறையில் வெளியிடப்பட்டுள்ளன.

| அவை வருமாறு:— | | | | | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | ... | ... | ... | ... | 2 | 0 |
| இரண்டாம் புத்தகம் | | ... | ... | ... | 5 | 0 |
| மூன்றாம் ,, | ... | ... | ... | ... | 5 | 0 |
| நான்காம் ,, | ... | ... | ... | ... | 5 | 0 |
| ஐந்தாம் ,, | ... | ... | ... | ... | 8 | 0 |

## திவான்பஹதூர் வி. கிருஷ்ணமாசாரியார் இயற்றிய

## சிறுவர்களுக்காகும் நீதிகதா கிருதிகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 3-வது, 4-வது வகுப்புகளுக்கு | ... | ... | 4 | 0 |

'ஈஸாப் கதைகள்' என்று நீதிபுகட்டும் பல சிறு கதைகள் வழங்கிவருவதைப் பலரும் அறிந்திருக்கலாம். பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு அவை மிகவும் ஏற்றவை. ஆதலால் காலஞ்சென்ற திவான் பஹதூர் வி. கிருஷ்ணமாசாரியார் அவர்கள், அக்கதைகளில் சிலவற்றை, சிறுவர்கள் இசையுடன் பாடுவதற்கேற்ற கீர்த்தனைகளாக, எளிய நடையில் இயற்றியுள்ளார். அவை, இப்பொழுது நல்ல கடிதத்தில் நீதிகதா கிருதிகள் என்னும் புத்தகமாகப் பதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கதையும் ஓர் ஓர் அழகிய படத்துடன் பதிக்கப்பெற்றுள்ளது.

# தமிழ் இலக்கியத் திரட்டு.

## திவான்பஹதூர் ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்.

(எப். ஆர். எச். எஸ்.—லண்டன்.) (எம். ஆர். ஏ. எஸ்.-லண்டன்.)

தொகுத்தது.

நம் முன்னோர் தேடிவைத்த எல்லையற்ற செந்தமிழ்ச் செல்வக் களஞ்சியத்தின் உட்புகுந்து உள்ளதை அனுபவிக்க விரும்பும் மாணவர்க்கு இது பொக்கிஷத் திறவுகோலாகும்.

இத்தொகுதியில் இதுகாறும் இரண்டு பகுதிகள் வெளிவந்துள்ளன. இவற்றுள், பூண்டி அரங்கநாத முதலியார், எம். ஏ., ஆறுமுக நாவலர், வேதநாயகம் பிள்ளை, தி. செல்வக்கேசவராய முதலியார், எம்.ஏ., திவான்பஹதூர் ச. பவானந்தம் பிள்ளை, வித்துவான் தாண்டவராய முதலியார், பி. விஜயரங்க முதலியார், எப். எம். யு., திவான்பஹதூர் வி. கிருஷ்ணமாசாரியார், பி. வி. ராமசாமி ராஜு, பி.ஏ. முதலிய பிரபல வித்துவசிகாமணிகள் எழுதிய பிற்கால இலக்கியங்களினின்றும், நளவெண்பா, குசேலோபாக்கியானம், கபிலரகவல், அரிச்சந்திரபுராணம, தாயுமானவர், பட்டினத்தார், தேவாரம், நாலாயிரத் திவ்விய பிரபந்தம், அருட்பா, வில்லிபாரதம், கம்பராமாயணம், திருக்குறள், நாலடி, நான்மணி, ஏலாதி, திரிகடுகம், நீதிநெறிவிளக்கம் முதலிய முற்கால இலக்கியங்களினின்றும், இனிமையும் அருமையும் சுலபமுமான பல பகுதிகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

பகுதி I ... ... ... ... அணா 12.

(இதில், இராஜபக்தி, அறிவுவளர்ச்சி, சீதாகலியாணம், சகுந்தலை முதலிய 16 வசன பாடங்களும், 8 செய்யுட் பாடங்களும் உள்ளன.)

பகுதி II ... ... ... ... அணா 8.

(இதில், கல்வியின் பெருமை, மந்தரையின் சூழ்ச்சி, போலி வைத்தியர் முதலிய 15 வசனபாடங்களும் 8 செய்யுட் பாடங்களும் உள்ளன.)

**குறிப்பு:** இவை நான்காவது ஐந்தாவது ப்ாரங்களுக்கு ஏற்றவை.

# தமிழ் இலக்கணம்.

முதற் புஸ்தகம் (ஐந்தாம் வகுப்புக்கு ஏற்றது.) அணா 3.
இரண்டாம் புஸ்தகம் (ஆறும் வகுப்புக்கு ஏற்றது.) ,, 5.
வித்வான் மகாலிங்கையர் அவர்கள் இயற்றிய இலக்கணம் ,, 8.
வித்வான் திருத்தணிகை விசாகப் பெருமாளையரவர்கள்
இயற்றிய இலக்கணம் ... ... ... அணா 12.
நன்னூல் (புதியபதிப்பு, இராமானுஜகவிராயர் உரைக் குறிப்புடன்) ... ... ... ... ... ரூ. 2.